www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 16 ஒக்ரோபர் 2009 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 126



# அரசாங்கத்தின் அடுத்த இலக்கு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அடுத்த இலக்கு எதிர்வரவிருக்கும் பிரதான இரண்டு தேர்தல்களாகும். பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களில் அமோக வெற்றி பெற்று தமது ஆட்சியதிகாரத்தை நீடிப்பதே அந்த இலக்கின் அடிப்படையாகும். அதனை நோக்கிய பயணத்தின் பாதையிலேயே அண்மைய தென்மாகாண சபைத் தேர்தல் உட்பட எட்டு மாகாணசபைகளிலும் வெற்றிகரமாக வெற்றிக் கொடி நாட்டி மாகாணசபை ஆட்சி அமைத்தார்கள். அவ் வெற்றிகளுக்கெல்லாம் யுத்தம், அதன் வெற்றி, பயங்கரவாத அழிப்பு என்பன அடிப்படையாக அமைந்தன.

இவ்வெற்றிக்களிப்பின் வேகம் தணிவதற்குள், ஏனைய பொருளாதாரப் பிரச்சினைகள் மேற்கிளம்புவதற்கு முன்பாக பாராளுமன்ற ஜனாதிபதித் தேர்தல்களை நடாத்தி தமது குடும்ப ஆட்சி அதிகாரத்தின் நீடிப்பை உறுதி செய்து கொள்வதே மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாகும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியும் பாராளுமன்றத்தில் ஆட்சிப் பக்கத்தில் இருந்து கிடைக்கும் சுகங்களும் இலகுவில் இழக்கக் கூடியவைகள் அல்ல. அவை கிடைப்பது மிகவும் கஷ்டமானவையாகும். அவ்வாறு கிடைத்தவைகளை தொடர்ந்து தக்க வைத்து நீடிப்பதற்கு பல்வேறு வழிகளில் செயல்பட வேண்டியே இருக்கும். இதற்கு நேர்மையான அரசியல் நேர்வழி இருக்க முடியாது. எந்தெந்த குறுக்கு வழிகள் பயன்படுத்த முடியுமோ அவற்றையெல்லாம் கச்சிதமாகப் பயன்படுத்துவதே முதலாளித்துவப் பாராளுமன்ற முறைமையாகும்.

இன்று ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சி என்பது எவ்வளவிற்கு ஜனநாயகத் தன்மை கொண்டதென அமைச்சர்கள் விளக்கமளித்தாலும் அது ஒரு குடும்ப ஆட்சி தான். அதனை உறுப்படுத்திக் கொள்வதற்கு ஏற்றதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியாகும். அது ஏறத்தாள ஒருவகை மன்னராட்சித் தன்மையுடன் தொடர்புபடுவதாகும். அதனாலேயே அப்பதவிக்கு வந்த எவரும் அதனை விட்டிறக்கவோ மாற்றியமைக்கவோ முன்வந்ததில்லை.

இத்தகைய ஜனாதிபதியின் ஆயுட்காலம் முடிவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன. 2011ம் ஆண்டின் இறுதியிலேயே முறையான ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால் முன் கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடாத்த எத்தனிக்கப்படுவது ஏன் என்பது பலருக்குப் புரியக் கூடியதாகும். அதாவது தற்போது மிதந்து கொண்டிருக்கும் யுத்தவெற்றி புலிகள் அழிப்பு என்பவைவற்றின் மத்தியில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது இலகுவானது. அதுமட்டுமன்றி அதிகரித்த வீதத்தில் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். அவர்களது எதிர்பார்ப்பில் 65வீத வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெறவே நிற்கிறார்கள். அதே வேளை இரண்டு வருடங்களை வீணாக இழக்க வேண்டி வருமே என்னும் வருத்தமும் இருக்கிறது. அதனை நிவர்த்தி செய்வதற்கு ஏதுவாக அரசியலமைப்பில் ஏதாவது இடமிருக்கிறதா எனச் சட்டநிபுணர்கள் தீவிரமாக ஆராய்ந்தும் வருகிறார்கள். இத்தகைய ஒரு முயற்சி ஏற்கனவே சந்திரிகா அம்மையார் காலத்திலும் சிந்திக்கப்பட்டு கைவிடப்பட்டதாகும். ஆனால் அதனை தாண்டிச் சென்று அதிகாரத்தின் வலுவாலும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள நீதி சட்டத்துறையாலும் ஏதாவது செய்ய முற்படலாம் என்றே அரசியல் நோக்கர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இன்றைய மகிந்த சிந்தனை ஆட்சியின் நான்கு சகோதரர்கள் அடங்கிய குடும்ப ஆட்சியே யாவற்றையும் தீர்மானிப்பதாக உள்ளது. அத்துடன் இவர்களின் பிள்ளைகளும் ஒவ்வொரு இடங்களிலும் தங்களை முன்னிலைப்படுத்தி வருகிறார்கள். இதனாலேயே அண்மைய தென் மாகாணசபைத் தேர்தலின் போது ஒரு அமைச்சர் உரையாற்றுகையில் போது அடுத்த 25 வருடங்களுக்கு ராஜபக்ஷஆட்சி தொடரும் என்று கூறியதாகச் செய்திகள் வந்தன. இப்பேச்சின் அடிப்படை எத்தகையது என்பதை நோக்கினால் அது குடும்ப ஆட்சியின் தொடர்ச்சியையே சுட்டிக்காட்டுகிறது. அத்தகைய தொடர்ச்சி




கருதிய செல்வமும் செல்வாக்கும் தாராளமாகத் தேடப்பட்டும் வருகின்றன என்பது காணக் கூடியதேயாகும்.

"மரம் அமைதியை விரும்பினாலும் காற்று அதனை விடுவதில்லை" என்பது போன்று மகிந்த சிந்தனை அரசாங்கமும் ஜனாதிபதியும் ஆயுட்காலப் பதவியையும் அடுத்த தலைமுறை ஆட்சியையும் விரும்பலாம். ஆனால் ஏற்கனவே மூடி மறைக்கப்பட்டு அடக்கி வைக்கப்பட்டுவரும் பூதாகரமான பொருளாதார அரசியல் சமூகப் பிரச்சினைகள் சும்மா இருக்க விடப்போவதில்லை.

2ம் பக்கம் →

# கருணாநிதியின் பம்மாத்து நாடகம்





முதலமைச்சர் கருணாநிதி கதை வசனம் எழுதிய இலங்கைத் தமிழர் பற்றிய நாடகம் அண்மையில் மேடை யேற்றப்பட்டது. அதுவே தமிழ் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவின் இலங்கைப் பயணமாகும். தனது மகள் கனிமொழியையும் அதில் நடிக்க வைத்து இறுதிக் காட்சியில் தானே சக்கர நாற்காலியில் சென்னை விமான நிலையத்தில் வந்து நடித்தும் கொண்டார். இது இலங்கைத் தமிழர்களுக்காக நடாத்தப்பட்டதல்ல. அடுத்து வரப்போகும் சட்டசபைத் தேர்தல் வெற்றிக்காகவும் தனது பிள்ளைகளின் ஆட்சி அதிகாரத்திற்காகவும் நடாத்தப்பட்டதாகும், ஒரே நேரத்தில் தமிழக மக்களையும் இலங்கைத் தமிழர்களையும் ஏமாற்றிய காட்சிகளையே காண முடிந்தது.

கருணாநிதி என்றுமே இலங்கைத் தமிழர்களுக்காக நேர்மையாக நடந்து கொண்டது கிடையாது. இந்திய மத்திய அரசின் முடிவுகளை சிரமேற்கொண்டு தனது இருப்பையும் எதிர்காலத்தையும் கணிப்பிற் கொண்டே குள்ளநரி அரசியல் நடாத்தி வந்த ஒருவராவார். தமிழக மக்களிடம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறையும் அனுதாபமும் உண்டு. அதனை ஒரு நிதானமான தொன்றாக முன்னெடுக்காது வெறுமனே தமிழ் இனமொழி உணர்வுக்கு உட்பட்டதாக்கி தத்தமது சட்டசபை அரசியலுக்கும் சினிமா வியாபாரத்திற்கும் பயன்படுத்துவது தான் வழமையாக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கும் அப்பால் வர்க்க அடிப்படையிலும் இன ஒடுக்குமுறையை எதிர்த்த நிலையிலும் மாக்சிச லெனினிச இடதுசாரி இயக்கங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக மக்களின் ஆதரவைத் திரட்டி வெகுசன இயக்கங்களை முன்னெடுத்தும் வருகின்றன. அது பற்றி பேசுவார் இல்லை.

கருணாநிதி அண்மையில் இலங்கைத் தமிழர்களைப் பார்த்து வருவதற்கு அனுப்பிய கனிமொழி திருமாவளவன் உள்ளிட்ட தூதுக்குழு "எல்லாம் நல்லபடியாக இருப்பதாகவே" கூறிச்சென்றனர். கருணாநிதிக்கு அறிக்கை கொடுத்த போது அதனை கருணாநிதி பார்த்த பின் பிரச்சினையைப் பெரிதுபடுத்தாதது முகாம் மக்களை மீளக் குடியேற்ற நாம் உதவ வேண்டும் என்றே கூறி உள்ளார். ஏற்கனவே இந்து என்.ராம் வந்து முகாம்களைப் பார்த்து சிறப்பாக இருக்கிறது என நற்சாட்சிப் பத்திரம் வழங்கி மகிந்தசிந்தனை அரசாங்கத்திற்கு துதிபாடிச் சென்றார். அதன் தொடர்ச்சியை கருணாநிதி அனுப்பிய பாராளுமன்ற குழுவும் கச்சிதமாகச் செய்துள்ளது.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது என்பது போன்று இந்திய பிராந்திய மேலாதிக்க வல்லரசும் அதன் எடுபிடியாகித் தமது வர்க்க வளர்ச்சியை உச்சமாகக் கொண்ட கருணாநிதி கும்பலும் இலங்கைத் தமிழர்களை வைத்து விளையாட்டுக் காட்டுகிறார்கள். அதற்குள் அவர்களது நலன்களுக்கான அரசியல் உண்டு. ஆனால் ஈழத் தமிழர் நாளாந்தம் முகாம்களில் சித்திரவதைப்பட்டு செத்துக் கொண்டிருக்கிறார்கள். இனி மேலாவது இலங்கைத் தமிழர் இந்தியாவையும் தமிழ் நாட்டுப் பம்மாத்து அரசியல் தலைவர்களையும் நம்பி ஏமாறமாட்டார்கள் என்பது உண்மையாக இருக்கட்டும்.

# பழைய கதையாகிவிட்ட சம்பள உயர்வு



மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினையில் ஐந்நூறு ரூபாவில் ஐந்து சதம் தானும் குறைத்து ஒப்பந்தம் செய்வதில்லை என உச்சிமலையில் நின்று கொக்கரித்தவர்கள் மலையகத் தொழிற்சங்கத் தலைமைகள். முக்கியமாக முதலாளிகளுடன் ஒப்பந்தத்தில் ஒப்பமிடும் மூன்று தொழிற்சங்கத் தலைமைகள் இறுதியில் அடிப்படை நாட்சம்பளம் 285 ரூபாவிற்கு தொழிலாளர்களை காட்டிக் கொடுத்து நம்ப முடியாத முதுகுக்குத்தையும் குத்திக் கொண்டனர். சம்பள உயர்வு நாடகத்தை வழமை போன்று தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஆரம்பித்து முதலாளிகளுக்குச் சாதகமாக முடித்துக் கொண்டார்கள். [illegible] தொழிலாளர்களை [illegible] 500 ரூபா சம்பள உயர்வில் தொழிலாளர்களின் கழுத்தை அறுத்தனர். தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டனர். வேதாளம் மீண்டும் முருங்கையில் என்ற கதையாகிக் கொண்டது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை இவ்வாறு காட்டிக் கொடுக்கப்பட்டு இ.தொ.கா விற்கும் யூ.என்.பிக்கும் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் பின்னடைவைக் கொண்டு வராதா? என்ற சிறு கேள்வி [illegible]. இது பற்றி ஒரு இ.தொ.கா தலைவரிடம் கேட்ட போது அவர் கூறியபதில் கேள்வி கேட்டவரைத் தூக்கிவாரிப் போட்டது. "தோட்டக்காட்டான் நம்ம வோட்டை யாரும் உடைக்க முடியும். கொடுக்கிறதைக் கொடுத்து வாங்கிறதை வாங்கித்து நாலு கதை பேசிவிட்டா நம் சனம் நமக்குத்தானே வோட்டுப் போடும்" என்று தமது வாக்குப் பெறும் உத்தியைக் கூறினாராம். அதில் உண்மை இல்லை என்று யாரும் கூற முடியாது. ஆனால் அதனையும் மீறி மக்களை அணிதிரட்டி அரசியல் மயப்படுத்த வேண்டும். கடினமான பணியாயினும் அதை விட வேறு மார்க்கம் இல்லை.

இந்த உத்தியும் ஏமாற்றும் அதிக காலம் மலையகத் தொழிலாளர்களிடம் செல்லுபடியாகாது என்பதை அவர்கள் நடைமுறையில் அறிய அதிக காலம் தேவைப்படாது என்பதே அங்கு வளர்ந்து வரும் சூழலின் உண்மையாகும்.

2ம் பக்கம் →

புதிய பூமி 02 ஒக்ரோபர் 2009



## விசாரணையும் விடுதலையும் எப்போது!

நமது கட்சித் தோழர்களான ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன் நி.பிரதீபன் ஆகியோர் உட்பட அறுநூறுக்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட நாட்களாக சிறைச் சாலைகளில் இருந்து வருகின்றனர். அதே வேளை சிங்கள அரசியல் கைதிகளும் இருந்து வருகின்றனர். நான்கு ஐந்து வருடங்களுக்குமேல் இருந்து வரும் இவ் அரசியல் கைதிகளுக்கு விசாரணையும் இல்லை விடுதலையும் இல்லை என இருந்து வருகின்றனர். இக்கைதிகள் தம்மை விசாரணை செய்ய வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை வைத்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் விலைவாக தற்போது சிறப்பு நீதிமன்றம் அமைத்து விசாரிக்க இருப்பதாக நீதிஅமைச்சு வட்டாரங்களில் போசப்படுகிறது. இதுபற்றி அண்மையில் ஊடகவியலார் சந்திப்பும் இடம் பெற்றது. எவ்வாறாயினும் நமது வற்புறுத்தல் கால தாமதம் இன்றி அரசியல் கைதிகள் உடன் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

## உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டம்

## கல்வியும் பாடத்திட்டமும் உலக வங்கியின் கைகளில்

இம்மாதம் 5ஆம் திகதி உலக ஆசிரிய தினம் நினைவு கூரப்பட்டது. இலங்கையின் கல்வித்தரம் பாடத்திட்டம் நடைமுறை ரீதியான கல்வி வளங்கள், பாடசாலைகளுக்கிடையிலான சமச்சீரற்ற நிலை போன்றன இவ்வேளை நினைவு கூரத்தக்கதாகும். முக்கியமாக ஆசிரியர்களின் பன்முகப்பட்ட நிலை கவனத்திற்குரியதாகிறது. கல்வித்துறையின் முது கெலும்பாக விளங்கி வரும் ஆசிரியர்கள் இன்றைய சூழலில் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் ஏராளம் அவற்றை ஆசிரியர் தொழிற்த்துறை இன்னும் அரசாங்கத்திடமே இருந்து வருகிறது. அதேவேளை இலவசக் கல்வி வழங்கப்படுவதாகவே கூறப்பட்டும் வருகிறது. இதனை மாற்றி தனியார் கல்வி த்துறையாக்குவதற்கு உலகமயமா தல் நிகழ்ச்சி நிரல் சதா முய ன்று கொண்டே வருகி றது. அவ்வாறு உடன டி யாகச் செய்வது கடினம் என்ப தால் படி ப்படியாகக் கல்வி யை த தனியார் மயமாக்க நாக்க கா ன வேலைகள் இடம் பெறவே செய் கின்றன. உலக வங்கி நமது நாட்டின் கல்வி த்தறையில் சீரழிவுகளைக் கொண்டுவர ஆலோ சனைகள் வழங்கி வருகிறது. பாடத்திட்டம் தொட க்கம் சகல கொள்கை வகுப்பிலும் உலக வங்கியின் தலையீடு இருக்கிறது.

இலங்கையில் 2 லட்சத்து ε ஆயிரத்து 77 ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களில் 72,126 பேர் பட்டதாரிகள். ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 99 பேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஏனையோர் 8 ஆயிரத்து 652 பேராவர். இவர்களில் ஒரு ஆசிரியரைக் கொண்ட பாடசாலைகள் 140, 2 ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலை 245, 3-9 ஆசிரியர்களுடைய பாடசாலைகள் 2,761.10-25 ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலைகள் 4,127, 26-50 ஆசிரியர் களையுடைய பாடசாலைகள் 1,563, 51-100 ஆசிரிய ர்களையுடைய பாடசாலைகள் 658,101 ஆசிரியர்க ளுக்கு மேல் உள்ள பாடசாலைகள் 184 ஆகும். மேற்படி ஆசிரியர்களினதும் பாடசாலைகளினதும் தொகை விபரத்தைப் பார்த்தால் இலங்கையின் கல்வித்தரமும் பாடசாலைகளுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகளும் இலகுவில் விளங்கக் கூடியதாகும். இவை ஒரு பொதுவான நோக்கேயாகினும் இதற் குள் வர்க்க இன சாதிய பால் ரீதியிலான பாகுபா டுகள் புறக்கணிப்புக்கள் நாடு பூராவும் கல்வித்து றையில் இருந்து வருகின்றன என்பது வெளிவ ராத சமாச்சாரங்களாகும். ஒரு சமூக அமைப்பும் அதனைக் கட்டிக்காக்கும் ஆட்சி அதிகார மும் தான் இலங்கை யின் கல்விக் கொள்கை யைத் தீர் மானிக் கின்றன. இலங்கை நிலவுடைமை, கொலனிய, முதலா ளித்துவ வழிவந்த ஒரு நவ கொலனியல் அமைப்பு முறை கொண்ட நாடாகவே விளங்கி வருகிறது. இவற்றை அதன் வழிகளில் பாதுகாத்து நிற்பதே இன்றைய உலக மயமாதலின் கீழான கல்விக் கொள்கையாகும். இதற்கு இசைவானவர்களாக வும் அவற்றைப் போதிப்பவர்களாகவும் ஆசிரிய ர்கள் இருந்து வருகிறார்கள். அவ் ஆசிரியர்க ளின் சொந்த விருப்பு வெறுப்பு எவ்வாறாயினும் பாடசாலை எல்லைக்குள் பாடத்திட்டவரையறை க்குள் தான் ஒரு ஆசிரியரால் கடமையாற்ற முடியும். அரசாங்க சம்பளத்தை நம்பி வாழும் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகள் நெருக்க டிகள் மத்தியிலேயே தம் கடமையாற்றி வருகிறா ர்கள். அதனாலேயே அடிக்கடி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு தொழிற்சங்க நடவடிக்கைகளி லும் ஆசிரியர்கள் ஈடுபட்டு வரும் சூழல் நில வுகிறது.

எல்லாவற்றுக்கும் உலக தினம் நினைவு கூரப்ப டுவது போன்று ஆசிரிய தின நினைவு கூரலும் ஒரு சர்வதேசச் சடங்கு மட்டுமேயாகும். இதனால் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் எந்தவொரு பிரச் சினைக்கும் தீர்வு ஏற்படாது. ஆதலால் ஆசிரி யர்கள் ஐக்கியப்பட்டு தமக்கான உரிமைகளையும் கல்விக்கான சமூக மயப்படுத்தல்களையும் கொண்ட கோரிக்கைகளுக்காகச் செயலபட வேண்டும்.

- நிமல் -

### அரசாங்கத்தின்

1ம் பக்க தொடர்ச்சி

இலங்கையின் பிரதான முரண்பாட்டுப் பிரச்சினையாக இருந்து வரும் தேசிய இனப்பிரச்சினை என்பது யுத்தத் தின் வெற்றியுடனோ அன்றி புலிகளின் தோல்வி அழி வுடனோ தீர்வுக்கு வந்து விடவில்லை. அதற்குரிய நியா யமான அரசியல் தீர்வு காணப்படும் வரை அப்பிரச்சினை தொடரப்படவே செய்யும். அதன் சார்பான கோரிக்கை களும் போராட்டங்களும் ஏதாவது ஒரு வழியில் மேற்கிள ம்பி முன்செல்லவே செய்யும், இது வரலாற்றின் அரசியல் யதார்த்தமும் நடைமுறை உண்மையுமாகும்.

மேலும் தெற்கிலே இதுவரை காலமும் எந்தவொரு தொழி லாளர்களின் கோரிக்கைக்கும் அதன் சார்பான வேலை நிறுத்தங்களுக்கும் பயங்கரவாதப் பூச்சாண்டியும் புலி முத்திரையும் பயன்படுத்தப்பட்டே வந்தது. இனிமேலும் அது செல்லுபடியாகாத சூழலில் தொழிலாளர்கள் விவசா யிகள் அரசாங்க தனியார் துறை ஊழியர்கள் தத்தமது கோரிக்கைகளுக்காக வீதியில் இறங்கவே செய்வர்கள். இவற்றையெல்லாம் முன் கூட்டியே சிந்தித்து செயலபடும் வகையிலேயே யுத்தம் முடிவடைந்த பின்பும் ஆயுதப்படை களுக்கு ஆட்சேர்ப்பும் பயிற்சிகளும் நடைபெறுகின்றன. நேற்று வடக்கு கிழக்கில் நாளை தெற்கில் என்ற போக்கு வளர்வதை எவராலும் தடுக்க முடியாது. ஏற்கனவேயும் இவை நடைபெற்ற வைகளாகும். எனவே மக்கள் விரைவாகவே அடக்குமுறைகளின் அசோகங்களுக்கு உள்ளாகும் அபாயத்தை எதிர்நோக்கி நிற் கின்றனர். இதனாலேயே ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்பூட்டும் கைவிலங்கும் இடுவதற்கு பத்திரிகைச் சபைச் சட்டம் வர இருக்கிறது. எனவே அரசாங்கம் எதிர்பார்க்கும் தேர்தல் கள் இரண்டையும் நடாத்தி பாராளுமன்றத் தில் மூன்றில் இரண்டு ஆசனங்களையும் பெற்றுவிட்டால் எல்லாம் சரிவந்து வரும் என நம்புவது வீண் தனமானதாகும். ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று ஆட்சி நடாத் திய ஜே.ஆரே மக்கள் முன்தோற்றுப் போன முதலாளித்துவ வாதியும் ஏகாதிபத்திய அடி வருடியுமாகும். அதே வழியில் செல்லும் எவராலும் எச் சூழலிலும் இந்த நாட்டை உரியவழிகளில் வழிநடாத்தி வெற்றிபெற முடியாது என்பதும் மட்டும் உண்மையாகும்.

## நாளு நடக்கும் நற்குணன் உலகிலே

### இன்னொரு வெற்று வேட்டு

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் அமெரிக்காவிற்குப் போனால் அவர் அங்கு வழக்கு விசாரணை ஒன்றை எதிர் நோக்க நேரிடும் என்றெல்லாம் சில மாதங்கள் முன்பு பேசப்பட்டது. விடுதலைப் புலி ஆதரவாளர்கள் மட் டுமில்லாமல் வேறு பலரும் அதைப் பரப்பினர். நமது அமெரிக்க மேட்டுக் குடிகளின் வாய்ச் சவடால்கள் எல்லாம் செப்ற்ரெம்பர் மாதம் பாதுகாப்புச் செயலாளர் அங்கு போய் வந்ததோடு வெறுங் கதையாகி விட்டன. யூதப் பிரமுகர்கள் மூலம் அமெரிக்க நிறுவனத்தை வளைத்துப் போடலாம் என்ற திட்டங்களும் காற்றோடு போகின்றன போலவே தெரிகிறது. அமெரிக்க இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் பற்றிக் கடுமையாக நடந்து கொள்ளக் கூடாது என்று இஸ்ரேல் மூலம் அழுத்தங்கள் கொடுக் கப்படுகிறதாகத் தெரிகிறது இதன் மூலம் பலஸ்தீனம் பற்றி இலங்கை அர சாங்கத்தின் வாயை முற்றாகக் கட்டிப்போட இஸ்ரேலுக்கு இயலுமாகலாம். அமெரிக்கக் கனவும் ஐ.நா கனவும் இஸ்ரேல் கனவும் எல்லாமே வெறுங் கனவுகள் தான் என்று தமது தமிழ் மேட்டுக்குடிகளுக்கு என்றாவது விளங்குமா?

### கருணையே கருணை

இந்தியாவில் அகதிகளாக மண்டபம் முகாம் போன்ற அகதி முகாம்களில் இருந்து வரும் 80,000 இலங்கைத் தமிழருக்கும் முகாங்களுக்கு வெளியே இருப்பதாக நம்பப்படும் 20,000 பேருக்கு இந்திய குடியுரிமை பெற்றுத்தரும்படி இந்திய அரசைக் கோரப் போவதாகத் தமிழக முதல்வர் கருணாநிதி அறிக்கை விடுத்திருக்கிறார். இது ஒரு ஏமாற்று வேலை என்றால், அதற்குப் பெறுமதி சேர்க்கிற விதமாக, சுப்பிரமணியம் சுவாமி அதன் மூலம் புலி ஊடுருவலுக்கு வழி ஏற்படும் என்று அதை எதிர்த்து அறிக்கை விடுத்திருக்கிறார்.

இந்த அரசியல் நாடகங்கள் எல்லாம் விடுத்து அகதி முகாம்களில் வாழும் மக்களின் அவல நிலையை (என். ராம் கூட இலங்கை முட்கம்பி வேலிகளின் பின்னால் உள்ள நிலை தமிழக அகதி முகாங்களைவிடப் பரவாயில்லை என்று சொன்னாரல்லவா) மாற்ற ஏதாவது செய்ய மாட்டார்களா? அவர்களுக்கு வோட்டுக்கள் இருந்தால் அல்லவா அவர்களை யாரும் ஏறெடுத்துப் பார்ப்பார்கள்!

### தெய்வ சித்தத்தால்.....

சில வாரங்கள் முன்பு யாழ்ப்பாணம் போய் வந்த பத்திரிகை உலகப் பார்ப்பனப் பெரியவர் ஒருவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலே ஒரு கதையை அவிழ்த்து விட்டார். கடவு'ர் புண்ணியத்தில் எல்லாமே நல்ல'படி இருப்பதாகவும் கோயிற் திருவிழாக்கள் எல்லாம் நல்லபடி நடப்பதாகவும் மகிழ்ச்சி தெரிவித்தார். முள்ளிவாய்க்காலிலும் தெய்வ சித்தப்படி தான் எல்லாம் நடந்ததா என்று ஒரு இளவட்டம் கேள்வி கேட்கப் பெரியவருக்கு வந்ததே கோபம். நீங்கள் சின்னப் பெடியள், உங்களுக்கு இதெல்லாம் விளங்காது! என்று அவர் ஒரு அஸ்திரத்தை வீசச், சபையிலிருந்து பெருஞ் சலசலப்பு எழப் பெரியவர் நன்றாக ஆடித்தான் போய்விட்டார்.

### இப்படியும் இருக்கிறம்

ஒரு என்.ஜி.ஓ் பெண்ணியவாதி ஒருவரின் பொறுப்பில் என்.ஜி.ஓ. ஆதரவுடன் நடத்தப்படும் சில்லறைத்தனமான ஒரு சஞ்சிகையின் விற்பனை சினிமா விஷயங்களைப் போட்டும் ஏறவே மாட்டேன் என்பதால் இப்போதெல்லாம் பாலியல் சார்ந்த கிளுகிளுப்பூட்டுகிற விடயங்களும் அதிற் சிறிது தாராள மாகவே இடம் பெறுகின்றன. அதுவும் வேலை செய்யாவிட்டால்? என்னவும் செய்வார்கள். பெண்ணியம் வேறு வியாபாரம் வேறல்லவா!

### அளவான ரோசம்!

வன்னியிலே உள்ள முட்கம்பி முகாமொன்றில் அண்மையில் நடந்த துப்பா க்கிச் சூட்டு நிகழ்வின் பின்பு சிங்களப் பத்திரிகையாளர்கள் சிலர் அந்த நிகழ்வைப் பற்றிக் கண்டித்துப் பேசிய பிறகு தான் நமது அரசாங்கச் சார்பு மூத்த தமிழ்த் தலைவர் ஒருவருக்கு அக்கறை வந்து அதைக் கண் டித்துப் பேசியிருக்கிறார். முட்கம்பி முகாங்களிலிருந்து உடனடியாக மக்களை விடுவிக்கச் சொல்லி அழைப்பு விடுவதற்கு ஏன் அவர் போன்றவர்கட்குத் திராணியில்லை? அரசாங்கத்தை ஆதரித்தாலும் ஆதரிக்கா விட்டாலும் தமிழ்த் தேசியவாதம் என்பது தன் தன் வயிற்றுப் பிழைப்புப் பற்றியது தானே!

### வருந்துகிறேன்

சென்ற இதழில் சீனாவைப் பற்றிய திரிப்பை எழுதியவர் கலாநிதி குமர குருபரன் என்று கண்டித்து எழுதப்பட்டது. அத் திரிப்பிற்குப் பொறுப்பானவர் வேறொரு குமரகுருபரன் என அறிகின்றேன். எனவே கலாநிதி குமரகு ருபரனுக்கு அதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய மன வருத்தத்திற்கும் பிற சிரமங்களுக்காகவும் அவரிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஜே.வி.பியின் வாலை நிமிர்த்த முடியாது

ஒரு நாட்டில் இருந்து வரும் சமூக முரண்பாடுகளையும் அவற்றினடியாக எழும் ஒடுக்கு முறைகளையும் மாக்சிச உலக நோக்கின் வழியாகவும் வர்க்கப் போராட்ட அடிப்ப டையிலும் அணுகிக் கொள்கை வைப்பதே ஒரு மாக்சிசக் கட்சியின் கடமையாகும். வெறுமனே செங்கொடியையும் அரிவாள் சம்மட்டியையும் மாக்ஸ் ஏங்கல்ஸ் லெனின் பட ங்களையும் செஞ்சட்டைகளையும் கொண்டிருப்பதால் மட்டும் அது இடதுசாரி மாக்சிசக் கட்சியாகி விடமாட்டாது.

அந்தவகையில் ஜே.வீ.பி என்கிற மக்கள் விடுதலை முன் னணி இன்று வெறும் கட்சியாக அதாவது ஒரு தேசியவாதக் கட்சியாகவும் பேரினவாதம் பேசும் இன கண்ணோட்டக் கட்சியாகவுமே காணப்படுகிறது. மகிந்த சிந்தனையை வடி வமைத்து மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கி அதற்கு முன்பே 38 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றது ஜே.வி.பி. அதனால் அடுத்த ஆட்சிக்கு வர இருப்பதாகக் கனவும் அகங்காரப் பேச்சுக்களும் கொண்டிருந்தது. விரை வாகவே கனவுகள் கலைந்து அக்கட்சி இரண்டாக உடை க்கப்பட்டது. விமல் வீரவன்சா தலைமையில் பன்னிரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்து இரண்டு அமைச்சர் பதவிகள் பெற்றனர். இன்று விமல் வீரவன்சா செஞ்சட்டையைத் துறந்து பௌத்த தேசியத் திற்கு இணைவான மஞ்சள் சட்டை அணியத் தொடங்கி விட்டார். அவர்கள் இப்போது தேசிய சுதந்திர முன்னணி என்ற கட்சி அமைத்து செயல்படுகின்றனர். இவர்களில் மூவர் தென்மாகாண சபையில் போட்டியிட்டு படுதோல்வியும் கண்டனர்.

அதேவேளை பழைய ஜே.வி.பி இருபத்தியாறு பாராளுமன்ற உறுப்பினருடன் இடையிடையே செஞ்சட்டைகளுடன் இரு ந்து வருகின்றனர். இவர்கள் யுத்தத்திற்கு எண்ணை வார் த்து நின்றவர்கள். இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்றனர். வடக்கு கிழக்கைப் பிரித்தனர். பதின் மூன்றாவது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறி வருகிறார்கள். இத்தனைக்கும் மத்தியில் தாங்கள் தமிழ் மக்களுக்கு எதிரிகள் அல்லர் என்றும் கூறி வருகிறார்கள். அதனைக் கூறவும் விளக்கம் தரவும் இராமலிங்கம் சந்திர சேகரன் என்ற பாராளுமன்ற உறுப்பினரையும் தேசியப்ப ட்டியலின் ஊடாக வைத்திருக்கின்றனர். தாங்கள் எங்காவது எப்போதாவது தமிழர்களுக்கு எதிராகத் தீங்கிழைத்திருக்கி றார்களா என்று யாராவது கூற முடியுமா என்று கேட்கிறா ர்கள். அவ்வாறெனில் ஜாதிக ஹெல உறுமயவும் தமிழர் களுக்கு எதிராகப் பகிரங்கத் தீங்கிழைத்தாக நாம் அறிய வில்லை. அப்படியாயின் ஜாதிகஹெல உறுமயவும் தமிழர் களுக்கு ஆதரவு எனக் கூறமுடியுமா?

ஜே.வி.பியைத் திருத்துவது நாய்வாலை நிமிர்த்துவது போன்றதாகும். இத்தகைய ஜே.வி.பி செய்து கொண்ட நாசத்தின் மேல் நாசம் சிங்கள மக்கள் மத்தியில் மாக்சிச லெனினிசப் புரட்சிகர சக்திகளை வளரவிடாது தடுத்து திசைதிருப்பியதாகும். அதற்கு அப்பால் வளர முற்பட்ட இளம் சக்திகளை காட்டிக் கொடுத்து சீர்குலைத்து சின்னா பின்னமாக்கியதாகும். ஆனால் ஜே.வி.பியின் அழிவுகரமான அரசியல் வேலைகள் புதிய தலைமுறையினரால் முறிய டிக்கப்படும் என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு.

# தோற்றுப் போன தமிழ்த் தேசியமும் தூக்கிப் பிடிக்கும் மரமண்டைகளும்

தமிழ்த்தேசியவாதம தமிழ் மக்களை எத்தகைய ஒரு அவலநிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது என்பதை நாம் இன்று கண்கூடாகப் பார்க்கின்றோம். இந்த அவலத்திற்குப் பொறுப்புச்சொல்ல வேண்டியவர்கள் தமிழ்த்தேசியவாதத் தலைமைகளும் தமிழ்த்தேசியவாதிகளுமே. ஆனால் இன்றும் தங்கள் சந்தர்ப்பவாத அரசியலைத் தொடர்வது பற்றியே இவர்கள் அக்கறையாய் இருக்கிறார்கள். இவர்கள் முகாம் களின் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் இருக்கும் மூன்று இலட்சம் மக்கள் பற்றியோ நடந்து முடிந்த பேரழிவு பற்றியோ எதுவித அக்கறையுமற்று புதிய மாயைகளை, கனவுகளை, வெற்று நம்பிக்கைகளை மக்கள் மத்தியில் ஊட்டும் சீரழிவுச் செயற்பாடுகளில் இறங்கியிருக்கிறார்கள்.

அண்மைய 'தீராநதி' நேர்காணலில் கி.பி. அரவிந்தன் "இந்திய இறையாண்மையின் பாதுகாப்புக்கு அல்லது இந்தியா சிதறாமல் இருப்பதற்கு ஈழத் தமிழர்களை விட் டால் இந்திய அரசுக்கு வேறு மார்க்கமில்லை என்பதே உண்மை" என்று உளறியிருக்கிறார், மேலும் "இந்தியாவை தவிர்த்த மாற்றுத் தெரிவு ஏதும் எங்களுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இலங்கைத் தீவின் அரசியல் என்பது இந்திய துணைக்கண்ட நலனுடன் பிணைந்தது. எங்கள் அரசியல் நியாயத்தை இந்திய நலனுடன் எப்படி இணைப்பது என்பதே எதிர்காலத்தில் எங்கள் அரசியல் போராட்டத்தில் முக்கிய பங்கை வகிக்கும். அதனையே நாடு கடந்த தமிழீழ அரசை அமைத்திருப்பவர்களும் நம்பு கிறார்கள்" என்றும் சொல்லிவைத்திருக்கிறார். எந்த அடிப் படையில் யாருடைய நலனுக்காக இவ்வாறு சொல்கிறார் என்பதை மக்கள் அவதானிக்க வேண்டும். அப்போதுதான் இதனுள் உட்பொதிந்திருக்கும் கபடத்தனமும் சந்தர்ப்பவாத மும் தெளிவாகப் புலப்படும். 'தீராநதி' இந்தியாவிலிருந்து வெளி வருகின்ற ஒரு சஞ்சிகை, அதன் வாசகர் தளமும் இந்தியாவை மையப்படுத்தியதே. எனவே இதற்கு ஏற்றபடி கருத்தொன்றை சொல்வது லாபமானது. ஒரு வகையில் இதன் வழி தனிப்பட்ட லாபங்களுக்கும் தமிழ்நாட்டுக்கு அழைக்கப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு. எனவே இவ்வா றான தத்துவ முத்துக்களை உதிர்ப்பது தனிப்பட்ட நலன் சார்ந்ததற்கு அப்பால் எதுவுமில்லை. இவரைப் போலவே எல்லாம் தெரிந்த தமிழ்ப் புத்திஜீவிகள் நிறையப்பேர் இருக்கிறார்கள். இவ்விடத்தில் அப்படிப்பட்ட இன்னொருவ ரான வ.ஐ.ச. ஜெயபாலனது நேர்காணலை "தீராநதி" பிரசுரித்திருந்ததையும் நினைவு கூரல் பொருத்தம்.

இந்தியாவை விட்டால் வேறு மார்க்கம் இல்லை என்று சொல்லும் கி.பி. அரவிந்தன் கடந்த ஏப்பிரலில் பிரான்சில் "வட்டுக்கோட்டை பிரகடனத்தை 32 ஆண்டுளுக்குப் பின் னர் மீளவும் புலம்பெயர் தேசத்தில் வழிமொழிந்து வாக் களிப் பதன் மூலம் எமது அரசியல் அவா இன்னமும் உயிர்ப்புடன் உள்ளது என்பதை அழுத்தம் திருத்தமாக முன்மொழிகின்றோம். சர்வதேச சமூகம் இதை ஏற்று எங்கள் அரசியல் அவாவை நிறைவேற்ற வேண்டும்" என்று சொல்லியிருந்தார். அத்தோடல்லாமல் வட்டுக் கோட்டை பிரகடனத்தை பிரான்சிலும் நோர்வேயி லும் வாக்கெடுப்புக்கு விட்டு "தமிழ் மக்களின் கோரிக்கை இதுதான். இதைதான் புலம்பெயர்ந்த மக்கள் சர்வதேசத் திற்குச் சொல்கிறார்கள். ஈழத்தமிழ் மக்களின் தீர்வு இது தான் இதை சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும்" என்றும் கோரியிருந்தார். இவ்விடத்தில் இரண்டு விடயங்கள் கவனி க்கப்பட வேண்டும். முதலாவது இலங்கையில் வசிக்கின்ற தமிழ்மக்களின் அரசியல் தீர்வு பற்றியும் எதிர்காலம் பற்றி யும் முடிவு செய்ய நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில் கல ந்துகொண்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் வெளி நாட்டுக் குடியுரிமை உடையவர்கள். இரண்டாவது விடயம் சர்வதேச சமூகத்திடம் கையேந்துவதும் இப்போது இந்தியா விடம் கையேந்துவதும் என மாறி மாறிக் கையேந்துவது ஏன்? விடுதலை என்பது காலக்கெடு வைத்து சொல்ல ப்படுவதல்ல. விடுதலை என்பது எவரும் வந்து பெற்றுத் தருவதுமல்ல. எந்தவொரு அரசியல் போராட்டத் தலைமை யும் வழிகாட்டலாமே ஒழிய ஒரு சமூகத்தின் ஏகப் பெரும் பான்மையான மக்கள் திரள் தனது தோள்கள் மீது விடுத லைப் போராட்டத்தை ஏற்றுச் சுமந்து முன்செல்லாத வரை விடுதலை வெல்லப்படக் கூடியதல்ல. ஒரு ஆயுதப் போராட்ட வெற்றியை எடுத்து அதை விடுதலையாக மாற்றுகிற பணி மக்களுடையது. எனினும், தமிழ்த் தேசிய வாத அரசியல் மரபில், மக்கள் அரசியல், மக்கள் போரா ட்டம் என்கிற கருத்தாக்கங்கள் இன்று வரை வேரூன்ற வில்லை. தமிழ் மக்களின் விடுதலை யைக் குத்தகைக் காரர்கள் எவராலும் பெற்றுத்தர இயலாது.

நேர்காணலில் கி.பி. அரவிந்தனின் பிற்போக்குத்தனம் அம்பலமாகின்றது. "தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்னமும் ஈழத் தமிழர்களின் அரசியல் பிரதிநித்துவத்தை இழக்கா திருப்பது ஓர் ஆறுதலை அளிக்கின்றது. அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் (யாழ்பாண மாந கரசபை, வவுனியா நகரசபை தேர்தல்கள்) தமிழ் தேசிய கூட் டமைப்பு கணிசமான வாக்குக ளைப் பெற்றிருப்பது அவர்களு க்கு ஊடாக பணி செய்வதற் கான வாய்ப்பை வழங்குகின்றது." என்று உள்றியிருக்கிறார் ஆனால் நடந்து முடிந்த தேர்தல்களில் மக்களில் பெரும்பகுதியினர் வாக்களிக் கவில்லை. அது தமிழ்ப்பாரளுமன்ற அரசியல் மீதான வெறுப்பின் விளைவானது. தமிழ் மக்கள் சுயமாக சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இது வர வேற்கத்தக்க ஒரு விடயம். வடக் கில் தேர்தல்கள் பற்றிய அறிவி ப்பே தமிழ் மக்களை அவமதிக் கின்ற செயற்பாடு.



இத்தேர்தலின் விளைவால் பயனேதும் விளையாது என்று எல்லோரும் நன்கு அறிவர். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களை அவம திக்கும் விதமாக தேர்தலில் போட்டியிட்டது. தனிநாட்டில் தொடங்கி நகரசபையில் வந்து நிற்கிறது தமிழ்த் தேசியத்தின் அரசியல். இதற்கிடையில் உள் ளூராட்சி சபைகளின் ஊடாக கூட்டமைப்பினர் பணி செய்வா ர்களாம் என்கிறார் கி.பி. அரவி ந்தன். மாற்று அமைப்புகள் தமிழ் மக்களுக்கான மாற்றுத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடுகிறார்களே என்ற கேள்விக்கு பதிலளித்த கி.பி. அரவிந்தன் "புலிகள் இல்லாத நிலையில் சர்வதேசம் இவற்றிற்கு ஆதரவு வழங்கும் என்றும் நான் நம்பவில்லை. செல்வராசா பத்மநா தனின் முயற்சிக்கும், அவரது நாடு கடந்த அரசு பற்றிய கருத்தாக்கத் திற்குமே சர்வதேச ஆதரவு கிட்டி வருகிறது" என்கிறார். இவர்கள் யாரும் மக்களை வாழவிடு வதாக இல்லை. அந்நியத் தயவிலேயே தமிழர்கள் வாழவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நின்றால் தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடையா மற்போகும் என்று நினைக்கிறவர்கள், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் வரலாற்றில் இன்று வரை ஏகாதி பத்தியம் யாருடைய தரப்பில் நின்று வந்துள்ளது என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

எனவே, அந்நிய அரசுகளின் ஆதரவு தேவை என்று வாதிப்போர் பழைய பிழைகளையே திரும்பும் செய்யுமாறு தூண்டுகிற காரியத்தையே திரும்பத் திரும்பச் செய்கிறா ர்கள். அவர்களின் நோக்கம் சுயநலன் சார்ந்தது மட்டும ன்றி மக்கள் விரோதமானதும் கூட. அந்நிய ஆதரவு என் பது ஒரு ஒடுக்கப்பட்ட சமூகம் அந்நிய அரசுகளிட மிருந்து எதிர்பார்க்கக்கூடியதல்ல. அரசுகளிடையே நடக்கிற காந கர்த்தல்களை ஒரு விடுதலை இயக்கமோ ஒடுக்கப்பட்ட சமூகமோ தீர்மானிக்க முடியாது. எங்கள் அனுபவங்களிலி ருந்து நாங்கள் கற்றவை அனைத்தையுமே மறுக்கிற வித மாக எங்கள் தலைமைகளது அரசியல் நடத்தை அமைகி றது. இது மிகவும் ஆபத்தானது. இது குறித்து நாம் அவதா னமாக இருக்க வேண்டும். இல்லாவிடின் அதற்கான பலன் களை அனுபவிக்கப்போவது மக்களே அன்றி வித்தை காட்டுகின்ற தமிழ்த்தேசியவாதத் தலைமைகள் அல்ல.

அஸ்வத்தாமா

# தோழர் இராசையாவின் மறைவுக்கு எமது செவ்வஞ்சலி

அண்மையில் சங்கானைப் பிரதேசத்தின் மூத்த கம்யூனிஸ்ட் தோழர்களில் ஒருவரான தோழர் க.இராசையா இயற்கை எய்தினார். அவர் சங்கானை கிழக்கைச் சேர்ந்த வர். தனது இளமைக் காலத்திலேயே மாக்சிசலெனினிசக் கருத்துக்களால் 1960துகளின் நடுக்கூறிலே ஈர்க்கப்பட்டார். ஆரம்பத்தில் வாலிபர் இயக்கத்திலும் பின்பு கட்சியிலும் இணைந்து உறுதியான ஒரு தோழராகவும் போராளியா கவும் செயல்பட்டு வந்தார். மிகவும் அமைதியும் நிதானமும் கொண்ட தோழர் இராசையா மக்களோடும் தோழர்க ளோடும் மிக நெருக்கமாக நின்று கட்சிவேலைகளை முன் னெடுத்து வந்த ஒருவராக திகழ்ந்தார். அதேவேளை மக்க ளுக்கும் கட்சிக்கும் எதிரான நிலைப்பாடு கொண்டோருடன் மிகக் கடுமையாக நடந்துகொள்வது அவரது இயல்பாகும். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்ட கால த்தில் சங்கானைப் பிரதேசத்தில் தோழர் இராசையா ஏனைய தோழர்களோடு இணைந்து நின்று ஒரு புரட்சிகரப் போராளியாகவே திகழ்ந்து வந்தார். அவர் அதிகம் பேசுப வர் அல்லர். ஆனால் அவரது கருத்துக்களில் நிதானமும் தூரநோக்கும் பதிந்திருக்கும். கூட்டான முடிவுகள் எடுக்கும் போது இராசையா தோழரின் கருத்தை ஏனைய தோழர்கள் அறிவதில் அக்கறையாக இருப்பார்கள். ஏனெனில் அவரது கருத்துக்கள் ஒரு முனைப்பட்டதாக அமையாது. சூழல் யதார்த்தம் மக்கள் கட்சி இவற்றின் எதிர்காலம் போன் றவற்றை தழுவியதாகவே அவரது கருத்துக்கள் அமை ந்திருக்கும். அதனாலேயே கட்சித் தோழர்கள் மக்கள் இளைஞர்கள் மத்தியில் நன்கு மதிக்கப்பட்ட தோழராக அவர் வாழ்ந்து வந்தார்.

தோழர் இராசையா புதிய ஜனநாயக கட்சி உறுப்பினரா கவும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அதன் வடபிரதேசக் குழுவிலும் இருந்து கட்சிப் பணியாற்றி வந்தவர். எந்த வொரு சந்தர்ப்பத்திலும் கட்சியின் கொள்கைகளை விட்டு க்கொடுக்காத ஒரு தோழராக வாழ்ந்து வந்தவர் தோழர் இராசையா. பல்வேறு வாழ்க்கைத் துன்பங்கள் நெருக்க டிகள் மத்தியிலும் கட்சியின் நிலைப்பாட்டை பற்றி நின்று வாழ்ந்தவர். இறுதி ஆண்டுகளில் நோய்வாய்ப்பட்ட நிலை யில் இயற்கை எய்தினார்



அவரது மறைவுக்கு புதிய ஜனநாயக கட்சி யின் மத்திய குழு தனது ஆழ்ந்த செவ்வ ஞ்சலி யைத் தெரிவித்துக் கொண்டது. மேலும் அவ ரது பிரிவால் துயருற்றி ருக்கும் அவரது துணை வியார் பிள்ளைகள் குடு ம்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறு தலையும் தெரிவித்துக் கொண்டது. தோழர் இராசையாவின் பெயர் என்றும் கட்சியின் தோழர்களின் மத்தியில் நிலைத்து நிற்கும். தோழர் க.இராசையாவின் மறைவிற்கு புதியபூமி தனது புரட்சிகர அஞ்சலியையும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தின் மாற்றுக் தலைமைகள் யார்?

சம்பளவுயர்வு தொடர்பான கருத்தாடல்கள் அமைதியடைந்து விட்டதெனலாம். தீபாவளிக்குப் பிறகு பெரியளவில் தோட்டத்தொழிலாளர்களின் போராட்டம் வெடிக்குமென சில தொழிற்சங்கத் தலைமைகள் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் முக்கியமாக கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அதிகாரமுடைய தொழிற் சங்கங்களோ கோரிக்கைகளை கைவிட்டு வால்களை மடக்கி முதலாளிமார்களின் தாளத்துக்கு ஏற்ப ஆடி முடித்து விட்டார்கள். இதைத் தொடர்ந்து மலையகத்தின் பொகவந்தலாவை போன்ற சில மலையகத்தின் பெருந் தோட்டப் பிரதேசங்களில் கூட்டு ஒப்பந்த இணக்கப்பாடுகள் மீதான அதிருப்தி வெளிப்பட்டது. ஆயினும் நாம் இங்கே கதைக்க எத்தனித்தது இன்னொரு விடயம் தொடர்பிலாகும்.

தேசிய தமிழ்ப் பத்திரிகைகளின் மலையகச் செய்திகளில் கடந்தகாலங்களில் பெருமளவு ஆதிக்கம் செலுத்தியவை சம்பளவுயர்வு தொடர்பிலான விடயங்களாகும். சிலருடைய அறிக்கைகளை வெளியிடும்போது மாற்றுத் தலைமைகள் என அவர்களை அடையாளப்படுத்துகின்றனர். மாற்றுத் தலைமைகள் யார் என்பது தொடர்பில் எமது சிந்தனையை தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகும்.

சிலரை மலையகத்தின் இரட்சகர் என சொல்வதும் மாற்றுத் தலைமைகள் எனச் சொல்லி பிரச்சாரப்படுத்துவதிலும் ஒவ்வொரு ஊடகத்தினதும் விருப்பு வெறுப்பை பொறுத்ததாகும். இதய சுத்தியுடன் எதையும் சொல்கிறார்களா என்பது சந்தேகத்திற்குரிய விடயமாகும். ஆயினும் மாற்றுத் தலைமைகள் யார் என்பதிலும் தற்சமயம் மாற்றுத் தலைமைகள் என ஊடகங்களால் அடையாளப் படுத்தப்படுபவர்கள் யார் என்பது தொடர்பிலும் கருத்துத் தெரிவிப்பது அவசியமாகும்.

இவ்வளவு கால மலையக வரலாற்றில் பிற்போக்கு சக்திகளாக தம்மை வெளிப்படுத்தி நிற்கும் பெரிய தொழிற்சங்க அரசியற் சக்திகளான இ.தொ.கா, ம.ம.மு, இ.தே.தோ.தொ.சங்கம் போன்றவற்றின் பாசறையில் அரசியல் பாடம் கற்று அவர்களிலிருந்து பிரிந்து உதிரிகளாக நிற்கும் சக்திகள் எப்படி மாற்றுத் தலைமைகளாக இருப்பர். இந்தப் பெரிய தொழிற்சங்கச் சக்திகளுக்கு சளைக்காது தேர்தல் வியாபாரத்தின் லாப முயற்சிகளிலும் இன்னும் பல சித்து விளையாட்டுகளிலும் போட்டி போடுபவர்கள் எப்படி மாற்றுத் தலைமைகள் ஆவர்.

தம்மை மாற்றுத் தலைமைகள் எனச் சொல்பவர்கள் தேர்தலின் நடந்து கொண்ட விதம் மறக்கப்பட முடியாதாகும். வோட்டு பெற பெருமளவு பணத்தை வாரியிறைத்தமை சாராயம் விநியோகம், சோற்றுப் பார்சல் தொடங்கி இன்னும் பலவிதமான கேவலமான செயற்பாடுகளில் ஈடுபட்டதை எப்படி மறக்க இயலும். இவர்கள் பிற்போக்கு அரசியலின் இன்னொரு விதமான முகங்கள் தான். மலையக அரசியலின் பிற்போக்கு சக்திகளை ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துப் பார்க்க முடியாதளவுக்கு பிற்போக்கு முழுமையின் பகுதிகளே இவர்கள் அனைவரும். எனவே இவர்களை மாற்றுத் தலைமைகள் என எப்படி கூற இயலும்.

மத்திய மாகாண சபையின் தேர்தல் காலத்தில் ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு இவர்கள் வென்றமை மாற்று அரசியலை நாடித்தான் மக்கள் வாக்களித்தார்கள் என எப்படிக் கொள்ள முடியும். மக்கள் இவர்களை வாக்களித்து தேர்ந்தெடுத்தது காலங்காலமாக இருந்த தலைமையின் மீதான வெறுப்பு காரணமாக இருக்கலாம். அவர்களுக்க பதிலீடாக இவர்களை தேர்ந்தெடுத்ததாக கொள்ள முடியும். பதிலீட்டுத் தலைமை மாற்றுத்தலைமை என்ற இரண்டுக்கும் பாரிய வித்தியாசங்களும் உள்ளன.

மாற்று தலைமைத்துவம் என்ற முகமூடியை போட்டுக் கொண்டு இவர்கள் எதை நோக்கி மக்களை வழிநடத்துகிறார்கள்? அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் அரசியல் சக்திகளுக்கும் இவர்களுக்கும் அடிப்படையில் எந்த வித்தியாசமும் இல்லை.

சம்பளவுயர்வைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இவர்கள் சொன்ன கருத்துக்களை ஆழ்ந்து பார்த்தால் இவர்களது அரசியல் தெளிவு புரிந்துவிடும். அதேவேளை இடதுசாரிகள் சொன்ன சம்பளவுயர்வு தொடர்பான ஆலோசனைகள் நடைமுறைகள் பற்றி எந்த ஊடகமும் பிரச்சாரப்படுத்தவில்லை.

மாற்று அரசியல் என்பது மலையகத்தில் காலங்காலமாக நடந்து விடும் சீரழிந்த அரசியலை கொஞ்சம் மாற்றி அலங்கரித்து செய்வதல்ல. மாறாக சித்தாந்த நடைமுறை அடிப்படைகளில் மாற்றம் பெறும் அரசியலாகும். மக்களின் எல்லாவிதமான அக புற முரண்பாடுகளின் தீர்வுகளை முன்வைப்பதாக அமைய வேண்டும். அத்துடன் எல்லாவிதமான ஒடுக்கலிலும் இருந்து மீட்க மக்களை வழிநடத்தவும் மக்களின் தீர்வை மக்களே தீர்மானிக்கவும் அவர்களை ஐக்கியப்படுத்தி முன்தள்ளும் செயற்பாடே மாற்று அரசியல் ஆகும்.

எனவே இத்தகைய பிற்போக்குத் தலைமைகளை மாற்றுத் தலைமைகளாக நம்பத்தேவையில்லை. மாற்று அரசியலை வளர்க்க வெகுஜனங்களிடையேயான தளத்தை விரிவுபடுத்தி செயற்பட இடதுசாரி முற்போக்கு சக்திகள் முனைய வேண்டும். மக்களை ஐக்கியப்படுத்தி பலமாகவும் செயற்திறன் மிக்கதாகவும் முன்தள்ள வேண்டும்.

- கிட்டு -

# அரிசி மானியமும் மாயமான மானிய அட்டையும்

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விலைவாசி உயர்வினால் பாதிக்கப்படுகின்ற சாதாரண மக்களைப் பாதுகாப்பதற்கென பல்வேறு வேலைத் திட்டங்கள் இந்த அரசாங்கத்தினால் முன்மொழியப்படுகின்றது. ஆனால் அவை எந்த அளவு நடை முறையில் சாத்தியமாக்கப்படுகிறது என்பதும் அதன் நன்மைகள் உழைக்கின்ற சாதாரண மக்களுக்கு எந்தளவு சென்றடைகின்றது என்பதும் கேள்விக் குறியே.

அந்த வகையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வறுமை நிலையைப் போக்குவதற்காக மானிய விலையில் அரிசியை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கும் மலையகத் தலைவர்கள் வாய்ச்சவாடல் அடித்து வருவதை செய்திகள் ஊடாக காணலாம். கேட்கவும் முடிகிறது. ஆனால் இது வரை எந்த தொழிலாளரும் மானிய விலையில் அரிசியைப் பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இது தொடர்பாகப் பல தோட்டத் தொழிலாளர்களைக் கேட்ட போது பல்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். மானிய விலையில் அரிசியை பெற்றுக் கொள்வதற்கான வழங்கப்பட்ட மானிய அட்டை மாயமான விதம் பற்றி இராகலை மஹாகுடுகல தோட்டத் தொழிலாளர்கள் சொல்லும் கதையில் இருந்து மலையகத் தலைவர்களின் பம்மாத்தினைப் புரிந்து கொள்ள முடியும்.

சுமார்ஒரு வருடத்திற்கு முன்னர் இராகலை மஹாகுடுகல தோட்டத்தில் மானிய விலையில் அரிசியை பெற்றுக் கொள்வதற்காக தோட்ட நிர்வாகத்தின் ஊடாக மானிய அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு வாரத்திற்குப் பின் தனி தனியாக கூட்டுறவுச் சங்கத்துக்குச் சென்று அரிசி வாங்குவது சிரமம் தானே, அத்தோடு வேலையும் கெடும், எனவே மொத்தமாக அரிசியை கொண்டு வந்து தோட்ட நிர்வாகத்தின் ஊடாக வழங்கப் போகிறோம் எனக் கூறிக் குறித்த சில தொழிற்சங்கத் தோட்டத் தலைவர்களினால் இந்த அட்டைகள் அனைத்தும் சேகரிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் இரண்டு மூன்று மாதங்களாகியும் தங்களுக்குரிய அரிசி வழங்கப்படாமல் இருக்க, அட்டைகளைச் சேகரித்து சென்ற தலைவர்களிடம் கேட்ட போது அவற்றைத் தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்து விட்டதாகக் கூறியுள்ளனர். தோட்ட நிர்வாகத்திடம் கேட்ட போது அவற்றைப் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்திருப்பதாக கூறியுள்ளனர். ஆனால் ஒரு வருடத்திற்கு மேலாகியும் அரிசி கிடைக்கவில்லை. அட்டைகளுக்கு என்ன நடந்தது என்பது புரியாமல் வேதனையோடு இருக்கிறார்கள் தோட்டத் தொழிலாளர்கள்.

மிகக் குறைந்த வேலை நாட்கள், அதிகரித்து வரும் பொருளாதாரச் சுமை என்பவற்றில் சிக்கித் திணறும் தோட்டத் தொழிலாளர்களை அவர்களின் சந்தா பணத்திலும், வாக்குகளிலும் அரசியல் பிழைப்பு நடத்தும் மலையக அரசியல்வாதிகள் இம் மக்களை இவ்வாறு ஏறி மிதித்து, பொய்யுரைத்து வஞ்சிப்பதை விடுத்து கொஞ்சமாவது மனிதாபிமானத்தோடு நடத்திக் கொள்ள வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.




## இரு சிறுமிகளின் மரணத்திற்குப் பின்

மஸ்கெலியாக முள்ளுகாமம தோட்டத்தைச்சேர்ந்த இலட்சுமணன் சுமதி, மருநவீரன் ஜீவராணி ஆகிய சிறுமிகளின் சடலங்கள் கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் கழிவு நீர்க் கால்வாயில் ஆகஸ்ட் மாதம் 15ஆந் திகதி கண்டெடுக்கப்பட்டன. அவர்கள் கொழும்புக்கு வீட்டுவேலைக்காக அனுப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளாவர். இலங்கையின் சட்டப்படி 14 வயதுக் குறைவானவர்களை வேலைக்கு அமர்த்த முடியாது. ஆனால் இவ்விரு சிறுமிகளில் ஜீவராணி வேலைக்கு அனுப்பப்படும் போது 14 வயதுக்கும் குறைவானவராக இருந்திருக்கிறார்).

இவ்விரு சிறுமிகளின் மரணம் கொலையா தற்கொலையா என்பது பற்றிய விசாரணைகள் கொழும்பு பிரதம நீதிவான் மன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 14 வயது அடையாத பிள்ளையான ஜீவராணியை வேலைக்கு அமர்த்தியதற்காக கௌசிக் என்பவரும் அப்பிள்ளையை வேலைக்கு அமர்த்தத் தரகராக இருந்த அச் சிறுமிகளின் தோட்டத்தைச் சேர்ந்த வீரைய்யா மணிவண்ணனும் கைதுசெய்யப்பட்டு சில நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றில் (இல.8) வழக்குப் பதிவாகி உள்ளது. ஆனால் கௌசிக் என்பவருக்கும் மணிவண்ணன் என்பவருக்கும் இடையில் இருந்த வீட்டு வேலைக்காகச் சிறுமிகளை அனுப்பும் முகவர் நிலையம் ஒன்றைச் சட்டப்படி பதிவு செய்து நடத்திவரும் (ருவா ஏஜன்சி) என்ற பெயரில் மஸ்கெலியா செண் அன்றூஸ் தோட்டக் கீழ்ப்பிரிவில் வசிக்கும் ரணசிங்க என்பவருக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, வயது குறைந்த ஜீவராணியை வேலைக்கு அனுப்பியமைக்கு அவரும் பொறுப்புக் கூறவேண்டியவர் ஆவார். அப் பிள்ளையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அவரிடம் கொடுக்கப்பட்டிருந்ததால், அப் பிள்ளை 14 வயதுக்குக் குறைவானவர் என்பதை அவர் தெரிந்திருக்கவில்லை என்று கூறமுடியாது. அத்துடன் அந்த ரணசிங்ஹ என்பவர் அச் சிறுமிகளின் உறவினரை அடிக்கடி சந்தித்துச் சிறுமிகளின் மரணம் தொடர்பான சட்ட நடவடிக்கைகளால் எவ்வித பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை என்பதால் அதனைக் கைவிடும்படி கேட்டுக் கொள்வதாக அறிய முடிகிறது. இவை ஒரு புறம் இருக்க, மலையக தொழிற் சங்கத் தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டு தாம் தாம் அச் சிறுமிகளின் பெற்றோருக்கு பலவிதமாக உதவிகளை செய்து வருவதாகவும் அச் சிறுமிகளின் மரணம் தொடர்பான வழக்குகளில் ஆஜ ராகி வரும் சட்டத்தரணிகளுக்குப் பணம் வழங்கி வருவதாகவும் ஏட்டிக்குப் போட்டியாக பகிரங்கமாக ஊடக அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.

எந்தவொரு தொழிற் சங்கத் தலைவர்களும் அந்தப் பெற்றோர்களுக்கு எவ்வித நிதியுதவியையும் வழங்கவில்லை என்று அப் பெற்றோர்கள் தெரிவித்தனர். அதே போன்று சட்டத்தரணிகள் அவ் வழக்குகளில் கட்டணம் எதனையும் யாரிடமிருந்து பெற்றுக் கொள்ளாமலே ஆஜராகி வருவதாக சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அச் சிறுமிகளின் சடலங்களை தோண்டி எடுத்து மீள் பிரேத பரிசோதனைக்காக கண்டிக்கு கொண்டு சென்று மீண்டும் அடக்கம் செய்வதற்காக முள்ளுகாமம் தோட்டத்துக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான போக்குவரத்துச் செலவையும் மீள் அடக்கம் செய்வதற்கான செலவையும் எச்.டி.ஓ என்னும் அரச சார்பற்ற நிறுவனம் கொடுத்ததாக அறிய முடிகிறது. பிரேதத்தை தோண்டி எடுப்பதற்காக அட்டன் நீதிமன்றத்திற்கு முள்ளுகாமம் தோட்டத்திற்கும் கொழும்பிலிருந்து சென்று திரும்பிய சட்டத்தரணிகளுக்கு வாகனத்தை எச்.எச்.ஆர். எனும் அரச சார்பற்ற நிறுவனம் வழங்கியுள்ளதாக தெரிகிறது. அச் சிறுமிகளின் பெற்றோர்கள் வழக்கு விசாரணைக்காக கொழும்புக்கு வந்து செல்வதற்காக போக்குவரத்துச் செலவையும் எச்.எச்.ஆர். கொடுத்து வருவதாகவும் அந் நிறுவனத் தைச் சேர்ந்த சில சட்டத்தரணிகள் அவ்வழக்கில் ஆஜராகும் சிரேஷ்ட சட்டத் தரணிகளுடன் ஆஜராகி வருவதாகவும் தெரிகிறது. ஆனால் இவ்வழக்கில் ஆஜராகி வரும் சிரேஷ்ட சட்டத்தரணி இ. தம்பையாவுக்கோ வேறு எந்தச் சட்டத்தரணிக்கோ எந்தவொரு அரசியல் கட்சியோ தொழிற் சங்கமோ அரச சார்பற்ற நிறுவனமோ பணம் எதனையும் வழங்கவில்லை. எச்.டி.ஓ. என்ற நிறுவனம் அறிக்கை விட்டு வருவது போன்று, இவ் வழக்கில் ஆஜராகும் எந்தவொரு சட்டத்தரணியையும் அது ஒழுங்கு செய்யவில்லை, எந்தவொரு சட்டத்தரணிக்கும் கட்டணமோ பணமோ வழங்கவும் இல்லை. இது இவ்வாறு இருக்க, சக்தி ரீவியில் மின்னல் என்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட கே.ரி. குருசாமி என்ற மலையக மக்கள் முன்னணியின் கொழும்பு மாந கரசபை உறுப்பினர் அரசியல் கட்சியொன்றைச் சேர்ந்த தமிழ்ச் சட்டத்தரணி ஒருவர் பணம் வாங்கிக் கொண்டே ஆஜராகி வருவதாகக் கூறியது உண்மைக்குப் புறம்பானது. திட்டமிட்டுக் காழ்புணர்வுடன் அவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகளாகவும் இருக்கும் சில சட்டத்தரணிகள் கட்டணம் எதுவுமின்றியே வழக்குகளில் ஆஜராகி வேண்டுமென்ற அறமோ நிர்ப்பந்தமோ கிடையாத போதும், சமூக அக்கறையுடன் கட்டணம் எதுவுமின்றி ஆஜராகி வருபவர்களை அவதூறு செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை குருசாமி போன்ற கற்றுக்குட்டிகள் தவிர்க்க வேண்டும்.

அதே போன்று, தம்பையா போன்ற சட்டத்தரணிகளுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதி வழங்குவதாக மின்னல் நிகழ்ச்சியை நடத்தும் ரங்கா என்பவர் கூறியுள்ளார். இது அவரின் அரைவேக்காட்டு, கோமாளித்தனமான நிகழ்ச்சி ஒழுங்கமைப்பின் வெளிப்பாடாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பிரதி நீதியமைச்சர் வீ. புத்திரசிகாமணி தான் சட்டமா அதிபருக்குக் கடிதம் எழுதியதை அடுத்தே சுமதி, ஜீவராணி ஆகியோரின் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு மீள் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டதாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கூறியுள்ளார். எல்லாம் தனக்கு மட்டும் தெரியும் என்று பிரஸ்தாபிக்கும் அவருக்கு, நீதிமன்ற உத்தரவின்றி சடலம் ஒன்றைத் தோண்டி எடுக்க முடியாது என்பது தெரியாமல் இருக்கலாம். மக்களுக்கு நன்கு தெரியும்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போதும் கேட்கும் போதும் அழுவதா, கோபப்படுவதா என்பது தெரியவில்லை. அரசியற் கட்சிகள், தொழிற் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றன மேலும் மேலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு மொட்டை அடிக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் உதவியேதும் செய்திருந்தால், அவற்றை ஏன் பகிரங்கப்படுத்தி உதவி வாங்கியவர்களை அவமானப்படுத்துகிறார்களோ தெரியவில்லை. பிறருக்கு உதவி செய்வதில் அதிகாரமும் அகங்காரமும் இருக்கக் கூடாது. சேவை மனப்பான்மையும் தன்னடக்கமுமே இருக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரண கேந்திரங்களோ பரோபகாரிகளோ கொடை வள்ளல்களோ தேவையில்லை. அவர்களுக்கு உதவி என்ற பெயரில் பிச்சை தேவையில்லை. மாறாக, அவர்கள் தங்களது சொந்தக் கால்களில் நின்று அவர்களது தேவையை அவர்களே பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டுச் சூழலே தேவை. அதனை உறுதி செய்வதை விடுத்துத், தொழிற் சங்கம் கட்டவும் வாக்குக்களை பெற்றுக் கொள்ளவும் செயற்படும் தொழிற்சங்கங்களும் அரசியற் கட்சிகளும் தேவையில்லை. திட்ட அறிக்கைகளைச் சமர்ப்பித்து வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு சுகபோக வாழ்வு வாழ்ந்து கொண்டு மக்களை மேய்ப்போராகச் செயற்படும் எஜமானெவரும் தேவையில்லை.

இந்த இரண்டு சிறுமிகள் மரணத்தை அடுத்துத் தோன்றியுள்ள இச் சூழலில் தோட்டங்களில் இருந்து சிறார்களை வீட்டு வேலைக்கு அனுப்பப்படுவதை தடுத்து நிறுத்த அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுப்பதே நல்லது. இதில் எல்லா அமைப்புகளும் ஒருமைப்பாட்டுடன் செயற்படுவது மேலும் நல்லது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 16 ஒக்ரோபர் 2009 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 126

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org

# மீண்டும் பத்திரிகை சபை வேண்டாம்

பத்திரிகை சபையை மீண்டும் நடைமுறையில் அமுலாக்குவதற்கு மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு பல பக்கங்களிலுமிருந்து எதிர்ப்புகள் கிளம்புகின்றன. பத்திரிகை சபைச் சட்டம் 1973ம் ஆண்டு கொண்டு வரப்பட்டதுடன் பத்திரிகை சுதந்திரம் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டது. இச்சபை பத்திரிகையாளர்கள் மீதான குற்றச் சாட்டுக்களை விசாரித்து தண்டனை வழங்கங்கக் கூடிய அதிகாரத்தை கொண்டிருந்தது. இது நீதிமன்றத்திற்கு சமாந்தரமாக சிறைத்தண்டனைகளை வழங்கும் அதிகாரத்தையும் கொண்டிருந்தது.

ஊடகத்துறையை சேர்ந்தவர்களுக்கும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட அரசியல் கட்சிகளுக்குமிடையில் 2003 ஆண்டு ஏற்பட்ட உடன்பாட்டை அடுத்து அதற்குப் பதிலாக இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்கு 2003ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது பொதுமக்களுக்கும் ஊடகங்களுக்குமிடையில் ஏற்படும் பிணக்குகளை சுமுகமாக தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டது. இவ்வாணைக் குழு 700க்கு மேற்பட்ட பிணக்குகளை தீர்த்து வைத்துள்ளதாக அறியமுடிகிறது. ஒழுங்கு விதிகளையும் ஆக்கியுள்ளது. ஊடகங்கள் சுயகட்டுப்பாட்டுடன் இயங்குவதற்கான பொறிமுறையாக இதனை அவதானிக்க முடியும். 1994ஆம் ஆண்டிற்குப் பிறகு 38 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர், தாக்கப்பட்டுள்ளனர். இன்று ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. திசநாயகத்தின் மீது பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டு 20 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீதிமன்ற முறைமைக்கு வெளியில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பளிக்கும் பத்திரிகைச் சபையை மீண்டும் இயக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் விசேடமான சூழ்நிலையில் விசேடமான சட்டங்களின் கீழ் மட்டுமன்றி சாதாரண சூழ்நிலையிலும் கூட பத்திரிகையாளர்களை இயங்க விடாது தடுப்பனவாகவே இருக்கும். அதை மீண்டும் இயங்கச் செய்வதற்கு அரசாங்கம் எந்தவொரு விசேடமான காரணத்தையும் சொல்வதாக இல்லை.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம், ஊடக ஊழியர்கள் சங்கம், சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம், தேசிய ஊடக ஒன்றியம் ஸ்ரீலங்கா முஸ்லீம் ஊடகவியலாளர் ஒன்றியம் பத்திரிகை ஆசிரியர் அமைப்பு ஆகிய அமைப்புகள் மீண்டும் பத்திரிகை சபையை அமுல்படுத்த வேண்டாம் எனக் கோரிக்கைவிடுத்து கூட்டாக கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளன.

இதேபோன்று மோசமாக இருந்த குற்றவியல் மானநட்ட சட்டம் 2002ம் ஆண்டு நீக்கப்பட்டது. பத்திரிகை சபை அமுல்படுத்தப்படுமாயின் குற்றவியல் மானநட்ட சட்டம் நீக்கப்படாதது போன்ற ஒரு சூழ்நிலையே மீண்டும் ஏற்படும். தகவல்களை தெரிந்து கொள்வதற்கான சுதந்திரம் என்பது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் என்பது சர்வதேசச் சட்டத்திற்குரிய சொல்லலங்காரங்கள் அல்ல. மாறாக இலங்கை அரசியலமைப்பில் அடிப்படை உரிமையாகவும் இருக்கிறது. அதனை ஒரு கையால் கொடுத்து இன்னொரு கையில் பறிப்பது போன்றதாக ஆளும் வர்க்கம் செயற்படுவதுண்டு. தேசிய பாதுகாப்பு என்ற காரணத்தால் ஊடகங்கள் பொதுவாக கட்டுப்படுத்தப்படுவதுண்டு. அந்தக் காரணத்திற்கு அப்பாலும் சட்டரீதியாகவும், சட்ட முரணாகவும் கட்டுப்படுத்தப்படுவதுண்டு.

இலங்கையில் சட்டரீதியாகவும், சட்ட முரணாகவும் ஊடகங்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன பத்திரிகை சபை என்பது இன்னும் சட்டத்தில் இருந்தாலும் அதை இவ்வளவு காலமும் இடைநிறுத்தி வைத் திருந்துவிட்டு தற்போது அவசரஅவசரமாக கொண்டுவர நினைப்பதன் உள்நோக்கம் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இன்னும் இன்னும் அடக்குமுறை நிறைந்த சூழ்நிலை அதிகரிக்கப் போகிறது. அதற்கு எதிர்ப்புகள் எழுகின்ற போது சமாளிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே ஊடகங்களுக்கு பூட்டுப்போட்டு வைக்கும் விதத்திடலயே மீண்டும் பத்திரிகை சபை அமுலுப்படுத்தப்பட விடுக்கிறது.

வித்தியாசமான கருத்துக்கள் ஜனநாயகத்தின் மதிப்பிற்குரிய பக்கமாகும் என்று சொல்லப்படுவதுண்டு. இலங்கையின் தேசிய ரீதியான ஊடகங்கள் சமூக மாற்றத்திற்கான கருத்துக்களை பரப்புவனவான இல்லை. ஊழல் மோசடிகள் அதிகார துஷ்பிரயோகங்கள் பற்றிய தகவல்களை வெளிக் கொண்டு வருவனவாக செயற்பட்டுவருகின்றன என்பதனை மறுப்பதற்கில்லை. அந்த அம்பலப்படுத்துகையினால் அரசாங்கம் அசௌகரி யத்திற்குள்ளாவதுண்டு. இலங்கையின் ஊடகங்கள் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் இனவாதக் கருத்துக்களை பரப்பிக் கொண்டிருந்தால் ஆளும் வர்க்கம் மகிழ்வடைதுண்டு.

ஆனால் நாட்டின் நலன்கருதி அல்லது மக்களின் நலன்கருதி தகவல்களை கொடுக்கும் போதும் அம்பலப்படுத்தும் போதும் ஆளும் வர்க்கத்தினால் தேசத் துரோகமாகவே முத்திரை குத்தப்படுகிறது. அதன் மூலம் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் நியாயப்படுத்தப்படுகின்றன.

ஊடகங்களுக்கு எதிராக இப்போது தான் முதன்முறையாக அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன என்று கூறமுடியாது. ஆனால் தற்போதைய அடக்குமுறைகள் அதிகரித்த நிலையில் இருக்கின்றன. அவை சட்டத்திற்குட்பட்டும் வெளியேயும் நிகழ்த்தப்படுகின்றன.

ஊடகங்களுக்கு எதிரான பத்திரிகை சபை உட்பட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களும் நீக்கப்பட வேண்டும். சட்டத்திற்கு அப்பாலான நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும். தேசப்பற்றின் பெயரில் ஊடகங்களை அடக்கி ஜனநாயகத்தை மறுக்கும் எல்லா நடவடிக்கைகளும் கைவிடப்பட வேண்டும். அதன் வழியில் பத்திரிகைச் சபைச் சட்டம் கொண்டு வருவது நிறுத்தப்பட வேண்டும் என்பதே நமது வற்புறுத்தலாகும்.

**ஆசிரியர் குழு**

# தமிழ் மக்களின் தலைவிதியை யார் தீர்மானிப்பது!

**வெகுஜனன்**

தமிழ் மக்கள் இன்று சகல நிலைகளிலும் அவலங்களுக்குள்ளாகி செய்வதறியாது தவித்து நிற்கின்றனர். உயிரழிவுகள் இடப் பெயர்வுகள் சொத்தழிவுகள் போன்றவற்றால் ஏற்பட்ட பல்வகை இழப்புகளின் மத்தியில் நிர்க்கதிக்கு உள்ளாகிய வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். கடந்த முப்பது வருட பேரினவாத யுத்தமும் ஆயுதம் தாங்கிய போராட்டமும் தமிழ் மக்களின் வாழ்வையும் வளங்களையும் பாழ்படுத்திவிட்டன. அத்துடன் 5/19இன் இறுதிப் போர்க்களத்தில் பேரினவாத ஒடுக்குமுறையாளர்களுக்கு கிடைத்த வெற்றியும், தங்களை விட எவரும் இல்லை எனப் போராடி நின்ற புலிகள் இயக்கத்தின் தோல்வியும் அழிவும் மூன்று லட்சம் வரையான தமிழ் மக்களை முட்கம்பிவேலி முகாங்களுக்குள் தள்ளிவைத்தது. அதே வேளை முப்பதினாயிரம் முதல் ஐம்பதினாயிரம் வரையான மக்கள் இறுதிக் கட்டப் போரில் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற ஊகங்கள் ஆங்காங்கே வெளிவரத் தொடங்கியுள்ளன. இதுவரையான முப்பது வருட யுத்தம் போராட்டம் என்பனவற்றால் குத்துமதிப்பாக இரண்டரை லட்சம் தமிழ் மக்கள் கொன்றழிக்கப்பட்டுள்ளனர். பலநூறு கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டில் ஐந்து லட்சம் மக்கள் வரை அகதிகளாகினர். புலம் பெயர்ந்த நாடுகளில் பத்து லட்சம் வரையானோர் சென்றடைந்தனர். சொந்த மண்ணில் இறுதிவரை வாழ்ந்து வந்த மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களைச் சுமந்த வண்ணம் நம்பிக்கை ஒன்றை மட்டும் வைத்து வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு வடக்கு கிழக்கின் ஒவ்வொரு தமிழ் மனிதர்களுக்குப் பின்னாலும் ஒரு நீண்ட சோக வரலாறு படிந்திருப்பதைக் காணலாம்.

இத்தகைய வரலாற்று அழிவுகளுக்கும் சிதைவுகளுக்கும் சின்னாபின்னப்பட்டிருப்பதற்கும் யார் காரண கர்த்தாக்கள். மூன்று தரப்பினரே இவை அனைத்திற்கும் காரணகர்த்தாக்களும் பொறுப்பு தாரிகளுமாவர். முதலாவது தரப்பாக இலங்கையில் பௌத்த சிங்கள பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கமே இருந்து வந்திருக்கிறது. இரண்டாவது தரப்பாக தமிழ்க் குறுந்தேசியவாதத் தலைமைகள் பாராளுமன்றத் தளத்திலும் ஆயுதப் போராட்டத் தளத்திலும் இருந்து வந்துள்ளனர். மூன்றாவது, இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகள் ஒருபுறமாகவும் அமெரிக்க மேற்குலக மேலாதிக்க சக்திகள் மறுபுறமாகவும் இருந்து யுத்தம் - போராட்டம் என்பனவற்றுக்கு எண்ணெய் வார்த்து அப்பெரு நெருப்பில் குளிர்காய்ந்து தத்தமது நலன்களைப் பாதுகாத்து விரிவுபடுத்தியும் கொண்டனர்.

இம் மூன்று தரப்பினரதும் அரசியல் பொருளாதார ராணுவ காய்நகர்த்தல்களுக்கும் ஏமாற்றுகளுக்கும் தமிழ் மக்கள் பலியாகினர். வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகளையும் இருப்பையும் எதிர்காலத்தையும் சிதைக்கும் நோக்குடனேயே பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் ஆட்சியதிகாரத்தின் மூலமாகத் தொடர்ச்சியாக ஒடுக்குமுறையைப் பிரயோகித்து வந்துள்ளன. அதனை உரிய அரசியல் கொள்கை நிலைநின்றும் சரியான போராட்ட தந்திரோபாயங்களைப் பயன்படுத்தியும் பரந்துபட்ட வெகுஜனப் போராட்ட மார்க்கத்தை தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் முன்னெடுக்கவில்லை. அதே சூழலை இந்தியாவும் அமெரிக்க மேற்குலக சக்திகளும் தத்தமது வல்லரசு நலன்களுக்குப் பயன்படுத்திக் கொண்டன. இவற்றின் ஒட்டு மொத்த விளைவையே இன்று தமிழ் மக்கள் அனுபவித்து நிற்பது மட்டுமன்றி திக்குத் தெரியாத அரசியல் வனாந்தரத்திலும் விடப்பட்டுள்ளனர்.

இவ்வாறு எதிர்காலமே இருள் சூழ்ந்துள்ள அந்தகார நிலையில் தமிழ் மக்களின் தலைவிதியை யார் தீர்மானிப்பது என்றதொரு பாரிய கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இக்கேள்விக்கு உரிய சரியான விடையைக் கண்டறியும் பொறுப்பும் தேவையும் சாதாரண உழைக்கும் மக்களான பரந்துபட்ட தமிழ் மக்களிடமே உண்டு. தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் அரசாங்க தனியார் துறை ஊழியர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் சிறுதொழில் செய்வோர், சிறிய வியாபாரிகள் எனும் பரந்த தளத்தில் உள்ள மக்கள் தான் தமது தலைவிதியைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். கடந்த காலங்களில் தொடரப்பட்டு வந்த தமிழ்த் தேசியவாதத் தலைமைகளின் பிற்போக்குத்தனங்கள் பற்றிய மறுமதிப்பீட்டையும் விமர்சனத்தையும் அவர்கள் பகிரங்கமாக முன்வைக்க வேண்டும். திறந்த மனதுடனான அரசியல் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு ஆரம்பத்தில் குறிப்பிட்ட மூன்று தரப்புச் சக்திகள் பற்றிய அரசியல் உரையாடல்கள் விவாதிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு அரசியல் கட்சி பற்றியும் அவற்றின் கொள்கைகள் தலைமைகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் பற்றியெல்லாம் மக்கள் மன்றத்தில் சுதந்திரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு விசாரிக்கப்படல் வேண்டும். அதன் மூலம் சரிபிழைகள் மக்களால் தீர்மானிக்க முடியும். தமிழ் மக்களின் இன்றைய அவலவாழ்வில் இருந்து விடுபடவும் எதிர்காலத்திற்கான சரியான அரசியல் பாதையைத் தேர்ந்தெடுத்து பயணம் மேற்கொள்ளவும்ட இதனைவிட வேறு மார்க்கம் இல்லை. எதிர்காலத்திற்குரிய அத்தகையதொரு ஆரோக்கியமான அரசியல் பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கு தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் முன்வரமாட்டார்கள். ஏனெனில் எல்லோரும் அரசியல் இரத்தக் கறைபடிந்த கரங்களுடன் இருந்து வருவது தான். அவர்களிடம் அரசியல் மனச்சாட்சி இருக்கப் போவதும் இல்லை. தமது கறைகளையும் தவறுகளையும் ஏமாற்றுக்களையும் இயலாமைகளையும் விமர்சனங்களுக்கு உள்ளாக்கி மனம் திறந்த கலந்துரையாடல்களுக்கு வரத் தயாராக இல்லை என்பதையே காணமுடிகிறது. தமிழரசு, தமிழ் காங்கிரஸ் முன்னாள் ஆயுத இயக்கங்கள் யாவும் தத்தமது பழைமைவாதப் பிற்போக்குத் தனங்கள் கொண்ட தமிழ்த் தேசியவாத ஆதிக்க அரசியல் நிலைப்பாட்டிலிருந்து விடுபடத்தயாராக இல்லை. முற்போக்கான ஒரு தேசியவாத அரசியலைக் கூட முன்னெடுக்க அவர்கள் முன்வரமாட்டார்கள். அவர்களுக்கு முன்னால் உள்ள ஒரே தெரிவாக இருப்பது அடுத்து வர இருக்கும் பாராளுமன்றத் தேர்தலாகவே உள்ளது. இன்றைய பேரவலச் சூழலுக்குள் சிக்கியிருக்கும் மக்களை இந்தியாவினதும் மேற்குலகத்தினதும் அழுத்தங்களின் ஊடாக விடுவித்து வைத்தால் அதுவே தமக்குரிய பழிபாதங்களுக் கான பாவமன்னிப்பாகி விடும் என்ற நம்பிக்கையிலேயே இருந்து வருகிறார்கள்.

5/19இல் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதில் மேலே குறிப்பிட்ட அத்தனை தமிழ்த் தேசியவாதக் கட்சிகளுக்கும் மனமார்ந்த திருப்தியேயாகும். அதன் ஊடாகத் தமது பாராளுமன்றப் பதவிகளுக்கு சற்றுப் பின்னடைவு ஏற்பட்டாலும் அதனை மீட்டெடுப்பதற்கான உள்ளார்ந்த உபாயங்களுடனேயே இத்தலைமைகள் காத்திருக்கின்றன. அதன் வழியிலேயே இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களை அடைவு வைப்பதற்கு எவ்வித வெட்க ரோசமும் இன்றி கெஞ்சி வருகிறார்கள்.

இவ்விடத்திலே தான் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் புதியதோர் அரசியல் விழிப்புணர்வு உருவாக வேண்டும். அரசாங்கத்துடன் இணங்கிப் போகவும் முடியாது. பழைய தமிழ்த் தலைமைகளை நம்பி ஏமாறவும் முடியாது என்ற நிலையில் தமக்கான அரசியல் தலைவிதியைத் தமிழ் மக்கள் தாமே தீர்மானிப்பதற்கு முன்வரல் வேண்டும். கடந்து வந்த அழிவுகளையும் இழப்புக்களையும் இழிவுகளையும் பட்டறிவாகக் கொண்டு புதிய அரசியல் திடசங்கற்பத்துடன் தமிழ் மக்கள் பயணிக்கத் தயாராக வேண்டும். இத்துணைக்கும் மத்தியில் இந்த மண்ணில் மனவைராக்கியத்துடன் இருந்து வந்த மக்கள் தான் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான உரிமையும் உறுதியும் இம் மக்களிடம் தான் இருக்க வேண்டும். இதனைத் தட்டிப் பறித்து பழைய பாதையில் பயணிக்க திட்டமிட்டு வரும் தமிழ்த் தேசியவாதத் தலைமைகளை தமிழ் மக்கள் நிராகரித்து நிற்க வேண்டும். இந்தியாவையும் அமெரிக்க மேற்குலகத்தையும் அடிமைத்தனமாக நம்பும் போக்குத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதறகு அப்பாலும் புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து வரும் தமிழ் மேட்டுக்குடி உயர்வர்க்கத் தமிழர்கள் எறிந்து கொள்ளும் எத்தகைய கயிற்றையும் இலங்கைத் தமிழர்கள் பற்றிக் கொள்ள முடியாது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற அவர்களது புதுப்பாட்டு அவர்களது பிழைப்பிற்கும் இருப்பிற்குமே அன்றி மண்ணில் வாழ்ந்து வரும் மக்களின் உரிமைகளை மீட்பதற்காக அல்ல. இத்தகைய புலம்பெயர்ந்த தமிழ்ச் சீமான்களும்

தொடர்ச்சி 10ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சிவில் சமூகம் என்பது வறியவர்களின் சக்கரவர்த்திகளல்ல!

அடக்குமுறை நிறைந்த கலவரங்கள், யுத்தம், இயற்கை அனர்த்தம் போன்ற சூழ்நிலைகளில் அரசாங்கம் என்பது மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருக்கும். அரசிற்கும் அரசாங்கத்திற்கும் மாறான எதிரான அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், அடக்கு முறைகளுக்கு உட்பட்டு எதிர்ப்பு நிலையில் இருக்கின்றபோது சிவில் சமூகத்திற்கு பாரிய பொறுப்பு இருக்கிறது. சிவில் சமூகம் என்பதில் அரசியல் சார்பில்லாத என்று கூறுவதைவிட அரசியல் கட்சிகளின் சார்பில்லாத மக்களின் உரிமைகளில் அக்கறையுள்ள பொதுநலன் சார்ந்த புத்திஜீவிகள் புலமை சார்ந்தவர்கள் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மதத்தலைவர்கள் போன்றோர் உள்ளடங்குவர். இவர்களினால் அரசியல் கட்சி சாராது நின்று மக்கள் சாரர்பாக அமைப்புக்களைக் கட்டியெழுப்பி நிலைமைகளுக்கு ஏற்றவாறு செயல்பட முடியும். இவர்கள் அரசியல் நடவடிக்கைகளுக்கு மேலாக நின்று செயற்படுவதேயன்றி மக்களின் சார்பாக நின்று சுதந்திரமாக செயற்பட்டு அமைதியற்ற சூழலை களைவதற்கு பெரும் பங்காற்றக் கூடியவாறு சிவில் சமூகம் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் நோக்கம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதல்ல சமூக நீதியை நிலைநாட்ட செயறபடுவதாகும்.

## சிவில் சமூகம் என்பதன் அர்த்தம்

விரிந்த பார்வையில் சிவில் சமூகம் என்பது சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அமைப்புகள், யுத்த எதிர்ப்பு, சாதிய எதிர்ப்பு, பெண் விடுதலை, இன உரிமை போன்றவற்றுக்கான அமைப்புகள் தேசிய நீரோட்டத்திற்குள்ளடங்காத மாற்று அமைப்புகளை சிவில் சமூகம் என்று கூறலாம். இந்த அமைப்புகள் பலமாக இருக்கின்ற போது எந்த சூழ்நிலையிலும் மக்களின் மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதனை கம்யூனிஸ்ட்டுகள் கட்சிக்கு வெளியிலான பரந்த மக்கள் தளத்தைக் கொண்ட வெகுஜன அமைப்புகள் என்று கூறுவர். இவை கட்சியின் விரிவாக்கமாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

இன்றைய சூழ்நிலையில் அதிகமான புத்திஜீவிகள் அரச சார்பற்ற நிறுவனங்களால் உள்வாங்கப்பட்டுள்ளதால் அரச சார்பற்ற நிறுவனங்களையே சிவில் சமூகம் என்று குறுகியவாறு அர்த்தம் கற்பிக்கும் ஆபத்து இருப்பதை அவதானிக்க முடியும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தோற்றத்தில் அரசின் அடக்குமுறைகளுக்கும், அதிகாரத்துவத்திற்கும் எதிராகச் செயற்படுவதாகத் தெரிந்தாலும் உள்ளார்ந்த அர்த்தத்தில் ஏகாதிபத்தியத்திற்கும். அடக்குமுறை அரசுகளுக்கும் எதிராக செயற்படுகின்றனவா என்பதை அறிந்து கொள்வதன் மூலம் அவை சிவில் சமூகமா என்பதை புரிந்து கொள்ள முடியும்.

அடிப்படையில் சிவில் சமூகம் என்பது அரசாங்கத்திற்கும் அதனுடன் முரண்படுகின்ற அரசியல் அமைப்புகளுக்கிடையில் தரகராகவன்றி மக்களின் நலன்சார்ந்து மக்களின் பக்கம் நின்று செய்படுவதாகும். அதன் மூலம் பல சந்தர்ப்பங்களில் அரசுடன் முரண்படுகின்ற அடக்குமுறை, யுத்த, கலவர இயற்கை அனர்த்த சூழ்நிலைகளில் இயங்கிக் கொண்டு அரசாங்க நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கும் அரச சார்பற்ற நிறுவனம் சிவில் சமூகமாகாது.

## அரசசார்பற்ற நிறுவனம்

வெகுஜன அமைப்புக்களை மக்களின் பலத்தின் மீது தங்கியிராமல் அந்நிய நாட்டு நிதியிலும், அந்நிதியை வழங்குபவர்களின் கொள்கை கட்டுப்பாட்டிற்கு இணங்குவதாகச் செய்வதும், வெகுஜனப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான போராட்டங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு நிதி மற்றும் வளங்களை வழங்கும் நிறுவனங்களாக மாற்றுவது அரச சார்பற்ற நிறுவன வேலை ஆகும். இருக்கின்ற அமைப்பிற்குள் திட்டங்களை தீர்வுகளை சற்று திருத்துவது போல் பேண்தகு முறைகளை செயலூக்கமுள்ள முறைகளை சாத்தியமான வழிமுறைகள் என்று கூறி நடைமுறைப்படுத்த அரசாங்கத்திற்கு ஒரு வகையில் உதவுவதையே அந்நிறுவனங்கள் செய்கின்றன. அதாவது அரசாங்கம் முன்வைக்கும் திட்டங்களை மக்கள் எதிர்க்கின்ற போது மக்களுடன் சேர்ந்து செயற்படுவதாக பாசாங்கு செய்து அத்திட்டங்களை நிறுத்துவதற்கோ மாற்றுவதற்கோ முன்வருவதில்லை. பதிலாக சாத்தியமான பேண்தகு மாற்றங்களை செய்து நடைமுறைப்படுத்துவதற்காக மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் இருந்து கொண்டு மக்களின் சார்பாக செயற்படுவது போன்று காட்டிக் கொண்டு சிற்சில மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்துவதற்காக உண்மையில் அரசாங்கத்திற்கு உதவுகின்ற அனுசரணையை மக்களிடமிருந்து பெற்றுக் கொடுப்பதனையே அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்கின்றன. மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பது போன்றும் போராட்டங்களை சமரசத்திற்கு கொண்டு செல்லும் கருவியாகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவைகள் மக்களுக்கன்றி அவற்றுக்கு நிதியை வழங்குபவர்களுக்கே பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவையாகும்.

## வெகுஜன அமைப்புகள்

இலங்கையில் சூரிய மலர் இயக்கம், வடக்கில் சிறுபான்மையோர் மகாசபை, தீண்டாமைக்கு எதிராக வெகுஜன இயக்கம், மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் மலையகத்தில் மேல் கொத்மலை நீர்மின் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம், கொழும்பில் சேது சமுத்திரத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் போன்றன அரச சார்பற்ற நிறுவன ஆதிக்கமில்லாத வெகுஜன இயக்கங்களுக்கு சில உதாரணங்களாக கொள்ளலாம். இவ்வியக்கங்கள் இடைநடுவே விட்டுக் கொடுப்போ சமரசமோ இன்றி செயற்பட்ட இயக்கங்களாகும்.

முதலாம் உலக யுத்தத்தின் போது ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் இரண்டாம் உலக யுத்தத்தின்போது பாசிசத்திற்கும் நாசிசத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராகவும் சிவில் சமூகம் பாரிய பங்களிப்பை செய்துள்ளது. மார்டின் லூதர் கிங் போன்றவர்களின் சிவில் உரிமை போராட்டங்களும் குறிப்பிடத்தக்கன.

இலங்கையில் 1980 1990 களில் யுத்தத்திற்கு எதிரான இயக்கங்களில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு இருந்ததெனலாம். யுத்த எதிர்ப்பு இயக்கத்தை அரச சார்பற்ற நிறுவனங்கள் கையேற்ற பிறகு யுத்த எதிர்ப்பு என்பது அந்நிறுவனங்களில் செயல்திட்ட அறிக்கைக்கு வரையறுக்கப்பட்டதுடன் பெரும்பான்மை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ள முயற்சித்த நடவடிக்கைகள் பலனளிக்கவில்லை யுத்தத்தினால் அகதி களாக்கப்பட்டுள்ள 3 லட்சம் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சிவில் அமைப்பொன்று நிறுவப்படவில்லை. ஏற்கனவே சிங்கள மக்கள் மத்தியில் இருந்த யுத்த எதிர்ப்பு குறைவடைந்து பின்னர் இல்லாமல் போய் விட்டது.

இவ்வாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் சிவில் சமூகத்தின் இடத்தை நிரப்புவதாக செயற்பட்டு மக்கள் போராட்ட இயக்கங்கள் பல இருந்த இடமே தெரியாது போயுள்ளன. கம்யூனிஸ் சோசலிச வேலைத்திட்டங்களை முறியடிக்கும் நோக்கில் ஏகாதிபத்தியத்தினால் ஏற்படுத்தப்பட்டதே அரச சார்பற்ற அல்லது தொண்டு நிறுவனங்கள் என்பதை கவனத்தில் கொள்வது அவசியம்.

காலனியாதிக்க காலத்திற்கு முன்பிருந்தே சமூக அபிவிருத்தி சமூக வளர்ச்சித்திட்டங்கள் போன்ற பெயர்களில் பல தன்னார்வ அமைப்புகள் இயங்கின. திருச்சபைகள், சமூகநல கழகங்கள் போன்றவற்றை உதாரணமாக கொள்ள முடியும். உலக திருச்சபை ஏகாதிபத்திய எதிர்ப்பை கொண்டியங்க பல இடதுசாரி குழுக்களும் நிதியுதவி செய்தன. அவை சரியான திசை வழியில் இயங்காமல் தடம் புரண்டன.

## நவகாலனித்துவம்

பின்னர் நவகாலனித்துவ, உலகமயமாதல், சூழ்நிலையில் ஐ.நாவும் அதன் முகவரமைப்புகளும் முற்றாகவே அரச சார்பற்ற நிறுவனங்களாகவே இயங்குகின்றன. 1980களில் உலகை சிவப்பு அபாயத்தில் இருந்து காப்பாற்றும் செயல் திட்டங்களாக முன்வைக்கப்பட்ட யோசனைகளில் மனிதநேய நிறுவனங்கள், தன்னார்வ குழுக்களை உருவாக்கி வளர்த்தல் என்பது முக்கிய இடம்பெற்றிருந்தது. இரண்டாம் உலகமகா யுத்தத்தை அடுத்து அமெரிக்கா போர்ட் அறக்கட்டளை வேல்ட்விசன், கெயர் போன்ற தன்னார்வ அல்லது தொண்டு நிறுவனங்களை உருவாக்கியது. 1950களில் 1960களில் நலன்புரி அரசுகள் என்றபேரில் சோசலிச நாடுகளில் செய்யப்பட்ட சமூக நலன்புரி திட்டங்களை முதலாளித்துவ அரசுகளும் முன்னெடுத்தன. ஏகாதிபத்தியங்கள் அவற்றில் சுரண்டலை விரிவுபடுத்தவும் மூடிமறைக்கவும் சோசலிச பாதையை மக்கள் நாடாது தடுக்கவும் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை அரச சார்பற்ற அல்லது தொண்டு நிறுவனங்களினூடாக முன்னெடுத்தன. அவற்றுக்கு பெருந்தொகைப் பணத்தை இனாமாக கொடுக்கலாயின. சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க நிறுவனம், முன்னேற்றத்துக்கான கூட்டணி, கனடா சர்வதேச வளர்ச்சி நிறுவனம், பொருளாதார கூட்டுறவு ஜேர்மனிய அமைச்சு, பிரிட்டன் தொலைதூர வளர்ச்சி அமைச்சு. ஐரோப்பிய சமூக வளர்ச்சிக்கான கமிட்டி ஆகியவற்றை உதாரணமாக கூறமுடியும். இவை நேரடியாக சில நாடுகளில் இயங்குகின்றன. சில நாடுகளில் வேறு பெயர்களில் அரசசாரா நிறுவனங்களை அமைத்து அவற்றுக்கு நிதியுதவி செய்து வருகின்றன.

1960 ஆம் ஆண்டு அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களை இணைக்கும் வகையில் சர்வதேச தன்னார்வ அல்லது தொண்டு நிறுவனங்களின் கவுன்சில் அமைக்கப்பட்டது. அதன் தலைமையகம் ஜெனிவாவில் இருக்கிறது. அத்துடன் ஏகாதிபத்திய உளவு நிறுவனங்களும், தனிநபர்களும் சர்வதேச வலைப்பின்னல் ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் அரசசாரா அமைப்புகளை உருவாக்கின.

நவகாலனித்துவம் பல வழிகளில் செயற்படுகிறது. அதில் அரசசாரா நிறுவனங்களை அமைத்து அவற்றுக்கு நிதியுதவி வழங்குவது ஒரு வழியாகும். உலகமயமாதல் சூழ்நிலையில் உலக மூலதனம் பன்னாட்டு கம்பெனிகளின் கட்டுப்பாட்டிற்கு வந்ததுடன் சுரண்டலை தீவிரப்படுத்தியதுடன் பன்னாட்டு கம்பெனிகள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்தும் வருகின்றன.

அரசசார்பற்ற நிறுவனங்கள் கல்வி, சமூக அபிவிருத்தி, மனித உரிமைகள், ஜனநாயக சிவில் உரிமைகள், சிறுவர்கள் முதியோர் சூழல் பாதுகாப்பு போன்ற பலதுறைகளுக்குமானதாக இயங்குகின்றன. தொழிற் சங்கங்களின் வேலைத்திட்டங்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அல்லது நிதியின் செல்வாக்கு ஊடுருவி உள்ளது. பல அரசியல் கட்சிகளின் விரிவாக்கங்களாக அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்குவதுடன் நிதிவழங்கும் நிறுவனங்களாகவும் இருக்கின்றன.

## பெயர்களைக் கவனியுங்கள்

ஜேர்மனியின் அரசசார்பற்ற நிறுவனங்கள் தொழிற்சங்க, அரசியல் கட்சிகள் மீது செல்வாக்கு செலுத்துவனவாக இருக்கின்றன. பிரடரிக் ஈபேர்ட் மன்றம் என்பது உலக நாடுகளிலுள்ள தொழிற் சங்கங்களுக்கு பெருமளவில் நிதியுதவி வழங்கி வருகிறது. ஈபேர்ட் என்பவர் முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஜேர்மனின் தலைவராக இருந்து அடக்குமுறை ஆட்சி நடத்தியவராவார். அவரின் ஆட்சிக்காலத்திலேயே ரோசா லக்சம்பேர்க், கால்லீப்னெட் உட்பட பல கம்யூனிஸ்ட் தலைவர்கள் கொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் பெயரிலான நிதியமே உலகநாடுகளில் தொழிற்சங்க உரிமைகளுக்காக நிதியுதவி வழங்குமென்பது கேலிக்குரியதாகும். அதேபோன்று ஜீ.ரீ.இசட் என்ற ஜேர்மனிய அமைப்பினூடாக கல்விக்காக நிதியுதவி செய்யப்படுகின்றது. ஹிட்லரினுடைய தளபதிகள் சிலரின் பெயர்களிலும் அவர்கள் செய்த பாவங்களை கழுவுவதற்காகவோ என்னவோ பல தன்னார்வ நம்பிக்கை நிதியங்கள் இயங்குகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை நாடுகளின் கூட்டமைப்பாக அமைக்கப்பட்டபோதும் நாளடைவில் அது ஏகாதிபத்தியங்களின் சொத்துடைமையாகி அதுவும் அதன் கீழ் இயங்கும் முகவர் அமைப்புகளும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களாகவே இயங்குகின்றன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அமைப்புகள் வளர்முக நாடுகளை ஆட்டிப்படைக்கின்ற சர்வதேச நிறுவனங்களாக இருக்கின்றன.

இரண்டாம் உலக யுத்தத்தை அடுத்து தொடக்கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவை சங்கம் சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற மனிதாபிமான அமைப்புகளும் அரச சார்பற்ற நிறுவனங்களாகவே இயங்குகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்களை ஐ.நா.சபையுடன் இணைந்துள்ளவை, நாட்டு எல்லைகள் கடந்து செயற்படும் சர்வதேச நிறுவனங்கள், உள்நாட்டு அரச சார்பற்ற நம்பிக்கை நிதியங்கள், தொண்டு நிறுவனங்கள் என வகைப்படுத்தலாம். இவை அரச சார்பற்ற அல்லது தொண்டு அல்லது நம்பிக்கை நிதியங்கள் அல்லது தன்னார்வ குழுக்கள் என்று அழைக்கப்பட்டாலும் அடிப்படையில் அவை நிவாரண நிறுவனங்களாக இயங்குகின்றன எனலாம். உள்நாட்டு நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்களினது அல்லது சர்வதேச தனிநபர்களின் நிதியையும் வேலைத்திட்டங்களையும் கொண்டே இயங்குகின்றன.

அவை தத்துவார்த்த ரீதியாக இருக்கின்ற சமூக அமைப்பை ஒப்பீட்டு ரீதியில் இன்னொரு அமைப்பை அல்லது எதிலும் மாற்று தேவை என்று கூறினாலும் இருக்கின்ற சமூக அமைப்பிலே சிறப்பான வாழ்க்கையை வாழலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுவனவாக செயற்படுகின்றன.

அரசிற்கு வெளியில் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நிவாரண கேந்திரங்களாக நலன்புரி நிறுவனங்களாக மாற்றுக் கொள்கைத் திட்டங்களை பிரேரித்து, பிரசாரம் செய்பவைகளாக இயங்குகின்றன. வர்க்க ரீதியாக அடக்கப்படுவதற்கு எதிராக மக்கள் போராடவோ சமூகத்தை மாற்றியமைக்கவோ தேவை இல்லை என்ற அடிப்படையிலேயே அவற்றின் செயற்பாடுகள் இருப்பதை அவதானிக்க முடியும்.

## நிவாரண மையங்கள்

இன்று வளர்முக நாடுகளில் அரசாங்கங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் இல்லாது செயற்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனலாம். இயற்கை அனர்த்தம், போர்க்காலம், போருக்கு பிந்தியகாலத்தில் கண்ணிவெடி அகற்றுவது,

10ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# ஐ.நா

தமிழ் மக்களின் உரிமைகளைத் தமிழ் மக்களே போராடி வென்றெடுக்க வேண்டும் என்ற நம்பிக்கை தமிழ்த் தேசிய வாதிகளிடம் என்றுமே இருந்ததில்லை. பாராளுமன்றப் பிரதிநிதிகள் பேசி வெல்வார்கள் என்ற நம்பிக்கையே எப்போதும் ஊட்டப்பட்டு வந்தது. ஒரு விதமான வேலைத்திட்டமும் இல்லாமல் 1961ம் ஆண்டு சந்தியாக்கிரகம் தொடக்கப்பட்டது. ஆனால் அதை ஒரு மக்கள் போராட்டமாகக் கொண்டு நடத்தும் நோக்கமோ திட்டமோ இருக்கவில்லை என்பது சத்தியாக்கிரகம் தோல்வியடைந்ததோடு தெளிவானது. 1976ம் ஆண்டு வட்டுக் கோட்டைத் தீர்மானத்திற்கும் அதுவே நடந்தது. தமிழ்த் தேசியவாதத்தின் கோரிக்கைகள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம், மொழியுரிமை, சமஷ்டி ஆட்சி, தனிநாடு என்று அரசியற் சூழலின் நிர்ப்பந்தங்களால் மாற்றமடைந்த போதிலும், கொலனிய எசமானர்களோ இந்தியாவோ அமெரிக்காவோ வந்து தீர்த்து வைக்கும் என்கிற எதிர்பார்ப்பே எப்போதும் இருந்து வந்தது.

தமிழர் விடுதலை இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த காலத்தில் இந்தியாவின் மீதான நம்பிக்கை தீவிரமாக இருந்து வந்தது, குறுகிய காலத்தினுள்ளேயே ஒரு பேரழிவிற் போய் முடிந்தது. ஆனாலும் எந்தவிதமான பயனுள்ள பாடங்களும் கற்கப்படவில்லை.

1987முதல் இந்திய மேலாதிக்கத்திற்கு எதிராகப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கு இருந்தது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தனது மேலாதிக்கத் தேவைகட்காகப் பயன்படுத்துவதுடன் தன் எடுபிடிகளைத் தவிர வேறெவரையும் மேலெழ இந்தியா அனுமதிக்காது என்பதை விளங்கிக் கொண்ட விடுதலைப் புலிகளுக்கு இந்தியா மட்டுமல்லாம் இந்தப் பிராந்தியத்தில் மேலாதிக்கத்தை வேண்டி நிற்கும் எந்த வல்லரசுமே அதே விதமாகவே நடந்து கொள்ளும் என்பது விளங்காமல் இருந்திருக்க முடியாது.



இந்தியாவைப் பகைத்துக் கொண்ட சூழ்நிலையில் இன்னொரு வல்லரசின் ஆதரவைத் தேடுவதற்கான நிர்ப்பந்தம் விடுதலைப் புலிகட்கு இருந்ததாகக் கூற முடியாது. அப்படி இருந்திருந்தாலும், தமிழ் ஈழம் என்ற தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்குமளவுக்கு இலங்கை அரசாங்கத்துடன் முரண்படக்கூடிய ஒரு வல்லரசும் இருக்கவில்லை. சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்பு அதற்கான வாய்ப்பே இருக்கவில்லை.

9/11 எனப்படும் அமெரிக்காவில் நடந்த பயங்கரப் பேரழிவின் பின்பு, உலகின் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டம் எதையும் விட்டுவைக்க அமெரிக்கா ஆயத்தமாக இல்லை என்பது தெளிவாகி விட்டது. எனவே இலங்கையின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்குவதும் அமெரிக்காவின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது என்பது அமைதிப் பேச்சுவார்த்தைகளில் இடைஞ்சல்கள் ஏற்பட்ட காலத்தில் தெட்டத்தெளிவான விடயம். அமெரிக்க நிலைப்பாடு என்றுமே விடுதலைப் புலிகட்கு ஆதரவு என்பதாக இருக்கவில்லை. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற கருத்தைக் கூட அமெரிக்கா நிராகரித்து வந்துள்ளது. எனவே விடுதலைப் புலிகளும் அவர்கட்கு ஆதரவாளர்களும் 2006 முதல் போர் தீவிரப்படுத்தப்பட்ட சூழலில் அமெரிக்கத் தரப்பிலிருந்து எதிர்பார்க்கக் கூடியதெல்லாம் போர் நிறுத்தத்தையும் பேச்சு வார்த்தைகளையும் வற்புறுத்தி அமெரிக்காவும் மேற்குலகும் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்குவாரங்களைக் கொடுக்க வேண்டும் என்பது தான். ஆனால் அமெரிக்கா இவ் விடயத்தில் ஒரு உறுதியான தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. போர் நிறுத்தத்தை வலியுறுத்துகிற விதமாகத் தொடர்ச்சியான நெருக்குவாரம் போரின் அகோரமான இறுதிக் கட்டத்திற் கூட வழங்கப்படவில்லை. இந்தியாவுடனான மேலாதிக்கப் போட்டியின் வெளிப்பாடாகவே போர் நிறுத்தத்தைக் கோருவதும் பேசாமலிருப்பதும் அமைந்திருந்தது.

பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தவரை, விடுதலைப் புலிகள் 2003ம் ஆண்டு பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டதற்கான நியாயங்களைப் பற்றிய அக்கறை எதுவுமின்றி, அந்த நிகழ்வின் பின் அமெரிக்காவிற்கு விடுதலைப் புலிகள் மீதான அதிருப்தியே ஓங்கியிருந்தது. அதை, அமெரிக்காவின் இலங்கைத் தூதர்கள் முதல் தென்னாசிய அலுவலங்கட்குப் பொறுப்பான பிரமுகர்கள் வரை, ஒவ்வொருவருமே வேறுபடும் அளவுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். போர் 2006ம் ஆண்டு முனைப்புற்ற பிறகு அமெரிக்கா பேச்சுவார்த்தைகளைப் பற்றிப் பேசிய ஒவ்வொரு தருணத்திலும் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது என்பதை யாரும் மறக்கலாகாது.



எனவே, அமெரிக்கா தனித் தமிழீழம் என்ற தமிழ்த் தேசிய வாதக் கனவுக்கு எந்த வகையிலும் உடன்பாடானதல்ல என்பது சில புலம் பெயர்ந்த மேட்டுக்குடி மரமண்டைகளைத் தவிர வேறு எவருக்கும் எளிதாகவே விளங்கியிருக்க வேண்டும். எப்படி இந்தியா பங்களாதேஷ் உருவாக்கத்துக்கு ஒரு கருவியானதை வைத்து அது தமிழீழத்தை உருவாக்க உதவும் என்று சிலர் கனாக் கண்டார்களோ, அது போலவே வேறு சிலர் கொசோவோவைக் காட்டி அமெரிக்கா தமிழீழத்தின் தோற்றத்துக்கு உதவும் என்றும், கிழக்கு தீமோரின் தோற்றத்தில் ஐ.நா. படைகள் வகித்ததாகச் சொல்லப்படும் பங்கை வைத்து இலங்கையிலும் அவ்வாறான ஒரு வாய்ப்பு உண்டு என்றும் கனவு கண்டார்கள். இன்னுஞ் சரியாகச் சொல்வதானால் கனவுகளைப் புனைந்து மக்கள் மத்தியில் உலாவ விட்டார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கு, அதன் நியாயங்கள் பற்றிய எவ்விதமான

# அமெரிக்கா

அக்கறையின்றி, முழு மேற்குலகும் பகைமையாக நின்று நோர்வேயை விட அனைத்து ஐரோப்பிய நாடுகளும் விடுதலைப் புலிகட்குத் தடைவிதித்த பின்பும் மேற்கு நாடுகள் பற்றிய எதிர்பார்ப்புக்கள் குறைய வேண்டிய வேளையில் அதற்கு மாறாக அவை கூட்டப்பட்டு வந்தன என்பது தான்.

அமெரிக்கா நெருக்குவாரம் ஐரோப்பிய ஒன்றியத் தடையில் முக்கியமான பங்கு வகித்தது என்பது உண்மை. அதே வேளை ஒவ்வொரு நாட்டிலும் விடுதலைப் புலிகள் மீதான கண்காணிப்பும் கடுமையாக்கப் பட்டது. எனவே முழு உலகினதும் நோக்கில் பொதுவாக விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே எல்லா நாடுகளும் இருந்தன என்பது விளங்கும் விலக்காகத் தென்னாபிரிக்கா போன்ற ஓரிரு நாடுகளில் ஆதரவுமில்லாத எதிர்ப்புமில்லாத, ஆக மிஞ்சித் தமிழ் மக்களுக்கு அனுதாபமான, ஒரு நிலைப்பாடு இருந்ததாகக் கூறலாம்.

2003 முதலாக விருத்தி பெற்ற இந்தப் போக்கு, 2006க்குப் பின்பும் எவ்விதமான நெகிழ்வையும் காட்டவில்லை. 2006ம் ஆண்டு தொடங்கிய கிழக்கு மாகாண மோதல் விடுதலைப் புலிகட்குப் பிரதேச அடிப்படையில் ஒரு பாரிய பின்னடைவாக அமைந்தது. 2007ம் ஆண்டுக்குள் விடுதலைப் புலிகள் தமது போராட்ட அணுகுமுறையை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. 2009ம் ஆண்டு துரிதமான சரிவை எதிர் நோக்கிய நிலையில் விடுதலைப் புலிகளிடையே மக்கள் விரோதப் போக்கு வளர்ந்ததே ஒழிய மக்களை நம்பும் தேவை உணரப்படவில்லை இறுதி மாதங்களில் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர் என்பதும் உண்மை.

இந்த அவலத்தின் நடுவே, ஐ.நா. சபையும் அமெரிக்காவும் விடுதலைப் புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தக் கூடாது என்று வற்புறுத்திய அளவுக்கு, அரசாங்கம் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்துவதைக் கண்டித்து எதையுமே சொல்லவில்லை. மாறாக, மனித உரிமை மீறல், மனிதாபிமானம் என்கின்ற பேரில் சில மேற்குலக அமைப்புக்களும் ஐரோப்பிய அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களின் நிலைமை பற்றியும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் அறிக்கைகளை விடுத்து வந்ததற்கு மேலாக, ஆக்கமாக எதுவுமே நடக்கவில்லை.

போரிலான அழிவுகளையும் மனித உரிமை மீறல்களையும் பற்றி ஐ.நா.அடக்கி வாசித்து வந்தது என்பது பகிரங்கமாகவே ஐ.நா. மீதும் அதன் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மீதும் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டாகும். மனிதப் பேரழிவுகள் பற்றி ஐ.நா. மனித உரிமை விசாரணைக் குழுக்களுக்கு கிடைத்த தகவல்கள் கூட மறைத்து மழுப்பப்பட்ட விடயங்கள் போரின் முடிவிற்கு முன்பே வெளியாகின.

ஐ.நா. பொதுச் செயலாளரின் மெனிக் பாம் அகதி முகாம் விஜயம் போலக் கேவலமான கண் துடைப்புக்கள், ஐ.நாவின் வெட்கக் கேடான வரலாற்றிற் கூட அதிகம் இருக்க முடியாது.

அப்படியானால் அமெரிக்காவையும் ஐ.நாவையும் பற்றியுமான எதிர்பார்ப்புக்கள் ஏன் கட்டியெழுப்பப்பட்டன? குறிப்பாக விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் நிச்சயமாகவே தோல்வியை நோக்கி நகருகிறது என்பதை அறிந்து கொண்டும் ஏன் இவ்வாறான எதிர்பார்ப்புக்கள் வளர்க்கப்பட்டன?

அமெரிக்காவோ ஐ.நாவோ இலங்கைத் தமிழர் சார்பாகக் குறுக்கிவிடுவதற்கான அரசியற் தேவை இல்லை என்பது ஏகாதிபத்தியம் பற்றிச் சிறிதாவது விளங்குகிற எவருக்கும் விளங்கக் கூடிய உண்மை. மேற்குலகின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டின் வேர்கள் தமிழ்த் தேசியவாதத்தின் வர்க்க இயல்பின் ஆழப் பதிந்துள்ளன. ஏகாதிபத்தியத்தைப் பகைத்துத் தமிழீழத்தை வென்றெடுக்க இயலாது என்ற எண்ணம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு முன்பிருந்தே இருந்து வந்தது. எப்போதுமே ஏகாதிபத்தியத்தை அண்டி நின்று (அல்லது ஒரு குறுகிய காலத்தில் மட்டும் இந்தியாவை அண்டி நின்று) விடுதலையை வெல்லாம் என்ற சிந்தனையால் சிறைப்பட்டோராகவே விடுதலைப் புலிகளும் தமிழீழ விடுதலை பற்றிப் பேசிய பிற அமைப்புக்களும் இருந்து வந்தன.

2009 மே மாதத்துடன் முடிந்த போரின் பின்பும் அதன் பின்பும் தொடருகிற அவலங்களின் நடுவிலும் ஐ.நா. பற்றியும் அமெரிக்கா பற்றியுமான எதிர்பார்ப்புக்களுக்கு முட்டுக் கொடுத்துத் தூக்கிவிடுகிற போக்கே தொடருகிறது. இப்போது, இலங்கை அரசாங்கம் முட்கம்பி வேலிகட்டுப் பின்னாலிருப்போரை விடுவித்து மீளக் குடியமர்த்த வேண்டும் என்ற கருத்து ஐ.நா. மூலமும் மேற்குலகின் பல திசைகளிலுமிருந்து வருகின்றன. திருமதி கிளின்றறன் கூட வன்புணர்ச்சி ஒரு ஆயுதமாகப் பயன்பட்டுள்ளது பற்றிப் பேசியுள்ளார்.

இவற்றின் கருத்தென்ன? தமிழ் மக்களை மீட்டெடுக்க அமெரிக்காவும் ஐ.நா. நிறுவனமும் ஆயத்தமாகின்றனவா? அமெரிக்காவின் மனித உரிமை நிறுவனம் எதுவுமோ ஐ.நா. மனித உரிமை ஆணையமோ எதைச் சொன்னாலும் அதன் பின்னால் ஒரு அரசியல் உண்டு. அதைவிட, அவை சொல்கிற விடயங்கட்கும் அமெரிக்க அரசாங்கமோ ஐ.நா. நிறுவனமோ எடுக்கப் போகிற நடவடிக்கைகட்கும் எவ்விதமான உறவும் இல்லை. அவை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குப் பயனளிக்காத போது அவை கிடப்பிற் போடப்படும். ஆக்கிரமிப்பு ஒன்று தேவைப்படுகிற போது அவை ஆதாரங்களாக்கப்படும்.

# தமிழர்

இப்போது அமெரிக்காவுக்கும் மேற்குலகுக்கும் இலங்கையை வழிக்குக் கொண்டு வருகிற ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதே வேளை இலங்கையில் நேரடியான குறுக்கீட்டுக்கான வாய்ப்பு இல்லை. எனவே பொருளாதார நெருக்கு வாரங்கள் ஒரு புறமும் மனித உரிமை மீறல் நெருக்குவாரங்கள் இன்னொரு புறமாகவும் நடைபெறுகின்றன.

ராஜபக்ஷ ஆட்சியால் மேற்கிற்குப் பணிந்து போவதாகக் காட்டிக் கொள்ள இயலாத நிலைமை. எனவே தன்னை வலுவாக நிலை நிறுத்திக் கொள்ளும் வரை, அதாவது சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பனவற்றின் மூலம் தன்னை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வரை, மேற்குலகிற்கு எதிராக நிமிர்ந்து நிற்கிற பாவனையை அது தொடரும்.

இந்த நாடகம் மேற்குலகுக்கு விளங்காததல்ல. அதுவும் தனது பங்கிற்கு நாடகத்தில் தனது வேடத்தைப் போட்டு ஆடுகிறது. இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் அமெரிக்காவிற்குப் போனால் அவர் அங்கு வழக்கு விசாரணைக்குட்படுவார் என்று புலம்பெயர்ந்த பிரமுகர்களாலற் சொல்லப்பட்டது. அவர் போய் வந்தும் விட்டார். அமெரிக்க அதிகாரிகளுடன் பேசிவிட்டும் வந்திருக்கிறார்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிக்கை ஒன்று செப்டெம்பர் மாதம் வெளியிடப்படும் என்று அமெரிக்க ஆட்சியாளர்கள் சொன்னார்கள். அது ஒரு மாதம் பிற்போடப்பட்டுள்ளது. ஏன்?

இலங்கையைத் தன் ஆதிக்கத்திற்குட் கொண்ட வருவதற்குத் தமிழ் மக்களின் அவலம் அமெரிக்காவுக்குப் பயன்படுகிறது. அதற்கு ஐ.நாவும் ஒத்துழைக்கிறது. இதை இலங்கைத் தமிழர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அமெரிக்காவினதும் ஐ.நாவினதும் புதிய அக்கறைகளை வைத்துப் புலம்பெயர்ந்த மேட்டுக்குடிகள் தமிழ் மக்களை அமெரிக்காவிற்குக் கொத்தடிமைகளாக்குகிற முயற்சி பற்றிப் புலம்பெயர்ந்த தமிழர் விழிப்புடன் இருக்க வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 3

- வெகுஜனன் -

அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் (1970-77) தமிழ் மக்கள் எதிர்நோக்கிய இனத்துவ அடிப்படையிலான எந்த வொரு பிரச்சினைக்கும் உரிய தீர்வை முன்வைக்க வில்லை. அத்துடன் அவ் அரசாங்கத்தில் முழுமையாக இணைந்திருந்த பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகள் முக்கிய அமைச்சுப் பதவிகள் பெற்று செல்வாக்குடன் இருந்தும் கூட இனப் பிரச்சினைத் தீர்வுக்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதே வேளை அரசாங்கம் எடுத்து வந்த இனவாத நடவடிக்கைகளுக்கு மௌன அங்கீகாரம் வழங்குவது போன்றும் நடந்து கொண்டனர். இதுவே இன்று வரை அவ் இடதுசாரிகள் எனப்பட்டவர்களின் வரலாற்றின் கதையாகவும் அவர்கள் மீதான பழியாகவும் இருந்து வருகின்றமை மறைக்கக் கூடிய தொன்றல்ல. அன்று தமிழர் கூட்டணியினர் அரசாங்கத்திற்கு முன்வைத்த ஆறு அம்சக் கோரிக்கைகள் தூரநோக்கின்றிப் புறந்தள்ளப்பட்டது. ஆனால் அவற்றுக்குள் அடங்கியிருந்த தமிழ் மக்களின் உரிமைகள் அபிலாஷைகளைப் பற்றி அரசு கருத்திற் கொள்ளவில்லை. எனவே, கூட்டணித் தலைமையைப் புறக்கணிப்பதாகக் கூறி அதற்கு எதிராகச் செயற்படுவதாக எண்ணி அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் முழுத் தமிழ் மக்களையும் பகைத்துக் கொள்ளும் செயற்பாடுகளாகவே அமைந்து கொண்டன. அவை வெறும் அரசியற் காழ்ப்புணர்வினால் மட்டும் இடம் பெறவில்லை. பேரினவாத முதலாளித்துவப் போக்கின் வெளிப்பாடாகவே அமைந்திருந்தன என்பது காணவேண்டிய ஒன்றாகும்.

இந் நிலையில் தமிழர் கூட்டணியினர் தமது வழமையான சாத்வீகப் போராட்டங்கள் எனக் கூறிச் செயல்பட்ட அதே வேளை, தமிழ் மாணவர் பேரவையாக இருந்து வந்தவர்கள்



தமிழ் இளைஞர் பேரவையாக மாறித் தீவிரவாதச் செயற்பாடுகளில் இறங்கினர். இதிற் குறிப்பானதொன்றாகக் காணப்பட்டமை துரோகிகளை அழித்தல் என்பதில் இருந்து ஆரம்பித்த செயற்பாடுகளாகும். தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளின் தோற்றுவாயாக இது அமைந்து கொண்டமை, பிற்கால வளர்ச்சிகளுடன் பொருத்திப் பார்க்கும் போது தெளிவாகக் காணக் கூடியதாகும். இவ்வாறு இளைஞர் பேரவையினர் எடுத்து வந்த நடவடிக்கைகளின் எதிர்காலப் பாரதூரத் தன்மையைத் தமிழர் கூட்டணித் தலைமை எவ்வகையிலும் தூர நோக்குடன் கண்டு கொள்ளவில்லை. உள்ளூர அவற்றுக்கு அங்கீகாரத்தையும் வெளிப்படைக்கு மௌனத்தையும் கடைப்பிடித்தனர். அவ்வாறான தமிழ் இளைஞர்களின் செயற்பாட்டினால் பொலீஸ் தேடுதல்கள், கைதுகள், விசாரணைகள், சித்திரவதைகள், நீண்ட தடுத்து வைத்தல்கள் போன்றவற்றுக்கு இளைஞர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் உட்பட்டதைத் தேர்தல் வெற்றிக்குரிய வாக்கு வங்கியாக மாற்றுவதற்கான பிரச்சாரமாகத் தமிழர் கூட்டணி பயன்படுத்தியதே தவிர, ஒரு அரசியல் மயப்படுத்தப்பட்ட வெகுஜனப் போராட்டமாக முன்னெடுப்பதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. அதே வேளை எந்தவொரு தனிமனித வன்முறையும் தமிழர் கூட்டணி தலைமையாற் கண்டிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக அவற்றை ஊக்குவிக்குமாறான மறைமுகப் பேச்சுக்களும் அறிக்கைகளும் விடப்பட்டு வந்தன. எந்தவொரு நடவடிக்கையும் இனவாதமாகவும் குறுந்தேசியவாத நிலைப்பாட்டின் ஊடாகவும் நோக்கப்பட்டதுடன் அதற்கு அப்பாலான இடதுசாரிச் சிந்தனைகளோ வர்க்கப் போராட்ட அணுகு முறைகளோ தமிழ் இளைஞர் பேரவையினர் மட்டத்தில் உட்புகாதவாறு கவனமாகத் தமிழர் கூட்டணித் தலைமையால் கண்காணிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டது. தமிழர் கூட்டணியின் தலைமைக்கும் இளைஞர் பேரவையின் தீவிரவாதத் தலைமையினருக்குமிடையில் அடிக்கடி கருத்து மோதல்கள் நிகழ்ந்து வந்தன. அவை பொது இடங்களிலும் இடம்பெற்றன. பாராளுமன்றப் பாதையாலும் மிதவாதப் போராட்டங்களாலும் தமிழர் உரிமைகளைப் பெறமுடியாது என்பதைத் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்கள் முன்வைத்த சந்தர்ப்பங்களில் ''தமிழ் இளைஞர்கள் மத்தியில் பீக்கிங் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஊடுருவி'' விட்டனர் என்றும் இது ஒரு அபாயம் எனவும் தளபதி அமிர்தலிங்கம் பல தடவைகள் இளைஞர் கூட்டங்களில் பகிரங்கமாகவே அறிவிப்புச் செய்து கண்டித்ததும் வந்தார். இதற்குக் காரணம் தமிழர் கூட்டணியும் அவர்கள் பிரசாரப்படுத்திய தமிழீழம் என்பதன் பின்னால் மறைத்து வைக்கப்பட்ட உயர்வர்க்க நலன்களேயாகும். இத்தகைய தமிழர் மேட்டுக்குடி வந்த உயர் வர்க்க உயர்சாதிய கருத்தியல் சிந்தனை போக்கினை அன்னிய ஏகாதிபத்திய சக்திகள் இறுகப் பற்றி கொண்டு தமது ஊடுருவல்களை தமிழ்த் தேசிய வாத அரங்கில் செயலாக்கவும் செய்தனர் என்பதில் மாற்றுக்கருத்துக் கொள்ள இயலாது.

தமிழ் இளைஞர் பேரவையினரின் தீவிரவாத நடவடிக்கைகளும் தனிநபர் பயங்கரவாத செயற்பாடுகளும் இளைஞர் யுவதிகள் மத்தியில் ஒருவகை ஈர்ப்பைப் பெற்றன. இந் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஓரிருவரைத் தவிர ஏனையோர் இனத்துவ தேசியவாத அடிப்படையில் சிந்தித்து செயலாற்றியே வந்தனர். அத்தகையவர்களின் செயற்பாட்டை தமிழர் கூட்டணித் தலைமையும் அந்நிய சக்திகளும் தமக்குரிய மூலதனமாக மாற்றிக் கொள்வதில் கவனமாக இருந்து வந்தனர். தமிழ் மாணவர் பேரவையிலும் பின்பு தமிழ் இளைஞர் பேரவையிலும் முன்னின்று தீவிரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்த ஒருவர் சிவகுமாரன். பல்வேறு சந்தர்ப்பங்களில் தனது துணிச்சல், அர்ப்பணிப்பு, வீரதீரம் என்பனவற்றை வெளிக்காட்டி தமிழ் இளைஞர் யுவதிகளைத் தமிழ் தேசியவாத அரங்கில் எழுச்சி பெற வைத்தவர். அவர் முற்போக்கான சமூகக் கருத்துக்கள் பலவற்றைத் தன்னளவில் கொண்டிருந்த போதிலும் அவை பிற்போக்கான தமிழத் தேசியவாத கருத்துக்களை மேவி முன்செல்லவோ ஏனையோரால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவோ இருக்கவில்லை. அத்துடன் அவர் தமிழ்த் தேசியவாத இளைஞர் அரங்கில் முழுமையான இடத்தைப் பெறுவதற்கு முன்பாகவே, வங்கிக் கொள்ளை ஒன்றின் போது பொலீசாரிடம் அகப்படாமல் விடுபடுவதற்காக நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். 1974ம் ஆண்டு யூன் 5ம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றது. இதுவே ஈழப் போராட்டத்தில் இடம்பெற்ற முதலாவது தற்கொலைப் போராளி நடவடிக்கை எனப் பிற்காலத்தில் பிரசாரப் படுத்தப்பட்டது. இச் சம்பவத்திற்கு முன்பும் பின்பும் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பொலீஸ் தேடுதல்கள் கைதுகள் சித்திரவதைகள் சிறையில் அடைக்கப்படுதல் போன்றவற்றுக்கு ஆளாகினர். ஒவ்வொரு சம்பவத்தையொட்டியும் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கடுமையான வதைகள் மூலம் விசாரிக்கப்பட்டனர். இவற்றில் தமிழ்ப் பொலிசாரும் இரகசியப் பொலிசாருமே அதிகம் சம்பந்தப்பட்டிருந்தனர். ஆளும் வர்க்க அரசயந்திர விசுவா சத்துடன் தமது கடமையெனக் கூறி முன்னெடுத்த அவர்களது நடவடிக்கைகள் இன மொழி பிரதேச உணர்வு கட ந்தவை என்பதைக் காணத் தவறக் கூடாது. தமிழ் இளை ஞர் பேரவையைச் சேர்ந்த 42 இளைஞர்கள் நீண்ட நாட் களாகச் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். இதனைத் தமிழர் கூட்டணி தனக்குரிய பிரச்சாரமாக முன்னெடுத்து வந்தது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் இவ்வாறு தனது பொலீஸ் அடக்குமுறையை மிக உச்சமாக முன்னெடுத்து வந்த போதிலும், தனது ஆட்சிக்காலத்தில் அதனை ராணுவ அடக்கு முறையாக உயர்த்திக் கொள்ளவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். அதே வேளை, அவ் ஐக்கிய முன்னணி அரசாங்கம் வடபுலத்தைச் சேர்ந்த செல்லையா குமாரசூரியரை அமைச்சராக்கியும் எஸ். தியாகராசா, சி.அருளம்பலம், எம்.சி. சுப்பிரமணியம் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் தமிழ் உயர் அரசாங்க அதிகாரிகளுடனும் இணைந்து வடக்கு கிழக்கிற்கான சலுகைகள், அபிவிருத்திகள் போன்றவற்றை முன்னெடுத்தும் வந்தது. அவற்றைத் தமிழர் கூட்டணியின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே முன்னெடுத்தும் வந்தது. அதன் மூலம் தமிழ் மக்களிடையே ஆதரவைப் பெறவும் அரசாங்கம் எத்தனித்துக் கொண்டது. அத்தகைய நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தை ஆதரித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்ற இடதுசாரிகளினதும் ஆலோசனைகளும் ஆதரவும் இருந்து வந்தது. ஆனால் மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி எச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ''சோசலிச'' அரசாங்கம் என்றோ முழுமையான ஏகாதிபத்திய ''விரோத'' அரசாங்கம் என்றோ கூறியதும் இல்லை, ஆதரித்து நின்றதும் இல்லை. அந்த அரசாங்கம் பதவிக்கு வந்த 1970ம் ஆண்டுத் தேர்தலை மாக்சிச லெனினிசக் கட்சியானது முழுமையாக நிராகரித்துப் பகிஷ்கரித்தும் கொண்டது. அவற்றின் எதிர்வினையாகவே 1971ன் ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது, மாக்சிச லெனினிசக் கட்சி ஜே.வி.பியை ஆரம்பம் தொட்டு எதிர்த்து வந்திருந்தும் கூட, அரசாங்கம் அக் கட்சியின் தலைவர்களையும் ஊழியர்களையும் பல மாதங்கள், வருடங்களாகச் சிறையில் அடைத்தும் தேடுதல்கள் நடத்தியும் அடக்கு முறையை மேற்கொண்டது. அன்றைய கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் பதினொரு மாதங்களும் ஏனைய சிங்கள, தமிழ்த் தோழர்கள் இரண்டு மூன்று வருடங்களும் சிறையில் இருந்தனர். வட பகுதியில் தலைமைத் தோழர்களும் ஊழியர்களும் ஒரு வருடத்திற்கு மேலாகத் தலைமறைவு வாழ்வு வாழ்ந்தனர். மலையகத்தின் தொழிற்சங்க அரசியல் தலைமைத் தோழர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். அன்றைய நிலையில் எந்தவொரு தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினராவது இவ்வாறு மாக்சிச லெனினிசக் கட்சியின் தலைவர்கள் சிறையில் அடைக்கப் பட்டமைக்கு எதிராக எந்தவொரு எதிர்ப்பையோ கேள்வியையோ பாராளுமன்றத்திலோ அன்றி வெளியிலோ எழுப்பவில்லை. மாறாக, 42 தமிழ் இளைஞர்களை விசாரணை செய் அல்லது விடுதலை செய் என அரசாங்கத்தை வற்புறுத்துவதில் மாக்சிச லெனினிசக் கட்சி தனது உறுதிப்பாட்டைக் கொண்டிருந்தது என்பது இவ்வேளை. குறிப்பிடத்தக்கதாகும்.

முன் கூறியவாறு அரசாங்கம் வடக்கு கிழக்கில் தனது நிகழ்ச்சி நிரலை அபிவிருத்தியாகவும் மக்களுக்கு உதவுவதாகவும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது. அதில் ஒன்றே யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகத்தை நிறுவியமையாகும். இதில் ஒரு சுவாரசியமான விடயம் உள்ளடங்கி இருந்தமை புதிய தலைமுறையினரிற் பலருக்குத் தெரியாது. தமிழர் தேசியவாதக் தலைமைகள் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி எனத் தமிழ் மக்கள் மத்தியில் கன்னை ~ட்டி பாராளுமன்ற அரசியலில் போட்டியிட்டு வந்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சியுடன் வர்கக உறவும் பேணி வந்தனர். அவ் வேளைகளில் தமிழ் மக்களுக்கான ஒரு பல்கலைக்கழகம் என்ற எண்ணக்கரு கல்வி கற்ற தமிழர்கள், அறிஞர்களிடையே தோன்றி வளர்ந்து ஒரு கோரிக்கையாகியது. அதனை மேற்படி இரண்டு கட்சிகளும் தத்தமது அரசியலாக்கியும் கொண்டனர். தமிழ்க் காங்கிரஸ் தமிழர்களுக்கு இந்துப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் வேண்டும் என்றனர். பதிலுக்கு தமிழரசுக் கட்சியினர் தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டும் என வற்புறுத்தினர். அதனைத் திருகோணமலையில் அமைப்பதற்கு காணியும் பெறப்பட்டது. இவ்விரு தலைமைகளதும் போட்டியால் தமிழ் மக்களுக்கான பல்கலைக்கழகம் என்ற விடயத்தைப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இலகு வாகவே ஒரு பக்கத்தில் வைத்துக் கொள்ள வசதியாயிற்று. இருப்பினும் வருடாவருடம் வரும் வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களுக்கான பல்கலைக் கழகத்திற்கென ஒரு ரூபாவைக் குறித்தொதுக்கியும் கொண்டனர். இது தமிழர் தலைமைகளுக்கு ஒரு அவமானமாக இருந்த போதிலும் பாராளுமன்றப் போட்டி அரசியலில் அதெல்லாம் கணக்கில் எடுக்கப்படாது தத்தம் நிலைப்பாட்டிலேயே இருந்தனர்.

இச் சூழலிலேயே வடபுலத்தில் ஒரு பல்கலைக்கழக வளாகத்தை நிறுவ ஐக்கிய முன்னணி அரசாங்கம் முடிவுக்கு வந்து, அதனை யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பித்தது. அப்போதிருந்த கட்டிட வளம் போதாமையால், விஞ்ஞான பீடக் கட்டிடங்கள் ஆயத்தமாகும் வரை, குறுகிய காலத்திற்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சில பகுதிகளும் யாழ்ப்பாண வளாகத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. அவ் வளாகத்தின் முதலாவது தலைவராகப் பேராசிரியர் கைலாசபதி நியமிக்கப்பட்டார். கைலாசபதி அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட ஒரு அறிஞரோ கல்வியாளரோ அல்லர். அவர் மிகுந்த தயக்கத்துடனும் தமது நெருங்கிய அரசியல் கட்சித் தோழர்களுடனும் கலந்து ஆலோசித்த பின்பே அப் பதவியை ஏற்றுக் கொண்டார். சமூகச் சிந்தனையின் அடிப்படையில் தனது ஆற்றல்களைத் தமிழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கும் சமூக வளர்ச்சிக்கும்

9ம் பக்கம்

பயன்படுத்தும் ஒரே அடிப்படையில் தான் கைலாசபதி வளாகத் தலைவர் பதவியை பொறுப்பேற்றார். அரசாங்கம் அவரது கல்விப் புலமை, நிர்வாகத் திறமை, மனச்சாட்சி நிறைந்த நேர்மை என்பனவற்றை மட்டுமன்றி அவருக்கு பின்புலமாக அமைந்திருந்த வட புலத்து இடதுசாரி அரசியல் அடிப்படையையும் கவனத்திற் கொண்டே அப் பதவியை அரசாங்கம் வழங்கியது. கைலாசபதியுடன் அன்றைய உயர் கல்விப் புலத்தில் சமூகச் சிந்தனையுடன் செயற்பட்ட பல கல்வியாளர்கள் இணைந்து அவ் வளாகத்தைப் பொறுப்பேற்று வழிநடத்த முன்வந்தனர்.

ஆனால் "வைக்கல் பட்டடை நாய்" போன்ற நிலையில் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். யாழ்ப்பாணம் சிங்களமயமாகப் போகிறது என்றும் சிங்களவர்கள் ஊடுருவப் போகிறார்கள் என்றும் கூக்குரல் வைத்தனர். இது அவர்களது வழமையான இனவாதப் பரப்புரைகளுக்கு உட்பட்டதாகவே இருந்தது. மேற்படி யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தைத் திறந்து வைக்க அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவருடைய வரவை எதிர்க்க வேண்டும் எனக் கூட்டணியினர் கூறி நின்றனர். திறப்பு விழாவிற்கு முதல் நாள் இரவு, யாழ்நகர் மானிப்பாய் வீதியில் அமைந்திருந்த கைலாசபதியின் (தந்தையாரின்) வீட்டிற்குக் கைக்குண்டுகள் வீசப்பட்டன. இத்தகைய தடைகளையும் அச்சுறுத்தல்களையும் மீறிய நிலையில் குறித்தபடி வளாகத் திறப்பு விழா இடம் பெற்றதுடன் வளாகத்தைச் சுற்றியுள்ள மக்களின் பூரண ஆதரவோடு நிர்வாக வளர்ச்சி முன்னெடுத்துச் செல்லப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே தமிழ், முஸ்லிம், சிங்கள, மலையக மாணவர்கள் உரிய நிலைகளின் ஊடாக வளாகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொடக்கி வைத்ததும் கைலாசபதியின் தலைமையிலான ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் மக்கள் என் போரால் அடித்தளமிட்டு வைக்கப்பட்டதுமான அன்றைய வளாகம் தான் பின்வந்த அரசியல் புயல்களால் அழிவுறாது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக இன்றுவரை திகழ்ந்து வருகிறது. எந்த நிலையிலும் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் சிறு அளவு கூட உரிமை கோர முடியாதவர்கள் என்பதைக் கடந்த முப்பத்தைந்து வருடகால வரலாறு எடுத்துச் சொல்லும். ஆனால் பல்கலைக்கழகத்தை அதன் கல்வி நோக்கங்களுக்கு அப்பாலான தமிழ்த் தேசியவாதப் போராட்டங்களின் பெயரால் சீரழித்த நிகழ்வுகள் அவ்வப்போது இடம் பெற்றும் வந்தன. யாழ்ப்பாணம் வளாகம் தொடங்கப்பட்டு மூன்று வருடங்களின் பின் 1977இல் ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்திற்கு வந்து கொண்டது. அதன் போது யாழ்ப்பாண வளாகத்தை அவ் அரசாங்கம் முழுமையான பல்கலைக் கழகமாக மாற்றிக் கொண்டது. தமிழர் கூட்டணித் தலைமை எவ்வித வெட்கமும் இன்றி யாழ் பல்கலைக்கழக உபவேந்தராக தமது வர்க்கத்திற்கும் மேட்டுக்குடிப் பழமை வாதத்திற்கும் தகுதியானவரான பேராசிரியர் சு.வித்தியானந்தனை நியமிக்குமாறு பிரதமராக வந்த ஜே.ஆர். ஜயவர்தனவை வேண்டி நின்றனர். தமது தமிழ் மேட்டுக்குடி உயர்வர்க்க சகாக்களது வேண்டுகோளை ஏற்ற ஜே.ஆர். அவ்வாறே நியமனத்தை வழங்கிக் கொண்டார். இது தமிழர் கூட்டணியினர் முன்னெடுத்த தமிழீழத்திற்கான பிரச்சார இயக்கத்தின் மத்தியில் இடம் பெற்ற நடவடிக்கையாகும்.

மேலும் 1970-77 காலப்பகுதியில் அன்றைய அரசாங்கம் பேரினவாதத்தை முன்தள்ளும் செயற்பாடுகளைச் செய்த அதே வேளை அவ் அரசாங்கம் பின்பற்றிய தேசிய பொருளாதாரக் கொள்கையால் விவசாயிகளும் தொழிலாளர்களும் தத்தமது சுய முயற்சிகளில் எழுந்து நிற்கக் கூடியதாக இருந்தது. இறக்குமதிகளுக்குக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால் விவசாயிகளும் உள்ளூர்ச் சிறு கைத்தொழிலாளர்களும் நன்மை பெற்றனர். உப உணவு உற்பத்தியில் ஈடுபட்ட தமிழ் விவசாயிகள் ஏனைய பிரதேச விவசாயிகள் போன்று பல்வேறு நன்மைகளைப் பெற்றனர். வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்குப் பயிரிடலை விவசாயிகள் பரந்த அளவில் மேற்கொண்டனர். வன்னிப் பிரதேசங்களில் இவ்வாறான விவசாய முயற்சிகளில் தமிழ் மக்கள் ஊக்கம் காட்டினர். அக் காலத்தில், இவ் விவசாய முயற்சிகளைப் பற்றிக் கூறும் போது "வெளிக்கிடு விஸ்வமடுவிற்கு" என்றொரு சொற்தொடர் இருந்தது. வன்னிப் பிரதேசங்களில் விவசாயம் சிறப்பாக அமைந்திருந்தமையையே இது குறித்து நின்றது. இதே சொற்றொடர் பின்பு ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கையாலும் தமிழ்த் தேசியவாதத்தின் தீவிர போராட்டத்தாலும் உலகமயமாதலாலும் "வெளிக்கிடு வெளிநாட்டிற்கு" என மாற்றப்பட்டதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அப்போதைய உப உணவு உற்பத்தியும் நெல் உற்பத்தியும் ஓரளவிற்கு தன்னிறைவைநோக்கிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவுமான பொருளாதாரத்தை தோற்றுவித்தது. இக்காலத்தில் வடபுலத்து விவசாயிகள் அன்று வரை பயிரிட முயலாத பீற்றூட், கரட், போஞ்சி, லீக்ஸ் போன்ற குளிர்ப் பிரதேசப் பயிர்களையும் திராட்சை போன்றவற்றையும் பயிரிட்டு நல்ல விளைச்சல்களையும் பெற்று வந்தனர். இதனால் விவசாயிகளின் முக்கியத்துவம் மேலோங்கி வந்ததுடன் அவர்களது வாழ்க்கை நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் நிகழ்ந்தமையை மறுக்கவியலாது.

அதுபோன்றே சிறு கைத்தொழில்களிலும் மக்கள் ஈடுபட்டு வந்தனர். உள்ளூர் நெசவுத் தொழில் குடிசைக் கைத்தொழிலாகவும் நடுத்தர தொழிற்சாலை அளவுகளிலும் அன்று நாடு பூராவும் நிலை பெற்றது. வடக்கு கிழக்கிலும் அவை வளர்ச்சி கண்டன. சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் தொடக்கம் அலுமினியப் பாத்திர வாய்ப்பு வரை சிறு நடுத்தர தொழிற்சாலைகளின் வாயிலாக உள்ளூர்த் தொழிலாளர்களையும் மூலப் பொருட்களையும் கொண்டு உற்பத்திகள் செய்யப்பட்டன.

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

மேலும், அவ் அரசாங்க காலத்திலேயே, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வந்த பனை-தென்னைகள் இறக்கும் தொழிலில் இருந்து வந்த மரவரி முறை இரத்துச் செய்யப்பட்டுக் கூட்டுறவுச் சங்க முறைமைக்குள் கொண்டு வரப்பட்டது. இதனால் பல ஆயிரக்கணக்கானகள் இறக்கும் தொழிலாளர்கள் புதிய நிலைமைகளின் கீழ் மாற்றங்களையும் சாதகமான விளைவுகளையும் பெற வாய்ப்புக்கள் ஏற்பட்டன. பனை, தென்னை வள அபிவிருத்தி சபை முறைமையும் நடைமுறைக்கு வந்து கொண்டது. இவை தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார வாழ்வில் உப உணவு விவசாயம் போன்றே புதிய சூழல்களைத் தோற்றுவித்துக் கொண்டன. அதே போன்று மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் தோற்றுவிக்கப்பட்டன. அதனால் மக்கள் பல்வேறு நன்மையைகளையும் பெற்றனர்.

அத்துடன் ஏற்கனவே வலுவற்றதாக இருந்து வந்த சாதிய தீண்டாமையை நிராகரிக்கும் சமூக குறைபாடுகள் ஒழிப்புச்



சட்டத்தை ஓரளவுக்கு வலுத் தரும் வகையில் மாற்றி அமைக்கவும் அதே அரசாங்கம் முன்வந்தது. அதனை அவ் அரசாங்கத்தில் நியமன உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட எம்.சி. சுப்பிரமணியம் முன்முயற்சி செய்து கொண்டு வந்தார். இதில் உள்ள வேடிக்கை யாதெனில், அச் சட்டம் ஏற்கனவே வலுவற்றதாக இருந்து வந்த சூழலிலேயே 1966-1971 வரையான வெகுஜனப் போராட்டங்கள் சாதிய தீண்டாமையை எதிர்த்து இடம்பெற்று வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எவ் வாறாயினும் தமிழரசு-காங்கிரஸ் கட்சிகள் யூ.என்.பியுடன் இணைந்து ஆட்சி நடாத்திய 1965-1970 காலகட்டத்தில் தீவிரமான சாதிய தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்ற வேளையில், இத்தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் அதனை வலுவுள்ளதாக மாற்றியமைக்க முன் வரவில்லை. அந் நிலையோடு ஒப்பிடும் போது பின்னைய அரசாங்கத்தின் சட்ட மாற்றியமைப்பு பெயரளவில் முன்னேற்றகர நடவடிக்கை யாகியது. மேலும் ஈழத்து இலக்கியப் பரப்பில் புதிய உத்வேகம் உருவாகி வளர்ந்து வந்தது. இலக்கிய நூல்கள் சஞ்சிகை சினிமா போன்றவற்றுக்கு இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டமையால் ஈழத்து எழுத்தாளர்கள் கலைஞர்கள் மத்தியில் ஆக்க முயற்சிகள் மேலோங்கியமை நடைமுறையாகியது. இது ஈழத்து இலக்கியப்பரப்பை பல நிலைகளிலும் செழுமையடைய வைத்தது ஆனால் தாய் நாட்டின் பண்பாட்டுப் பாலம் உடைக்கப்படுவதாகவே கூட்டணியினர் குரல் வைத்தனர்.

மேலும் நாடு முழுவதிலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்க செயற்பாட்டை அறிமுகப்படுத்தியதும் அன்றைய அரசாங்கமேயாகும். அதன் மூலம் மக்கள் பலநிலை நன்மைகளை அடைய வழியேற்பட்டமைக்கு தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் ஆதரவு தெரிவிக்கவில்லை. இவை போன்ற பல்வேறு செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது அன்றாட வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் இடம்பெற்று வந்தபோதிலும் விவசாயிகளும் தொழிலாளர்களும் மீனவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பல்வேறு சமூக அரசியல் பொருளாதார நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்டு வந்தனர். ஆனால் அவற்றுக்குத் தமிழர் கூட்டணித் தலைமையானது எதிலும் இன முத்திரை குத்தியே நோக்கினர். அவர்கள் தமிழீழத்தின் மூலம் விடுதலை பெற்றுத் தனி நாடாகிய பின் சகல பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்ற பொத்தாம் பொதுவான இனத்துவ விடுதலை பற்றியே பேசிவந்தனர். தமிழனைத் தமிழன் ஆண்டால் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்து விடும் என்றனர்.

தமிழீழத்தைப் பிரகடனம் செய்யும் நாளை நோக்கி தமிழர் கூட்டணித் தலைமை வேகமாக வழிநடக்க ஆரம்பித்தது. அதற்கான பிரச்சாரங்கள் வடக்கிலும் கிழக்கிலும் முடுக்கி விடப்பட்டன. இத் தமிழீழ எண்ணக்கருவை தமதாக்கிப் பிரச்சாரப் படுத்திய கூட்டணித் தலைமை 1975ம் ஆண்டில் இடம்பெற்ற காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலில் செல்வநாயகத்திற்குக் கிடைத்த பெருவெற்றியைத் தமிழ் மக்கள் முதல் தடவையாகத் தமிழ் ஈழத்திற்குத் தந்துள்ள அங்கீகாரம் என்றே உரத்துக் கூறிக் கொண்டனர். அதனால் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் மட்டுமன்றிச் சராசரியான தமிழ் மக்களில் பெரும் பகுதியினரும் இந்தத் தமிழீழ முழக்கங்களால் ஈர்க்கப்பட்டனர். இத் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்துக் கொண்டதில் தமிழர் கூட்டணிக்கு ஒரு நோக்கமும், தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த பெரும்பாலான இளைஞர்களுக்கு இன்னொரு நோக்கமுமாக இருந்தது. முன்னையவர்கள் அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலில் பெரு வெற்றி பெறுவதற்கான ஒரு கருவியாகத் தமிழீழக் கோரிக்கையைப் பயன்படுத்தவே முன்னின்றனர். தேர்தலுக்குப் பின்பும் அதனை வைத்து முன்பு சமஷ்டியைக் கூறி பாராளுமன்ற அரசியல் நடாத்தி வந்தது போன்று முன்னெடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அதனையே பொத்தாம் பொதுவாக தமிழீழத்தை வென்றெடுப்போம் என்றும் கூறிக் கொண்டனர். பின்னையவர்கள் ஒரு ஆயுதப் போராட்டம் மூலம் தமிழீழத்தைப் பெற முடியும் என்ற முழு நம்பிக்கையிலும் செயல்பட்டு வந்தனர். எவ்வாறாயினும் இவ்விருதரப்பினரும் பிரிவினையின் மூலமான தமிழீழம் என்ற யதார்த்தமற்ற கனவைத் தமிழ் மக்கள் மத்தியில் பரப்புவதில் மும்மரமாகிக் கொண்டனர்.

இத்தமிழீழக் கோரிக்கை பற்றிய பரப்புரைக் கருத்தரங்குகள் தமிழர் கூட்டணியினராலும் தமிழ இளைஞர் பேரவையாலும் இவற்றுக்கும் அப்பால் சனசமூக நிலையங்களாலும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. பொது அமைப்புகள் ஏற்பாடு செய்யும் கருத்தரங்குகளில் மாக்சிச லெனினிசக் கட்சியின் தோழர்களை அழைத்து கருத்துரைக்க வைப்பார்கள். ஏனெனில் அன்றைய நிலையில் இடதுசாரி அரசியல் பலத்தோடும் தெளிவான அரசியல் கருத்தோடும் இக்கட்சியே வடபுலத்தில் இருந்து வந்தது. இதன் அடிப்படையில் "தமிழ் மக்களின் பிரச்சினையும் தமிழீழக் கோரிக்கையும்" என்றும் தலைப்பிலான ஒரு கருத்தரங்கு ஆனைக்கோட்டை உயர்புலம் பாரதி சனசமூக நிலையத்தில் இரண்டாவது தடவையாக அமைந்தது. ஆனால் இப்போது கருத்தரங்கு மேடையாக நடாத்தப்பட்டது. சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற அக்கருத்தரங்கில் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வி.தருமலிங்கம் முன்னாள் ஊர்காவற்துறை உறுப்பினரும் சுயாட்சிக்கழகத் தலைவருமான வி.நவரத்தினம், மா.லெ.கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சி.கா.செந்திவேல், சுயாட்சிக் கழகத்தைச் சேர்ந்தவரும் தற்போதைய தற் போதைய பாராளு ன்ற உறுப்பினருமான என்.சிறிகாந்தா ஆகியோர் பங்குகொண்டனர். பெருந்தொகையான மக்கள் இளைஞர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் மூன்று பேர் தமிழீழக் கோரிக்கை நியாயப்படுத்தி தமது கருத்துக்களை வற்புறுத்தினர். சி.கா.செந்திவேல் தமிழீழம் சாத்தியமற்றது என்ற முன்னைய நிலைப்பாட்டை தெளிவுடனும் தூர நோக்கு டனும் கொண்ட கொள்கை விளக்கத்தை முன்வைத்தார். தமிழீழக் கோரிக்கையாலோ அதற்கான எவ்வகைப் போராட்டத்தாலோ தமிழ் மக்கள் விடுதலை பெற முடியாது என்பதையும் இலங்கையின் வரலாற்று ரீதியானதும் பூகோள அரசியல் நிலைப்பட்டதுமான யதார்த்தம் அதற்கு இடமளிக்க மாட்டாது என்றும் தோழர் செந்திவேல் தனது கரு த்துரையில் எடுத்துக் கூறினார். மேலும் சகலவற்றையும் கடந்து தமிழீழம் அமைவதானால் அது ஒரு அந்நிய வல்லரசின் தயவினாலும் தங்கியிருந்தாலும் மட்டுமே சாத்தியமாகலாம். அத்தகையதொரு தமிழீழம் யாருக்குத் தேவை, அது பரந்துபட்ட தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் உழைக்கும் தமிழ் மக்களுக்காகவா? அல்லது ஆண்ட பரம்பரையில் வந்த ஆளும் வர்க்கத் தமிழர்களுக்காகவா? என்பது தான் பிரதான கேள்வியும் பிரச்சினையும் என்ற தோழர் செந்தில் அக்கருத்தரங்கில் உறுதிபடக் கூறிக் கொண்டனர். மேலும் ஏகாதிபத்தியத்தின் கருவியாகச் செயல்படும் ஒரு தமிழீழத்தால் இலங்கையில் இரத்த ஆறு ஓடவும் சிங்கள மக்களுடன் நிரந்தரப் பகையும் அழிவுகர செயற்பாடுகளுமே இடம்பெற முடியுமே தவிர தமிழ் மக்களுக்கு விமோசனம் வரமாட்டாது என்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

இத்தகைய கருத்துக்கள் அன்று இன உணர்வுச் செவிகளில் ஏறவில்லை. ஏனெனில் தமிழ் மக்களது கருத்தியல் பழைமைவாத மேட்டுக்குடி உயர்வர்க்க அரசியல் தலைமைக்கு தலையாட்டிச் செல்லும் போக்குடைய தாகவே இருந்து வந்தமைதான். ஆனால் மா.லெ.வாதிகளது கருத்துக்களை ஏற்று உறுதியாக நின்ற தமிழ் மக்கள் இன்றுவரை தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தே வந்திருக்கிறார்கள். கருத்தாகவும் கோரிக்கையாகவும் கனவாகவும் இருந்த அன்றைய தமிழீழப் பிரிவினைச் செயற்பாட்டு ரீதியில் எவ்வாறு அடுத்த கட்ட நகர்வை நோக்கிச் சென்றது என்பதை அடுத்து வரும் பகுதியில் பார்ப்போம். வளரும்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 22

# தந்தையின் இறப்பும் மகனின் பதவி ஏற்பும்

1947ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலை அடுத்து ஆட்சியமைத்த யூ.என்.பி தனக்கெதிரான இடதுசாரிச் சவாலைச் சமாளிப்பதற்காகவும் சிறுபான்மை இனங்களது பிரதிநிதித்துவத்தைக் குறைக்கவும் எடுத்த நடவடிக்கையான குடியுரிமைச் சட்டத்தின் பின்பு ஆட்சி மீது தனது பிடியை இறுக்கிக் கொண்டாலும் டி.எஸ்.சேனநாயக்க தனக்குப் பிறகு தன் மகன் டட்லி சேனநாயக்க பிரதமராக வருவதற்கு ஏற்பாக நடவடிக்கைகளை எடுத்து வருவத எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்காவுக்குச் சினமூட்டியது. டி.எஸ். சேனநாயக்கவை விட அரசியல் அறிவிலும் விவாதத்திறமையிலும் சிறந்து விளங்கிய பண்டாரநாயக்கா டி.எஸ்.சேனநாயக்கவுக்குப் பின்னர் தானே பிரதமராவார் என்று எதிர்பார்த்தார். யூ.என்.பிக்குள்ளும் சட்டசபையிலும் அனுபவங் குறைந்தவரும் வயதில் இளைய வருமான டட்லி சேனநாயக்க பிரதமராக்கப்பட்டால் பண்டாரநாயக்காவின் எதிர்பார்ப்பில் நிரந்தரமாகவே மண்விழுந்துவிடும். எனவே, பண்டாரநாயக்க தனது அரசியல் எதிர்காலத்திற்கு உறுதியான ஒரு அத்திவாரமிட வேண்டி யூ.என்.பியிலிருந்து பிரிந்து சென்றார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றின் முக்கியமான ஒரு திருப்புமுனையாக அமைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தோற்றம் பதவிப் போட்டியினாலும் தனிப்பட்ட இழுபறியின் விளைவாகவே நேர்ந்தது என்பதை பண்டாரநாயக்கவை ஒரு தீர்க்கதரிசியாகவும் முற்போக்காளராகவும் காட்ட நினைப்பவர்கள் மூடி மறைத்தே வந்துள்ளனர். எனினும் அத்தகைய ஒரு பிளவு யூ.என்.பியில் ஏற்படுவதைத் தவிர்த்திருக்க இயலாது என்பதையும் நாங்கள் மனதிற் கொள்ள வேண்டும்.

டி.எஸ்.சேனநாயக்கவிடமோ பிற யூ.என்.பித் தலைவர்களிடமோ சுதந்திர இலங்கைக்கான ஒரு தேசியப் பொருளாதாரத் திட்டமும் இருக்கவில்லை. தோட்டத்துறை மூலம் வந்த பெருமளவிலான வெளிவருமானத்தில் கணிசமான பகுதி பிரித்தானிய முதலாளிகளிடையே போகிற விதமாகவே தேயிலை வணிகம் நடத்தப்பட்டு வந்தது. ரப்பர், தென்னை உற்பத்தி வருமானத்திலுங் கணிசமான பகுதி தரகர்களுக்கும் கப்பற் கம்பனிகட்கும் போய்ச் சேர்ந்தது. இந்தத் துறைகள் மூலம் சம்பாதிக்கப்பட்ட அந்நியச் செலாவணி அத்தியாவசியமில்லாத பொருட்களின் இறக்குமதிக்கு விரயமானது. இலங்கையின் நெல் உற்பத்தி நாட்டின் தேவைக்குப் போதாத நிலையில் உணவுக்கான அரிசியின் குறிப்பிடத்தக்க பகுதி இறக்குமதியானது. எனவே பொருளாதார நெருக்கடி ஒன்று வரக் காத்திருந்தது. அதைவிடச் சிங்கள நடுத்தர வர்க்கத்தினரிடையே சுதந்தி ரம் பற்றிய எதிர்பார்ப்புக்களும் உருவாகியிருந்தன. 1952ம் ஆண்டுத் தேர்தலில் யூ.என்.பி வெற்றி பெற்றதற்கும் மலையக மக்களின் வாக்குரிமை பாதிக்கப்பட்டதும் பொருளாதார நெருக்கடி இன்னமும் வராததும், டி.எஸ்.சேனநாயக்கா அரசாங்கத்தை ஓரளவு வலுப்படுத்தியிருந்ததும் அவரது திடீர் மரணமும் பங்களித்தன.

அதற்கும் மேலாக இடதுசாரிகள் தமது அரசியற் தளத்தை மேலும் விரிவு செய்வதற்கு மாறாக தமக்குள்ளே முரண்பாட்டு அற்ப விவாதங்களிற் தம் நேரத்தையும் முயற்சியையும் விரயமாக்கியதும் ஒரு பங்களித்தது. இடதுசாரிகள் கைப்பற்ற வேண்டிய ஒரு அரசியல் இடைவெளியைக் குறிவைத்து பண்டாரநாயக்கா காய் நகர்த்தத் தொடங்கினாலும் 1952ம் ஆண்டில் அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை.

டி.எஸ்.சேனநாயக்க எதிர்பாராத விதமாக இறந்தார். தனது மகன் டட்லி சேனநாயக்காவைப் பிரதமராக்குமாறு ஆளுநர் நாயகம் சோல் பெரிப் பிரபுவிடம் அறிவுறுத்தியிருந்தார். 22.3.1952 இல் குதிரையிலிருந்து விழுந்த டி.எஸ்.சேனநா யக்க இறந்தார். அப்போது விடுப்பில் இங்கிலா ந்து போயிருந்த சோல்பெரி பிரபு அவசர அவசரமாக இலங்கைக்குத் திரும்பி வந்து டட்லி சேனநாயக்காவைப் பிரதமராக நியமித்தார். இந்த நியமனம் பற்றியும் டி.எஸ்.சேனநாயக்காவின் சூழ்ச்சிகள் பற்றியும் சேர் ஜோன் கொத்தலாவலவுடைய ஆதரவாளர் ஒருவர் எழுதிய பிறிமிலர் ஸ்ற்றேக்ஸ் (இது ஒரு குதிரைப் பந்தயத்தின் பேர்) எனும் நூல் விவரித்தது.

இவ்வாறு குடும்ப வாரிசு அரசியல் நிலை கொண்ட போதும் நாட்டின் பொருளாதாரம் பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்கியது. தேர்தல் உரிய காலத்திற்கு மூன்று மாதங்கள் முன் கூட்டியே வைக்கப்பட மத்தியவங்கி எதிர் வரவிருந்த பொருளாதார நெருக்கடி பற்றி எச்சரித்தது முக்கியமான ஒரு காரணமாகும்.

இலங்கை சோவியத் யூனியனுடனோ கிழக்கு ஐரோப்பாவின் சோசலிச நாடுகளுடனே சீனாவுடனோ ராஜதந்திர உறவுகளை நிறுவ அக்கறைப்படவில்லை. எனினும் 1952ம் ஆண்டு உலகச் சந்தையில் அரிசி விலை ஏற்றமும் ரப்பரை விற்பதில் சிரமும் இருந்தன. அப்போது கொரியாவில் அமெரிக்கா போர் நடத்திக் கொண்டிருந்தது. சோவியத் யூனியன் ஐ.நா.சபையைப் பகிஷ்கரித்த சூழலைப் பயன்படுத்தி அமெரிக்கா ஐ.நா.சபையின் பேரால் வடகொரியாவுக்கு எதிரான போரை முன்னெடுத்திருந்தது. சீனாவிற்கு எதிரான அமெரிக்க மிரட்டல்கள் காரணமாகக் சீனா வடகொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போரில் இறங்கியது. அதனால் சீனாவுக்கு எதிராகச் சில கேந்திர முக்கியத்துவம் கொண்ட பொருட்கள் மீதான தடை விதிக்கப்பட்டது.

அச் சூழ்நிலையில் இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சியின் நெருக்குவாரத்தின் பின்னணியில் இலங்கை தனக்கு வேண்டிய அரிசியைச் சீனாவிடம் பெற்று சீனாவுக்குத் தேவையான ரப்பரைச் சீனாவுக்கு விற்க உடன்பாடொன்றைச் செய்து கொண்டது. சீனாவைத் தனிமைப்படுத்தும் அமெரிக்க நோக்கத்தை இலங்கை தனது சொந்தத் தேவைகள் கருதி முறியடிக்க உதவியதென்றாலும் சீனா அதற்கு நன்றியுடையதாகவே இருந்து வந்தது. சீனா இலங்கை ரப்பரை உலகவிலையிலும் அதிகமான விலைக்கு வாங்கி அரிசியை உலக விலையிலும் குறைவாக விற்பதற்கான உடன்படிக்கை 1970கள் வரை நீடித்தது.

எவ்வாறாயினும் இலங்கையின் ஏற்றுமதி வருமான வீழ்ச்சியும் இறக்குமதிகளின் விலையேற்றமும் பொருளாதார நெருக்கடியைத் தீவிரமாக்கின 1953ல் அரிசி விலைக்கு வழங்கப்பட்ட மானியம் நீக்கப்பட்டது. அரிசி விலை 25 சதத்திலிருந்து 75 சதமாக ஏறியது. தபால், புகையிரதக் கட்டணங்கள் கூட்டப்பட்டன. பாடசாலை மாணவர்கட்கு பகலுணவுக்காக இலவசமாக வழங்கப்பட்ட பனிஸ் வழங்காமல் நிறுத்தப்பட்டது. இவையெல்லாம் இலங்கை அரசாங்கம் உலக வங்கியிடம் கடன் வாங்கியதன் விளைவாக இலங்கை அரசாங்கத்தின் மீது வைக்கப்பட்ட நிர்ப்பந்தங்கள்.

அப்போதைய நிதி அமைச்சராக இருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன அமெரிக்காவையே அதிகம் நேசித்தார். அதனால் அவருக்கு யான்கி டிக் என்ற பட்டப்பேரும் வழங்கி வந்தது. யான்கி என்பத அமெரிக்கர்களை ஏளனமாகக் குறிக்கிற சொல். டிக் என்பத ஜே.ஆர் என்பதன் இரண்டாவது எழுத்துக் குறிக்கும் றிச்சாட் என்பதற்கு ஆங்கிலத்தில் வழங்கும் மாற்றுச் சொல். ஜே.ஆர் ஜயவர்த்தன வலிந்து அமெரிக்காவின் நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தைத் தள்ளுவதற்கு அன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக இருந்தது. அந்த நெருக்கடிக்கு 1947 முதலே யூ.என்.பி கடைப்பிடித்து வந்த தவறான பொருளாதாரக் கொள்கையே காரணமாக இருந்தது. எனினும் பிரித்தானிய கொலனிய யுகத்திலிருந்து இருந்து வந்த பொருளாதாரப் பிடிப்பு தோட்டத்துறை, ஏற்றுமதி இறக்குமதி வணிகம் ஆகிய துறைகளில் வலுவாகவே இருந்து வந்தது. பிரித்தானியரின் கடற்படைத் தளம் திருகோணமலையிலும் விமானப்படைத்தளம் கட்டுநாயக்காவிலும் தொடர்ந்தும் இருந்து வந்தன. இவையாவும் இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் முன்னாட் கொலனிய எசமானர்களிடம் இருந்து விடுபடாமையே குறித்தது.

இந்தச் சூழலிலேயே விலைவாசிகளில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு மக்களைக் கடுமையாகப் பாதித்ததும் மக்களின் எதிர்ப்புணர்வை அணி திரட்டுவதில் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சிகர சமமாஜக்கட்சி (பிலிப் குணவர்த்தன தலைமையில் உருவாக்கப்பட்டது) என்னும் மூன்று இடதுசாரிக் கட்சிகளும் ஒனறிணைந்து வேலைத்திட்டம் ஒன்றை வகுத்தன.

12 ஒகஸ்ற் 1953 அன்று ஒரு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இலங்கை வரலாற்றில் இன்றுவரையிலான முக்கியமான மக்கள் எழுச்சிகளில் ஒன்றான ஹர்த்தாலில் ஒவ்வொரு கட்சியும் தனது வர்க்கச் சார்பையும் வர்க்க அடையாளத்தையும் ஏதோ ஒரு வகையிற் புலப்படுத்தின எனலாம். எனினும் வேறு காரணங்களாலும் நிலைப்பாடுகளில் ஏறுமாறான நிலைமைகள் இருந்தன.

---

**சிவில் சமூகம் என்பது**

6ம் பக்க தொடர்ச்சி

மீள் குடியேற்றம் போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் தேவையாக இருக்கின்றன. சிலவேளை அரசாங்கம் நிதிவளத்தை கொண்டிருந்த போதும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகவே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதற்கு காரணம் அரசிடம் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இருக்கின்ற கட்டமைப்பு இல்லாதிருக்கலாம். அல்லது நிதியை கொடுக்கின்ற உலக நாடுகள் அல்லது நிறுவனங்கள் அந்நிதிக்கான நடவடிக்கைகளில் அரசசார்பற்ற நிறுவனத்தை இணைத்துக் கொள்ள வேண்டுமென நிபந்தனை விதிக்கலாம்.

பல அரசாங்கங்களின் கொள்கைகள், செயற்திட்ட ங்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களே வரைந்து கொடுக்கின்றன. இதனால் நிதியுதவி செய்பவர்களின் திட்டங்களையே முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

பல மத நிறுவனங்களும் கூட வெறும் பிரசார நிறு வனங்களாகவன்றி நிவாரண மையங்களாகி அரச சார்பற்ற நிறுவனங்களாக இயங்குகின்றன. அதாவது மக்கள் நலன்புரி அமைப்புகளும் கூட அரச சார்பற்ற பொறிமுறைக்குள் அவற்றின் சித்தாந்தங்களை உள்வாங்கிய நிலையில் செயற்படுவதை அறிந்து கொள்ள முடியும்.

மக்களின் கூட்டு வாழ்விற்கு நலன்புரி அமைப்புகள் தேவை. நலன்புரி அமைப்புகள் ஏகாதிபத்திய நிகழ்ச்சிநிரலை நேரடியாகவோ மறைமுகமாகவோ கொண்ட அந்நிய நிதியுதவியுடன் செயற்திட்டத்துடனும் இயங்கும் நலன்புரி அமைப்புகள் உண்மையான நலன்புரி அமைப்புகளல்ல. அவை அரச சார்பற்ற வகையிலடங்குவதுடன் அரசிற்கு மக்கள் மீதிருக்கும் பொறுப்பை குறைத்து மதிப்பிட மக்களை பழக்கப்படுத்திவிடுகிறது. நலன்புரி கொடுப்பனவுகள் கொடுக்கப்படுகின்ற போது அவர்கள் சமூக சேவையாளர்களாகவன்றி சமூக வேலையாளாக மாறுகிறார்கள். நலன்புரி நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் மக்களுக்குப் பணம் வழங்கப்படும்போது நலன்புரி விடயங்கள் அல்லது பிறருக்கு உதவுதல் சேவை செய்தல் போன்றனவெல்லாம் செல்லுபடியற்ற விடயங்களாகின்றன. ஒருவர் தனக்காக உழைப்பதுடன் பிறருக்காகவும் உழைக்க வேண்டுமென்ற பொதுநோக்கு கேலிக்குரியதாக்கப்படுகிறது. எதையுமே விட்டுக் கொடுக்காமல் மனிதன் வாழ முடியாது. அந்த விட்டுக் கொடுப்புடன் கூடியதே பொது வாழ்வும் சமூக சேவையுமாகும். எவரோ கொடுக்கும் பணத்தில் பிறருக்கு உதவுதல் அல்லது சமூக சேவை செய்வதென்பது மக்களுக்கு பணிந்த சேவகர்களாகவன்றி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையையே ஊக்குவிக்கும்.

---

**தமிழ் மக்களின்**

5ம் பக்க தொடர்ச்சி

சீமாட்டிகளும் தமது வர்க்க மேம்பாட்டிற்காக என்றோ நாடு கடந்துவிட்டார்கள். நமது மண்ணில் இருந்த வேர்களை அறுத்துச்சென்ற அவர்களுக்கு எமது மக்களின் உணர்வுகள் புரியாது, தமிழ் மொழி கூட ஒழுங்காகப் பேசவராது. இத்தகைய டமில்க் கனவான்களின் வெட்டி வீண் பேச்சுக்கள் எமது மக்களுக்கு உரிமைகளைக் கொண்டு வந்துவிடாது மட்டுமன்றி எமக்கு மேலும் ஆபத்துக்களை அபாயங்களையும் அவலங்களையுமே மேன் மேலும் தேடித்தர வல்லனவாகும்.

அமெரிக்க மேற்குலக ஆதரவோடு தமிழீழம் அமைக்கப் புறப்பட்டு அழிவுக்குள்ளாகிய கொள்கைக்கு வழிகாட்டியவர்கள் 5/19க்குப்பின் நாடுகடந்த தமிழீழ அரசு பற்றி அறிக்கைவிட்டு வருகிறார்கள். இது கொசாவோ வழியில் அல்லது ஏற்கனவே உருவாக்கப்பட்ட இஸ்ரேல் வழியிலேயே கூறப்பட்டும் வருகிறது. இதனை தமிழ் மக்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ளமுடியும்.

எனவே வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சிக் கோரிக்கையை ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வென்றெடுக்க முன்வந்து அதற்கான பரந்துபட்ட வெகுஜனப் போராட்டப்பாதையில் அணிதிரள வேண்டும். அதன் பாதையில் மட்டுமே தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தை வென்றெடுத்து அடிப்படை வாழ்வுரிமைகளை நிலைநாட்ட முடியும். அதற்கான கொள்கைகளையும் பொது வேலைத்திட்டங்களையும் உருவாக்க வேண்டும். அதுவே இன்றைய தேவையும் அவசியமுமாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





# முட்கம்பிவேலி முகாம்களும் திறந்தவெளிச் சிறைகளும்

இலங்கை ஒரு அழகான தீவு நாடு என்றும் வளங்கள் பலவற்றைக் கொண்டிருக்கும் நாடு என்றும் கூறப்பட்டு வந்த ஒரு காலம் இருந்தது. ஆனால் இன்று அவலங்களும் அசிங்கங்களும் நிறைந்த நாடாக மாற்றப்பட்டிருக்கிறது. தத்தம் சொத்துடைமைப் பெருக்கத்திற்கும் சுரண்டல் மூலமான சுகபோக வாழ்வுக்கும் ஏகப் பெரும் பான்மையான மக்களின் வாழ்வு சூறைபாடப் பட்டு வந்திருக்கிறது. அறுபத்திரண்டு வருட முதலாளித்துவப் பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தின் தொடர்ச்சியும் அதற்கு முன்பிருந்தே கொடிய நச்சுமரமாக வளர்க்கப்பட்டு வந்த பௌத்த சிங்களப் பேரினவாதமும் முழு நாட்டையும் சீரழித்து சின்னாபின்னமாக்கி வந்துள்ளன. இன்றும் கூட அத்தகைய அழிவுப் பாதையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கத் தயாரில்லாத நிலையே நீடித்து வருகிறது. வர்க்க ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை ஆகிய இரண்டு ஆயுதங்களைக் கொண்டு இந்நாட்டு மக்கள் கடந்த அறுபத்திரண்டு வருடங்களில் அடக்கி ஆளப்பட்டு வந்திருக்கிறார்கள்.

நிலவுடைமைச் சிந்தனை வழியிலான முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறையிலும் அதன் மற்றொரு வடிவமான தனிநபர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையிலும் அனைத்து இலங்கை மக்களும் அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளனர் என்பது வரலாற்று நிதர்சனமாகும். 1971, 1988-1989ம் ஆண்டுகளில் தெற்கிலே சிங்கள இளைஞர்கள் யுவதிகள் மக்கள் ஒரு லட்சத்திற்கு மேல் கொன்று ஒழிக்கப்பட்டமை வர்க்க ஒடுக்கு முறையின் உச்ச நிலைக் கொடூரத்தாலேயேயாகும். அவ் வாறே கடந்த முப்பது ஆண்டுகாலப் பகுதியில் தமிழ் மக்கள் சுமார் இரண்டு இலட்சம் வரையில் கொன்றொழிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றால் அது இன ஒடுக்குமுறையின் உச்சநிலைக் கொடூரமாகும்.

கடந்த முப்பது வருட யுத்தம் போராட்டம் என்பனவற்றின் இறுதி விளைவுகளையும் நிகழ்வுகளையும் இன்று வடக்கு கிழக்கிலே மக்கள் பேரவலங்களாக அனுபவித்து வரும் அவலநிலை காணப்படுகிறது. பேரினவாத ஒடுக்குமுறையின் தொடர்ச்சியைத்தான் இன்று வடக்குக் கிழக்கிலே முட்கம்பி வேலிகளினால் அடைக்கப்பட்ட முகாம்களிலும் அதற்கு அப்பாலான திறந்த வெளிச் சிறைச்சாலைகள் போன்ற பிரதேசங்களாலும் காண முடிகிறது. 5/19 முல்லைத்தீவு போரின் முடிவைத் தொடர்ந்து முட்கம்பி வேலிகளுக்குள் மூன்று லட்சம் தமிழ் மக்கள் தடுத்து முடக்கி வைக்கப்பட்டனர். ஆனால் போரின் வெற்றிக்கு முன்பிருந்தே கடந்த முப்பது வருடங்களில் வடக்கு கிழக்கில் திறந்த வெளிச் சிறைச்சாலைகளாகப் பல பிரதேசங்கள் மாற்றப்பட்டன. அவை இன்றும் அவ்வாறே தொடர்ந்தும் இருந்து வருகின்றன.

வன்னி யுத்தத்தின் போதும் அதன் முடிவின் போதும் எல்லா இழப்புக்களையும் பேரவலங்களையும் அனுபவித்த பின்பே மக்கள் அங்கிருந்து வவுனியா வந்தனர். வவுனியா செட்டிகுளம் காட்டுப் பிரதேசத்தில் மெனிக் ஃபாம் பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலத்திலேயே முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் அவற்றுக்குள் அடைக்கப்பட்டனர். கதிர்காமர், இராமநாதன், அருணாசலம், ஆனந்த குமாரசுவாமி ஆகிய தமிழ்க் கனவான்களின் பெயர்களில் அமைக்கப்பட்ட அம் முகாங்களிலும் அவற்றுக்கும் அப்பாலான வலய முகாங்களிலும் வவுனியாவில் உள்ள பாடசாலைகளிலும் மக்கள் அகதிகளாக வைக்கப்பட்டனர். இம் முகாங்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் இடப்பட்டன. வரிசை வரிசையாக மூன்று நான்கு வேலிகள் இடப்பட்டன. அத்துடன் சுற்றிவர ராணுவத்தினர் காவலில் நிறுத்தப்பட்டனர். ஒரு கூடாரத்தில் எட்டுப் பேர் வரையான குடும்பத்தினர் அல்லது கலந்தும் இருக்க விடப்பட்டனர். உணவு, உடை, இருப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மிகமிகக் குறைவானவையாகவே இருந்து வருகின்றன. கழிவறைப் பாவனைக்கு மணிக்கணக்கில் வரிசையில் காத்து நிற்க வேண்டிய அவலம் முதல் தண்ணீருக்காக ஏங்கி நிற்கும் வரை மக்கள் அனுபவிக்கும் வேதனைகள் தாங்க முடியாதவைகளாகும்.

இவ்வாறான முட்கம்பி முகாங்கள் வவுனியாவில் மட்டுமன்றி மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் இருந்து வருகின்றன. அங்கெல்லாம் கடுமையான பாதுகாப்பின் மத்தியிலேயே மக்கள் இருத்தி வைக்கப் பட்டுள்ளனர். ஆண்கள் பெண்கள் குழந்தைகள் வயோதிபர்கள் என்போரில் நோயாளர்கள் இருந்து வருகிறார்கள். வவுனியா திருகோணமலை மன்னார் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைகளில் பெருந்தொகைகளில் நோயாளர்கள் சிறைக்கைதிகள் போன்றே சிகிச்சை பெற்று வருகிறார்கள். அங்கவீனர்களாகிய நோயாளர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் பிரசவம் இடம்பெற்ற தாய்-சேய் என்போரும் கடுமையான பாதிப்புகளுடனேயே இருந்து வருகிறார்கள். இவ்வாறு முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள் பல்வேறு இழப்புக்களைப் பெற்று வந்த போதிலும் தமது சொந்த இடங்கள் வீடுகளுக்குச் செல்லத் தடுக்கப்பட்ட மக்களா கவே இருந்து வருகிறார்கள் என்பது தான் சோகத்தின் மேல் சோகமானதாகும்.

இம் முகாங்களில் உள்ள மக்களிடையே பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் வரை இருந்து வருகிறார்கள். அதே போன்று அரசாங்க உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்படாது உள்ளனர். பலருக்கு உளவியல் தாக்கங்களும் மன அழுத்த நோய்களும் இருந்து வருகின்றன. பலர் கடுமையான சித்தப்பிரமை கொண்டவர்களாகி உள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்பதே இன்றுள்ள கேள்வியாகும். அரசாங்கம் எந்த நோக்கங்களிள் அடிப்படையில் இம்மக்களைத் தொடர்ந்தும் முட்கம்பி வேலிகளக்கிடையில் தடுத்து வைத்து வருகிறது என்பதற்கு உரிய பதில் இல்லை. குறிப்பாக வன்னி மாவட்டங்களின் மக்களை மீளக் குடியமர்த்துவதில் கண்ணி வெடிகளே சாட்டாகக் கூறப்பட்டு வருகிறது. ஆனால் அரசாங்கத்திற்கு உள் நோக்கங்கள் இருந்து வருவதாகவே நம்பப்படுகிறது. யாவும் பாதுகாப்புக் கண்ணாடி ஊடாகவே நோக்கப் படுகின்றன. பாரிய ராணுவ முகாம்களும் பொலீஸ் நிலையங்களும் உருவாக்கப் படுவதாகவே செய்திகள் வெளிவருகின்றன.

இன்று உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இம் மக்கள் விடுவிக்கப்பட்டுச் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக ஒலித்து வருகி ன்றது. ஆனால் அவற்றுக்கு அரசாங்கம் செவி மடுப்பதாகவே இல்லை.

முட்கம்பிவேலி முகாம்கள் இருந்து வருவதற்கு முன்பிருந்தே வடக்கு கிழக்கில் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் போன்ற பகுதிகள் இருந்து வருகின்றன. உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்கள் சொந்த வாழ்விடங்களிலும் நிலபுலங்களிலும் இருந்து விரட்டப்பட்டனர். சுமார் இருபது வருடங்களாக இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலும் ஏனைய பொது இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறே புலிகள் இயக்கத்தால் துரத்தப்பட்ட வடக்கு முஸ்லீம் மக்கள் இன்றுவரை அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். கிழக்கில் கூட, தமிழ் முஸ்லீம் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாதவர்களாக ஆங்காங்கே இருந்து வருகின்றனர். வடக்கிலே இயல்பு வாழ்வு திரும்பவில்லை. அங்கு ஜனநாயக சுதந்திரங்கள் யாவும் கட்டுப்பாடுகளுக்குள்ளேயே இருந்து வருகின்றன. வடக்கிலிருந்து எவரும் அனுமதி பெறாது வெளி மாவட்டங்களுக்குப் பயணிக்க முடியாது. வெளியில் இருந்து செல்வோர் குறிப்பிட்ட நாட்களுக்குப்பின் அனுமதியின்றித் தங்க முடியாது. பாதுகாப்பின் பெயரால் பல்வேறு கெடுபிடிகள் சிரமங்களின் பெயரிலேயே வடபுலத்து மக்களின் வாழ்வு இடம் பெற்று வருகிறது. இரண்டு பிரதான தேர்தல்கள் வர இருப்பதால், அரசாங்கம் சில சலுகைகளை மக்களுக்கு வழங்குவதன் மூலம் தமது வாக்கு வங்கியை நிரப்ப முன்நிற்கிறதே தவிர மக்களைப் பாதுகாப்பு வலயங்களுக்கு உள்ளேயே வைத்திருப்பதிலேயே குறிப்பாக இருந்து வருகிறது. அதாவது, மக்களுக்கான நிகழ்ச்சி நிரல் அன்றி, அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்காக மக்கள் செயற்பட வேண்டும் என்ற நிலை தான். இதனையே திறந்த வெளிச்சிறை என்று கூற முடிகிறது.

மேற்கூறிய முட்கம்பி வேலி முகாங்களும் திறந் தவெளிச் சிறை நடைமுறைகளும் என்று இல்லாது போகின்றதோ அன்று தான் மக்கள் நம் பிக்கைப் பெருமூச்சு விட முடியும். ஆனால் அதற்குரிய காலம் தொலைவிலேயே உள்ளது. இந்நிலையை மாற்றியமைக்காக மக்கள் முன் வரவேண்டும். ஐ.நாவையும் இந்தியாவையும் எதிர்பார்த்து நிற்பதைவிட, மக்கள் ஐக்கியப்பட வேண்டும். மக்கள் சக்தியை ஒன்று கூட்டி, சரியான அரசியல் தீர்மானங்களை மேற் கொண்டு செயற்பட் டால் மாத்திரமே, தற் போதைய அவல நிலைக்கு முடிவு காண முடியும்.

- சண்முகம் -



# தமிழ்ச் சூழலில் ஜனநாயகம்

இன்றும் நிலவுடைமை அமைப்பையும் அதன் கருத்தியல் சிந்தனை நடைமுறைகளையும் தொடர்ந்து பேணிவருவது தான் தென்னாசிய நாடுகளின் பிரதான போக்காக இருந்து வருகிறது. அவற்றின் வழியாகவே பாராளுமன்ற முதலாளித்துவ ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. மக்களது சிந்தனைகள் நடைமுறைகள் இவ் நிலவுடைமைக் கருத்தியல் அடிப்படையிலேயே அடிமைத்தனமாகப் பின்பற்றப்படுகிறது. வர்க்கம், இனம், சாதியம், பால் ஆகிய நான்கும் நமது சமூக அமைப்புச் சூழலில் மிகவும் இறுக்கமான நிலவுடைமைக் கருத்தியல் தளத்தில் இயங்குவையாகக் காணப்படுகின்றன. குறிப்பாக நமது தமிழ்ச் சூழலில் மேற்படி நான்கு விடயங்களையும் தமிழ்த் தேசியம் பேசும் எவரும் தகர்ப்புச் செய்ய முன்வரவில்லை. தமிழ் நாட்டில் பெரியார் என அழைக்கப்பட்ட ஈ.வே.ரா.வினால் சாதியம், பால் ஒடுக்குமுறைகளை அம்பலப்படுத்தி அவற்றுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புரை செய்து சீர்திருத்த இயக்கத்தை முன்னெடுக்க முடிந்தது. அவ்வியக்கம் தமிழகத்தில் தாக்கங்களை உருவாக்கி சமூகம் ஓரளவு ஜனநாயகத் தன்மைகளைப் பெற வைத்ததாயினும் அவரது மறைவுக்குப் பின் அதன் வீரியம் குறைந்து மங்கிக் கொண்டது. இந்த நிலையில் ஒரு சிறு பகுதிகூட இலங்கைத் தமிழ்ச் சூழலில் இடம் பெறவில்லை. ஈழத்து காந்தி, தந்தை என மகிடமிடப்பட்டு அழைக்கப்பட்ட எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திற்கோ அவரது "மைந்தர்கள்" "பேரப்பிள்ளைகளுக்கோ" தமிழ்ச் சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதற்கு அன்றும் இன்றும் தயாரக இல்லை. பாராளுமன்றப் பாதையிலும் ஆயுதம் போராட்டப் பயணத்திலும் நிலவுடைமைக் கருத்தியல் சிந்தனை நடைமுறைகளில் இருந்து வழுவவில்லை. பாராளுமன்றத்திற்கு வேட்பாளர்கள் நியமனம் வெற்றிக்கான வாய்ப்பு ஆகியவற்றில் வர்க்கம், சாதியம், பால் நிலைகள் ஊடாகவே நோக்கப்பட்டு வந்தது. அந்தளவிற்கு மூளையிலும் அதன் சிந்தனையிலும் பழைமைவாதமே ஊறியிருந்து வருகிறது.

உதாரணத்திற்கு அரசியலில் தமிழ்த் தேசியவாதிகள் பயன்படுத்தும் சொல்லாடல்களை உற்று அவதானித்தால் அவற்றினுள் நிலவுடைமைக் காலத்தின் தொடர்ச்சி படிந்திருப்பதைக் காணலாம். தந்தை, அண்ணன், தம்பி, அன்னை, அம்மா என அழைக்கும் பெயர்களிலும் தளபதி, தனிப்பெரும் தலைவர், உயர்திரு, மதிப்பிற்குரிய போன்றவை மட்டுமன்றி சோழன் கரிகாலன் என்றெல்லாம் அழைத்துக் கொள்வதில் பெருமையும் சுகமும் கண்டவர்கள் தமிழ்த் தேசியவாதிகள். இவ்வாறு அழைக்கப்படுவதில் ஏதோ குடும்ப பாச உணர்வும் பழைய மன்னர்காலப் பெருமைகள் மட்டும் தங்கியிருக்கவில்லை. இச் சொல்லாடல்களுக்குள் இன, வர்க்க சாதிய, பால் ஆதிக்க சிந்தனைப் போக்கே படிந்திருக்கின்றது. நடைமுறையில் குடும்பத்திற்கு வெளியே ஐயா, அம்மா, அண்ணன், தம்பி என விழித்து அழைப்பதற்கு சாதிய வரையறைகள் அன்று இறுக்கமாக இருந்து வந்தது. இன்று உயர்வர்க்க அரசியல் தேவை கருதி அவற்றில் நெகிழ்ச்சி காணப்பட்டாலும் படிநிலைச் சாதிய அமைப்புச் சூழல் அவை இருந்து வருகிறன.

1980களின் நடுக் கூறிலே தமிழ்த்தேசியவாத அரங்கில் பத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் ஆயுத இயக்கங்கள் பரவி நின்றன. அவற்றில் எல்லாம் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் என்ற ஒரே தனி அடையாளம் இருந்த போதும் சாதிய அடையாளங்களே முன்னின்றன. அதனால் தான் அன்றைய சூழலில் ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு சாதிகளுக்கு உரியதாகச் சுட்டிக் காட்டப்பட்டு வந்தமையை மறைக்க முடியாது. அவ்வாறு நோக்கப் பட்டபோது ஒருவர் சுட்டிக் காட்டி எழுப்பிய கேள்வி யாதெனில் இத்தனை இயக்கங்களில் எவற்றில் ஒன்றிலாவது ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞன் தலைமை பதவியில் உள்ளான என்பதே யாகும். ஆனால் அடுத்தடுத்த நிலைகளில் இருந்திருக்கிறார்கள். காரணம் அவர்களது போர்க்குணம் உறுதி, உற்சாகம், திறமைகள் புறந்தள்ள முடியாத நிலையிலேயேயாகும். அத்தகையவர்கள் கூட இயக்க உள் அரங்கிலே எவ்வாறு சாதிய சிந்தனைகளுக்கு முகம் கொடுத்தார்கள் என்பது மற்றொரு விடயமாகும்.

இங்கே மற்றொரு விடயத்தையும் நாம் காணுதல் வேண்டும். புலிகள் இயக்கம் ரெலோ இயக்கம் இரண்டும் தோழர் என்ற சொல்லாடலை பயன்படுத்தவில்லை. அவர்கள் தலைவர் அண்ணை, தம்பி, ஐயா, அம்மா, தங்கச்சி என்றே பயன்படுத்தினர். ஏனைய மூன்று நான்கு இயக்கங்கள் தோழர் என்ற சொல்லாடலைத் தம்மிடையே பயன்படுத்தி வந்தன. அவை தோழர்கள் என்ற சொல்லை எந்த அடிப்ப டையில் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது அவர்களுக்கே புரியாத ஒன்றாகும்.

தோழர் என்னும் சொல் மாபெரும் பிரஞ்சுப் புரட்சிக்குப் பின்பான காலகட்டத்தில் எழு ந்து மகத்தான பாரிஸ் கம்யூன் போராட்டத்தில் இருந்து பிரபல்யம் பெற்று வந்த ஒன்றாகும். மாபெரும் பாட்டாளி வர்க்க ஆசான்களின் காலத்தில் அச்சொல் மேலும் துலக்கம் பெற்று ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியில் புடம் போடப்பட்டு உணர்வும் உத்வேகமும் கொண்ட சொற்பதமாகியது. தோழர்கள் தோழமை என்பதற்கு சமத்துவம், வர்க்க உணர்வு, அர்ப்பணிப்பு, தியாகம், மாக்சிச வாழ்வியல், கம்யூனிஸ்ட் மனச்சாட்சி எனப் பல பத்துக் காரணங்களலேயே தோழமை என்பது மக்களை மதித்து சேவை செய்தல் சுய நலமின்மை சொத்துடமை சேர்க்காமை போன்ற வற்றால் உலக வரலாற்றில் நீங்கா இடம் பிடித்து வந்தன. அத்தகைய மகத்தான அர்த்தமுடைய தோழர், தோழர்கள் என்ற பதங்களை தோழமை உணர்விற்கும் சமத்துவத்திற்கும் சம்மந்தமற்ற தமிழ்த்தேசியவாத இயக்கங்கள் சில பயன்படுத்தி சிறுமைக்கும் கொச்சைப்படுத்தலுக்கும் சீரழிவுக்கும் உள்ளாக்கிக் கொண்டமை சோகமானதாகும். இன்று ஒருவரை தோழர் என அதன் உண்மையான அர்த்தத்தில் அழைத்தால் அதனை அவதானிக்கும் ஒரு சாமானியர் அழைத்தவைர ஏதோ ஒரு தமிழ் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கருதும் அளவிற்கு அப்பதம் பழுதாக்கப்பட்டு விட்டது. அந்த மகத்தான சொற்பதம் கம்யூனிஸ்டுக் கட்சிகளிலும் பெரும் புரட்சிகளிலும் போர்க் களங்களில் மட்டுமன்றி தத்தம் தேச நிர்மாணங்களிலும் பயன்படுத்தப்பட்டது. அதற்கு ஆழ்ந்த அர்த்தமும் வலிமையும் இருந்து வந்தது. ஆனால் அதே சொற்பதத்தைப் பயன்படுத்தி நமது சூழலில் கொள்ளை, கொலை, கம்பம், மிரட்டல், சொத்து சேர்ப்பு, பாலியல் வன்புணர்ச்சி போன்ற மக்கள் விரோத செயற்பாடுகள் ஆயுத முனைகளில் செய்யப்பட்டன. இன்றும் அவை முடிவிற்கு வந்ததாகவும் கூறமுடியாது.

இவையாவும் எவற்றின் தொடர்ச்சியும் வெளிப்பாடும் என ஒருவர் சிந்தித்தால் நமது தமிழ்ச் சூழலில் ஜனநாயகப்படுத்தல் இடம்பெறாமை என்றே துணிந்து கூறலாம். எனவே வர்க்கம், இனம், சாதியம், பால் ஆகிய நான்கு ஒடுக்குமுறைத் தளங்களிலும் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் மட்டுமன்றி ஏனைய தேசிய இனங்கள் மத்தியிலும் ஜனநாயகப் படுத்தலோ அவற்றுக்கான கொள்கை நடைமுறை வழியிலான போராட்டங்களோ முன்னெடுக்கப் படவில்லை. தமிழ்ச் சூழலில் சாதியத்திற்கு எதிரானதும் வர்க்க ரீதியில் தொழிற் சங்கப் போராட்டங்களுமே ஜனநாயகத்திற்கான போராட்டங்களாக மாக்சிச லெனினிய வாதிகளால் முன்னெடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சி எழுபதுகளில் இருந்து தமிழ்த் தேசியவாதத்தால் பின்தள்ளப்பட்டது.

எனவே தமிழ்ச் சூழலில் நிலவுடைமை வழிவந்த பழைமைவாத கருத்தியல் சிந்தனை நடைமுறைகள் உரிய போராட்டங்களால் தகர்க்கப்படவேண்டும். ஜனநாயகப்படுத்தல் இடம் பெற வேண்டும் இல்லாவிடில் தமிழ் இன விடுதலை வெறும் கனவுகளாகவே வந்து போய்க் கொண்டிருக்கும் அதனை தமிழ் மேட்டுக்குடி உயர்வர்க்கத்தினர் அவ்வப்போது பயன்படுத்திக் கொள்வர்.

மைந்தன்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர்களும் தமிழீழமும் ⟷ யூதர்களும் இஸ்ரேலும்

இஸ்ரேலுடனான ஒப்பிடுதலின் உட்கிடையை விளங்கிக் கொள்வதனால் 1971இல் பங்ளாதேஷ் உருவான பின்ன ணியிற், தமிழரசுக் கட்சிக்குள் அமிர்தலிங்கம் தன்னை மீள நிலை நிறுத்தத் தனித் தமிழீழம் என்கிற கருத்தை முன்னெடுத்த காலப் பகுதியை நோக்க வேண்டும். 1974இல் தமிழர் ஐக்கிய முன்னணி அமைந்த சூழலில் அமிர்தலிங்கத்தை 'ஈழத்து முஜிபுர்' என்று அழைக்கிற ஒரு போக்கு நிலவியது. முஜிபுர் ரஹ்மான் இந்திய மேலாதிக்கத்தின் எடுபிடியாகப் செயற்பட்டார் என்பது போக, அவரது ஆட்சி யின் அடக்குமுறைத் திமிர்த்தனமும் மக்களிடையே அவர் மீது வெறுப்பை ஏற்படுத்தியது. மக்கள் முஜிபுரை ஆட்சியிலிருந்து விரட்டு முன்பே ஒரு ராணுவச் சதி அவரைக் கொன்று ஆட்சியைப் பிடித்துவிட்டது. அதற்கான விலையை இன்றுவரை பங்காளதேஷ் செலுத்தி வந்துள்ளது. அமிர்தலிங்கத்தை ஈழத்து முஜிபுர் என்று அழைப்பது அத்துடன் ஓய்ந்தாலும், அடிப்படையான எதிர்பார்ப்பு மாறவில்லை. எவ்வாறு இந்தியா ஒரு வங்காள தேசத்தை உருவாக்க உதவியதோ அவ்வாறே ஒரு தமிழீழத்தை உருவாக்கவும் உதவும் என்பதே அந்த எதிர்பார்ப்பு.

1974இல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் உலக நாடுகள் பெரும்பாலானவற்றின் ஆதரவுடன் ஐ.நா. அங்கீகாரத்தைப் பெற்ற வேளையிற், பலஸ்தீன விடுதலை பற்றிய எதிர்பார்ப்புக்கள் வலுவாக இருந்தன. எனவே அமிர்தலிங்கம் 'ஈழத்து அர.ஃபாத்' என அடையாளங் காட்டப்பட்டார். ஆனாலுந் தமிழ் இளைஞர் இயக்கங்கள் 1977இல் அமிர்தலிங்கத்தில் நம்பிக்கை இழந்து போன போது அந்த அடையாளமும் விடுபட்டுப் போய்விட்டது. எனினும் இந்தியா மூலமும் பிற வழிகளிலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட உறவுகள் இஸ்ரேலியக் கனவுகளிலிருந்து தமிழ்த் தேசியம் சிறிது விடுபட்டதன் அறிகுறி எனலாம். ஆனாலுஞ் சில விடுதலை இயக்கங்கள் இஸ்ரேலில் ஆயுதப் பயிற்சி பெற்றன. இஸ்ரேலிய கெரில்லாப் பயிற்சிப் பிரிவு தமிழ்ப் போராளிகட்கும் இலங்கை ராணுவத்தினருக்கும் சமகாலத்திற் பயிற்சி அளித்ததைப் பற்றி நாம் அறிவோம்.

எனவே இஸ்ரேல் என்பது வெறுமனே ஒரு தேசிய முன்மாதிரி என்றோ போராட்டத்திற்கான முன்மாதிரி என்றோ இஸ்ரேலை முதன்மைப்படுத்துதலை வரையறுத்துவிட இயலாது. அதில் வேறு எதிர்பார்புக்களும் இருந்தன.

இஸ்ரேலைத் தமிழர் விடுதலைக்கான முன்மாதிரியாகத் தமிழரசுக்கட்சி காட்ட முற்பட்ட 1961க்குப் பிந்திய காலச் சூழலிற் தமிழரசுத் தலைவர்கள் சிலர், முக்கியமாக அமிர்தலிங்கம், அமெரிக்கத் தூதரகத்துடன் நெருக்கமான உறவுகளைப் பேணத் தொடங்கினாரெனவும் அமெரிக்க வெளி அலுவற் துறையினருடன் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டதாகவுங் கூறப்பட்டது. இத் தகவல்கள் உறுதிப்படுத்தப் படவில்லை யென்றாலுந், தமிழரசுக் கட்சி அமெரிக்கச் சார்பாகப் பேசிய காலமும் அதுவே என்பதை நாம் மறக்கலாகாது.

இஸ்ரேலை வெளிவெளியாக விதந்துரைக்கும் போக்கு, தமிழ் இளைஞர் இயக்கங்கள் ஏறத்தாழ அனைத்துமே இந்திய மேலாதிக்கக் குடையின் கீழ் வரமுன்பே நின்று விட்டது. அதற்கு முன்பிருந்தே இஸ்ரேலிய மோகத்துக்கு எதிராக வேறு காரணிகளுஞ் செயற்பட்டன. வியற்நாம் போரின் இறுதி ஆண்டுகள் அமெரிக்காவின் அசைக்க இயலாத வல்லமையைக் கேள்விக்கு உள்ளாக்கி விட்டன. பலஸ்தீன விடுதலைப் போராட்ட இயக்கத்தின் அறிமுகம் அதை முன்மாதிரியாகக் கொண்ட சில இளைஞர் குழுக்களின் உருவாக்கத்திற்கு ஒரு பங்களித்ததிருந்தது. சாதியத்திற்கு எதிராக 1967 முதல் 1972 வரை நடந்த மக்கள் எழுச்சியும் பழைய தமிழ்த் தலைமைகளின் நம்பகத் தன்மையைக் கேள்விக்கு உட்படுத்தியிருந்தது. எனவே இஸ்ரேலை முதன்மைப் படுத்திப் பேசுகிற போக்கு சில பழமைவாதிகட்குள் முடங்கிக் கிடந்தது.

ஜே.ஆர். ஜயவர்தன 1978முதல் இந்தியாவைப் பகைத்துக் கொண்ட சூழ்நிலையிற் தமிழ்த் தேசியவாதிகளிடையே இந்தியாவைப் பற்றிய சில எதிர்பார்ப்புக்கள் இருந்து வந்தன. எனவே சில போராளிகளது இஸ்ரேலுடனான உறவு ஏகாதிபத்தியத் தூண்டுதல் மூலமே இயலுமானது என நம்பலாம். 1983இன் பேரினவாத ஒடுக்கலின் பின் இஸ்ரேல் இலங்கை அரசாங்கத்தை ஆதரித்த நிலையிற் தமிழரிடையே இஸ்ரேலிய ஆதரவாகவும் இஸ்ரேலை முன்மாதிரியாகக் கொண்டும் பேசுகிற போக்கு முடங்கிப் போயிற்று.

இந்தியக் குறுக்கீடு தமிழ் மக்களுக்கு அழிவைக் கொண்டு வந்த நிலையில், இந்திய நிழலிற் தங்கியிருந்த தமிழ்த் தேசியவாத அரசியற் தலைவர்களும் போராளிக் குழுக்களின் தலைவர்களும் நம்பகத்தன்மை இழந்தனர். 1994இல் யூ.என்.பி. ஆட்சி போனாலும் இலங்கையின் அயலுறவுக் கொள்கையும் உலகமயமாதலுக்கு உடன்பாடான பொருளாதாரக் கொள்கையும் மாறாதிருந்தன. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றி மேற்குலகினதும் இந்தியாவினதும் அணுகுமுறை பகைமையானதாகவே இருந்து வந்தது. எனினும் விடுதலைப்புலிகள் மத்தியில் மேற்குலகை அனுசரித்துப்போகிற ஒரு போக்கு வலுப்பெற்று வந்தது. அதற்கான முழுமையான காரணங்களை நாம் இப்போதைக்கு அறிய இயலாது. எனினும் மேற்குலகு தமிழீழத்திற்கு ஆதரவு தராவிடினும் தமிழ்ப் பிரதேசங்களிற் தனக்குப் பகைமையான ஒரு சக்தி ஆதிக்கஞ் செலுத்துவதை விரும்பாது என்பதை விடுதலைப் புலிகள் அறிந்ததன் விளைவாக அவர்கள் ஏகாதிபத்தியத்திடம் பணிந்து போக முற்பட்டிருக்கலாம். அதைவிடத், தமிழ்த் தேசியவாத அரசியல் மரபின் பழமைவாத இடதுசாரி விரோதச் சிந்தனைகள் அதினின்று கிளைத்த சகல அமைப்புக்களையும் ஊடுருவியிருந்தன. அதனோடு ஒட்டிய ஏகாதிபத்தியச் சார்பான அணுகுமுறையும் போராளி இயக்கங்களைத் தொற்றியிருந்தது. குறிப்பாக, விடுதலைப் புலிகளின் உயர் மட்டங்களிலும் அவர்களது புலம்பெயர்ந்த மேட்டுக்குடி ஆதரவாளர்களிடையிலும் மேற்குறிப்பிட்ட தன்மைகள் முனைப்பாக இருந்தன.

இஸ்ரேலை முன்மாதிரியாகக் காட்டுகிற போக்குக் கடந்தசில ஆண்டுகளாக முக்கியமாக ராஜபக்ச அரசாங்கம் போரைத் தொடங்கிய போதிலிருந்தும், அதிலும் முக்கியமாக, விடுதலைப் புலிகள் வீழ்ச்சியை எதிர்நோக்கத் தொடங்கிய காலந்தொட்டும் மிகவும் தீவிரமாகியுள்ளதுடன் மேற்குலக யூத நிறுவனங்களது ஆதரவை நாடுகிற ஒரு போக்கும் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏகாதிபத்தியச் சார்பு அரசியற் கிடுக்கிப் பிடிக்குள் வைத்திருக்க எடுக்கப்படுகிற முயற்சிகளின் ஒரு பகுதியாகவே நாம் இதைக் கவனிக்க வேண்டியுள்ளது.

தொடரும்

# ஆள் அமைப்பு ஆளுமை 7

## கட்சியும் சித்தாந்தமும் சுதந்திரமான சிந்தனையும்

சி.சிவசேகரம்

ஒருவர் ஒரு அரசியற்கட்சி உறுப்பினராகவோ ஒரு அரசியற் சிந்தாந்தத்தைக் கொண்டவராகவே இருந்தால் அவரது சிந்தனைச் சுதந்திரம் வரையறுக்கப்பட்டு விடுகிறது என்ற கருத்து 1950கள் தொட்டுக் கவனமாகப் பரப்பப்பட்டு வந்துள்ளது. அதற்குக் காரணங்கள் உள்ளன. அக் காரணங்களை அறிய வேண்டுமானால் அவ்வாறான கருத்துக்கள் எத்தகைய கட்சிகளை இலக்கு வைக்கின்றன என்று விளங்கிக் கொண்டாற் போதுமானது.

தெளிவான இலக்குக்களோடு செயற்படுகிற எந்த அமைப்பிலும் தனிமனித அபிப்பிராயங்களுக்கு மதிப்பில்லாத போது அந்த அமைப்புக்களால் விருத்தியடைய இயலாது. அதே போலத் தனி மனித அபிப்பிராயம் என்பது தான் தோன்றித்தனமாக நேரம் இடம் சூழ்நிலை என்பன பற்றிய கணிப்பில்லாமற் கருத்துத் தெரிவிப்பதாக இருந்தால் அது எந்த அமைப்பையுஞ் சீராகச் செயற்பட அனுமதிக்காது.

சமூகத்தில் எவருக்கும் வரையரையற்ற சுதந்திரம் இருப்பதில்லை. இருக்கவும் இயலாது. ஏற்றப்பட்ட நடத்தை விதிகளின் படியே மனிதர் நடக்கின்றனர். எனினும் மீறல்கள் இடையிடையே நடக்கின்றன. மீறல்கள் மேலோங்குமானாற் சமுதாயம் ஒழுங்கற்றுப்போகும். அதேவேளை சமூகம் ஏற்கிற விதிகள் அறிவு சாராதவை என்றோ அநீதியானவை என்றோ ஒருவர் நினைத்தால் அவர் அதைப்பல வழிகளிற் கேள்விக்குட்படுத்த முடியும். மீறல் என்பது அவற்றில் ஒன்று அது கிளர்ச்சி என்கிற வடிவத்தையும் எடுக்கலாம். பொதுவான உடன்பாட்டை நாடுகிற நோக்கமற்ற கிளர்ச்சிகள் பயனற்று நசிந்து விடுகின்றன. எனவே எல்லாவற்றையுங் கேள்விக்குட்படுத்துவது என்பது எதற்காக என்ற நோக்கம் சார்ந்தே பெறுமதி தடையாகிறது.

சனநாயகமான சமுதாயத்தில் எல்லாவிதமான கேள்விகட்கும் அனுமதியுண்டு எனினுங் எல்லாக் கேள்விகளையும் எல்லா இடத்திலும் எவரும் எழுப்ப இயலாது. அது போலவே சனநாயகமான ஒரு க்ட்சியில் எல்லாவிதமான கேள்விகட்கும் இடமுண்டு. ஆனாற் கேள்விகளை எழுப்புவதற்கான வாய்ப்பு வசதிகள் அக்கட்சியின் விதிமுறைகட்கமையவே வழங்கப்ப டுகின்றன. ஒரு கட்சியில் எல்லாவிதமான கேள்வி கட்கும் இடமுண்டு. ஆனாற் கேள்விகளை எழுப்புவதற்கான வாய்ப்பு வசதிகள் அக்கட்சியின் விதிமுறைகட்கமையவே வழங்கப்படுகின்றன. கட்சிக் கொள்கையையோ நிலைப்பாட்டையோ விளக்கங் கோரவும் தெளிவுபடுத்தவும் வேண்டிய கேள்விகள் எங்கேயும் கேட்கக் கூடியன கருத்து முரண்பாடுகளை வெளிப்படுத்துகிற விதமான கேள்விகளும் விசாரணைகளும் அவற்றுக்குரிய களங்களிலேயே எழமுடியும் இது ஒரு கட்சிக்கு மட்டுமல்லாது எந்தப் பொது அமைப்பிற் கும் உரிய நிறுவன விதி. அவ்வாறான வழிகாட்டல் இல்லாத போது அராஜகமோ மிஞ்சும்.

கட்சியின் உறுப்பினர்கள் ஏற்கப்பட்ட கட்சிக் கொள்கைக்கு முரணான முறையிற் கருத்துக்களைத் தெரிவிப்பது ஒழுங் கீனமான நடத்தையாகும். கட்சியின் கொள்கையோ நிலைப்பாடோ ஒருவருக்கு உடன்பாடற்றது. என்றால் அதை உரிய முறையில் விவாதித்து முரண்பாட்டைத் தீர்ப்பது சனநாயகமான நடத்தை அது கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடல்ல, அராஜகமானதும் ஒழுங்கீனமான துமான நடத்தை மீதான கட்டுப்பாடாகும்.

நாம் எல்லாரும் நாம் காணுகிற ஒவ்வொரு விடயத்தைப் பற்றியும் ஏதோ கருத்தைக் கொண்டிருக்கிறோம். நிகழ்வுகள் நமது கருத்துக்களை ஏதோ வகையில் மாற்றுகின்றன. கட்சி ஒன்றின் நிலைப்பாடுகட்கும் உறுப்பினர் ஒருவரது அனுபவங்கட்டுமிடையே முரண்பாடு தோன்றுமாயின் அம் முரண்பாடு தீர்க்கப்பட வேண்டியது. அதைத் தீர்ப்பது கட்சியின் பொறுப்பாகும். இவ்வாறான முரண்பாடுகளின் தீர்வின் போக்கிலேயே கட்சியின் கொள்கைகள் விருத்திய டைகின்றன. எனினும் ஒரு தனிமனிதர் தனது கருத்தை மாற்றிக் கொள்ளுகிற வேகத்தில் ஒரு அமைப்பால் தனது கருத்தை மாற்ற முடியாது. ஆனால் ஒரு தனிமனிதரது தடுமாற்றங்கள் இல்லாமற் சீராக இயங்கும் அமைப்புக்கள் மாற்றங்களை நிதானமாக மேற்கொள்ளுகின்றன.

இடதுசாரிக் கட்சிகளுட் குறிப்பாக மாக்ஸிய லெனினியக் கட்சிகளுள் முழுமையான விவாதங்களுக்கு முக்கியத்துவம் உண்டு. பாரிய கருத்து வேறுபாடுகள் வெளிவெளியாகவே விவாதிக்கப்படுகின்றன. அனைத்திலும் முக்கியமாக விமர்சனம் சுய விமர்சனம் என்கிற நடைமுறை மாக்சிய லெனினியக் கட்சிகளுக்குள் மட்டுமே வலுவாகக் கடைப் பிடிக்கப்படுகிறது எனலாம். எனவே ஒரு அரசியல் கட்சியில் நல்ல சனநாயகப் பாரம்பரியங்களும் ஒழுங்கும் இருக்குமானால் அது தனிமனிதரது கருத்துச் சுதந்திரத்தைச் சமூகப்பயனுள்ள முறையிற் பேணுகிறது எனலாம். சுதந்திரமான சிந்தனை என்பது ஒரு கட்சியின் சித்தாந்தாத்தால் சிறைப்படுத்தப் படுவதில்லை. ஏனெனில் எந்த ஒரு மதத்தையும் போலன்றி ஒரு அரசியற் கட்சிக்குள் யாரும் பிறப்பதில்லை. தீவிரமான ஒரு அரசியற் பின்புலமுள்ள குடும்பத்திற் கூட, எல்லாரும் அந்த அரசியலுடன் உடன்படுவதில்லை. குடும்ப ஆதிக்க அரசி யல் அதற்கு விலக்காக இருக்கலாம். ஆனால் அங்கு கூட எல் லாரும் ஒரு கட்சியின் ஆதரவாளர்களாக இருக்க அவசியமில்லை.

இடதுசாரி அரசியல் ஒருவரது தெரிவின் விளைவானது சிந்தனையில் முன்னேறிய தொழிலாளி வர்க்கத்திடையே இடதுசாரி ஆதரவுக்கு அதிகம் சமூக அக்கறையும் சமத்துவ நோக்கும் கொண்ட ஆய்வறிவாளர்களும் மாணவரும் நடுத்தர வர்க்கத்தினரிற் குறிப்பிடத்தக்க தொகையினரும் இடதுசாரிப் போக்குக்களாற் கவரப்படுகின்றனர். உயர் வர்க்க ஆதிக்க அரசியலுக்கு எதிரான போக்கு சமூகத்தில் வலுப்படும் போது கனிசமானோர் இடதுசாரிக் கட்சி ஒன்றில் இணைய முற்படுகின்றனர். அது அவர்களிற் பெரும் பாலானோர் கவனமாகச் சிந்தித்து எடுத்த முடிவாகவே இருக்கும். ஒரு கட்சியுடனான ஈடுபாடு, நடைமுறை மூலமே விருத்தியடைகிறது. எனவே கட்சியுடனான உறவு வலுப்படும் போது கருத்து முரண்பாடுகளைப் பேசித் தீர்க்கிற பழக்கமும் வலுப்படுகிறது பரஸ்பர நம்பிக்கை உள்ள இடத்து எல்லா வற்றையும் வெளிவெளியாகவும் நேருக்கு நேராகவும் பேசுவது எளிதாகிறது.

எந்த ஒரு நேர்மையான கட்சியிலும் இணைவதாலும் தொடர்ந்து உறுப்பினராக இருப்பதாலும் ஒருவர் கட்சிச் சித்தாந்தத்தைச் சரிவர விளங்கி உள்வாங்கிக் கொண்டா ரென்றோ கட்சிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்ப வராக இருப்பாரென்பதற்கோ உத்தரவாதமில்லை.

ஒரு கட்சியில் இணையும் போது அடிப்படையில் அதன் சித்தாந்தத்தையும் கொள்கைகளையும் வேலை முறைகளையும் ஒருவர் ஏற்றாலும், ~~விமர்சனம் சுயவிமர்சனம் என்பதை ஒருவர் ஏற்றாலும்~~, விமர்சனம் - சுயவிமர்சனம் என்பதை ஒருவர் நடைமுறையிற் தொடர்ச்சியாகப் பேணாத போது தனது சூழலிருந்து உட்புகக் கூடிய தவறான போக்குக்கட்கு அவர் உட்படலாம். ஏனெனில் ஒருவர் வாழ்ந்து வருகிற சமுதாயம் ஒடுக்கும் வர்க்கத்தின் சிந்தனைகளின் ஆதிக்கத்துக்குட்பட்டது. அந்தச் சிந்தனைகள் சமுதாயத்தில் எல்லா மட்டங்களிலும் வெவ்வேறு அளவுகளிலும் முறைகளிலும் உட்பொதிந்துள்ளன. அவற்றைக்களைவது ஒரே நாளில் இயலுமானதல்ல. தொடர்ச்சியான போராட்டம் தேவைப்படுகிறது.

ஒத்த சிந்தனையுடையோருடன் சிறந்த மனத்துடன் உரையாடுகிற போது தவறான கருத்துக்களையும் அணுகு முறைகளையும் திருத்தக் களைய முடிகிறது. அரசியற் செயற்பாட்டினின்றும் ஒதுக்கிச் செல்கிற போது தவறான சிந்தனைகளும் தவறான அணுகுமுறையும் அவற்றின் விளைவாகத் தவறான நடத்தையும் இடம்பெறுகின்றன. ஒரு கட்சி தனது உறுப்பினர்கள செயற்பாடுகள் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும். தவறான போக்குக்கள் தம்மை அடையாளங் காட்டுகிற போது அவற்றை நட்பான முறையிற் திருத்த முயல வேண்டும். பல சமயங்களில் ஒரு கட்சி தனது உறுப்பினர்களின் தவறுகளை விமர்சனம் சுய விமர்சனம் என்கிற முறையிற் திருத்துகிற போது அது தன்னையுந் திருத்திக் கொள்ள முடிகிறது.

எந்தக்கட்சியும் சரியான கருத்துக்களைக் கூட எவர் மீதுந் திணிக்க இயலாது. சரியான கருத்துக்களை ஒருவர் உள்வாங்குவதனால் அவற்றை அவர் தனது பலவாறான செயற்பாடுகள் மூலம் தனக்குள்ளும் தனது கட்சிக்குள்ளும் சமூகத்திலும் பரிசோதிக்க வேண்டும். அதுவே சரியான அரசியல் அணுகுமுறை மாக்சிய லெனினியக் கட்சிகளில் அதை நாம் காணலாம்.

சோசலிஸ ஆட்சி நிறுவப்பட்ட பின்பு தனிமனிதர்கள் மட்டுமன்றி முழுக் கட்சிகளும் சீரழிந்ததைக் கண்டிருக்கிறோம். எனவே தான் அதிகார வர்க்கச் சிந்தனையின் மேலாதிக்கம், கிராம்ஷி, மாஓசேதுங் ஆகியோர் தெளிவாகச் சுட்டிக்காட்டிய விதமாக அதிகார வர்க்கம் தூக்கி எறியப்பட்ட பின்பும் தொடர்கிறது. அது கட்சிக்குள்ளும் தொடரும் என்பது மாஓவின் முக்கியமான அவதானிப்பாகும்.

இவ்வாறு உருவாகும் தவறான சிந்தனைகளதும் அணுகுமுறையினதும் நடத்தையினதும் தோற்றுவாய்கள் சுயநலம், தன்முனைப்பு, விளம்பரமோகம், மேட்டுக் குடித்தனம் போன்ற முதலாளிய நிலவுடைமைச் சமூகச் சிந்தனைகளுடன் தொடர்புடையன. சுய திருப்தி என்பது ஒருவரது வளர்ச்சிக்கு மிகவுங் கேடானது. நாம் நமது சாதனைகள் பற்றி மகிழ்ச்சிய டைவதை விடச் செய்தவற்றை இன்னுஞ் சிறப்பாகச் செய்வது எப்படி என்று தேட முற்படுகிற போது நமது பணிகள் சிறக்கின்றன. நமது கருத்துக்களே சரியானவை என்றும் அவற்றில் விட்டுக் கொடுப்புக்கோ விவாதத்துக்கோ இடமில்லை என்றும் நினைப்பது சிறுபிள்ளைத்தனமான தனிமனித வாதம். அது சுதந்திரமான சிந்தனையின் அடையாளமல்ல.

பல நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும் என்ற நிலைப் பாடே சுதந்திரமான சிந்தனை விருத்திக்கான விளைநிலம். ஒரு கட்சியின் சித்தாந்தம் எந்தவிதமான மாற்றுக் கருத்தையுங் கண்டு அஞ்சுமாயின் அது பலவீனமானதாகவே இருக்கும். எனவே ஒரு கட்சியின் சித்தாந்தம் சுதந்திரமான சிந்தனையை மறுப்பதாலன்றி ஊக்குவிப்பதாலேயே ~~தன்னை சித்தாந்தம் சுதந்திரமான சிந்தனையை மறுப்பதாலன்றி ஊக்குவிப்பதாலேயே~~ தன்னை வலுப்படுத்திக் கொள்கிறது.

அதேவேளை பல விதமான முரண்படுங் கருத்துக்கள் (நட்பானவை, பகைமையானவை, தெளிவானவை, தெளிவீ னமானவை, புதியவை, பழையவை, தர்க்கரீதியானவை, குழப்பமானவை என்றவாறு) எல்லாவற்றையும் ஒருகட்சி வெவ்வேறு முறைகளில் தனது நிறுவன ஒழுங்குக்கமையக் கையாள்வதன் மூலமே அக்கட்சி வளர்கிறது. அதன் உறுப் பினர்களது சுதந்திரமான சிந்தனை பயனும் தெளிவும் மிக்கதாக விருத் தியடைகிறது.

# அரசாங்கத்தை மிரட்டும் ஜீ.எஸ்.பி + பிரச்சினை

மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கும் அமெரிக்க மேற்குலக நாடுகளுக்குமிடையிலான உறவு சுமுகமாக இல்லை என்பது கடந்த சில ஆண்டுகளாகக் காணக் கூடியதாயிருந்ததாகும். இது இந்தியாவையா அமெரிக்க மேற்குலகையா இறுகப் பற்றிக் கொள்வது என்பதில் ஏற்பட்ட நிச்சயமின்மையால் உருவானதாகும். இந் நிலையிலேயே இப்போது ஜீ.எஸ்.பி.+ (GSP+ அதாவது GENERALISED SYSTEM OF PREFERENCES) என்றழைக்கப்படும் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் ஏற்றுமதி வரிச் சலுகையைரத்துச் செய்யும் அபாயச் சங்கு ஊதப்பட்டுள்ளது. இதில் உள்ள முக்கியத்துவம் யாதெனில் இதனால் பல லட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயமாகும். இந்த ஜீ.எஸ்.பி.+ சலுகையைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி தலையிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதிகாரிகளும் அவ்வப்போது சில அமைச்சர்களும் வாய்க்கு வந்த மாதிரி ஜீ.எஸ்.பி.+ சலுகை பற்றி ஏதோதோ கூறி வந்துள்ள போதும் அரசாங்கம் ஐரோப்பிய சமூகத்திடம் மன்றாட்ட வேண்டுகோளை



விடுத்துள்ளது. அதற்கான வேண்டு கோளை ஜனாதிபதியினால் நியமித்த நான்கு பேரடங்கிய அமைச்சரவைக் குழு கையாண்டு வருகிறது.

அதே வேளை ஐரோப்பிய சமூகத்தின் மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான சில சட்டங்கள் அமுல்படுத்தப் படுகின்றனவா என்பதை ஆராய்ந்து ஒரு அறிக்கையை தயாரித்தது. அதில் மனித உரிமைகள், ஊடக சுதந்திரம், நிதித் துறை மற்றும் இராணுவம், பொலீஸ் சம்பந்தப்பட்ட விடயங்களில் அரசாங்கம் நடந்துகொள்ளும் விதம் கண்டனத்திற்குள் ளானது. இந்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக ஐரோப்பிய சமூகம் இந்த மாதம் (ஒக்டோபர்) ஒரு தீர்மா னத்திற்கு வரும். அதன் பின்னர் ஐரோப்பிய சமூகத்தின் வெளி விவகார அமைச்சர்கள் டிசம்பர் மாதத்தில் அதை ஊர்ஜிதம் செய்வர். இந்தச் சலுகை மீளப்பெறப்பட்டால் 2010 யூன் மாதம் வரை ஆறு மாத கால அவகாசம் வழங்கப்பட்டு அக் காலப் பகுதியில் நிலைமை சீர் செய்யப் படுகிறதா என்பதை ஐரோப்பிய சமூகம் அவதானிக்கும். அக் கால எல்லைக்குள் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம். இந்த ஜி.எஸ்.பி.+ சலுகையின் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சி உப தலைவர் கரு ஜயசூரியா வலியுறுத்தியுள்ளார். அவர் தெரிவித்த சில தகவல்கள் பின்வருமாறு:-

இந்தச் சலுகையானது ஆடைக் கைத்தொழிலுக்கு உயிர் நாடி போன்றது. இதில் 270,000 பேர் நேரடியாக வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இதனோடு சம்பந்தப்பட்ட தொழில்களில் மேலும் பத்து இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

தைக்கப்பட்ட ஆடைகளில் 52 சதவீதமானவை ஐரோப்பிய சமூகத்திற்கு செல்கிறது. இதன் பெறுமதி 3400 கோடி அமெரிக்க டொலராகும். ஜி.எஸ்.பி. சலுகையினால் இலங்கையின் நிறுவனங்கள் உலகச் சந்தையில் போட்டி போட முடிகிறது.

இந்தச் சலுகை கிடைக்காவிட்டால், நாட்டின் முழுப் பொருளாதாரத்தில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் கிராமப்புறத்தையும் பெரிதும் பாதிக்கும் எனக் கருஜெயசூரியா தெரிவித்திருக்கிறார்.

1984ம் ஆண்டு அங்ராட் (UNCTAD) அமைப்பானது வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் வர்த்தகச் சலுகைகள் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது. அதைத் தொடர்ந்து 1971ம் ஆண்டில் ஐரோப்பிய சமூகம் முதலில் ஜி.எஸ்.பி.+ சலுகையைப் பின்தங்கிய நாடுகளுக்கு வழங்க முன்வந்தது.

ஐரோப்பிய சமூகம் ஏன் இதில் முந்திக் கொண்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இதன் பின்னால் உள்ள அரசியலைப் புரிந்து கொள்ள வேண்டும். தற்போது 'சுதந்திர' நாடுகள் எனப்படுவனவும் வளர்ச்சி குன்றிய நாடுகள், வளர்ச்சியடையும் நாடுகள் என்றெல்லாம் அழைக்கப்படுவனவுமான ஏகப் பெரும்பான்மையான பின்தங்கிய நாடுகள், இந்த ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த நாடுகளின் கீழ்க் கொலனிய நாடுகளாயிருந்தன. ''சுதந்திரம்'' பெற்ற இந்த நாடுகளைத், தொடர்ந்தும் பொருளாதார ரீதியில் தமது காலடிகளில் வைத்திருக்கும் நோக்கிலேயே ஐரோப்பிய சமூகம் காட்டுகிற ''அக்கறை'' இது என்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். இது நவகொலனியத்தை உறுதிப்படுத்தும் ஒரு செயற்பாடாகும். அதாவது பழைய எசமானங்களின் புதிய பிச்சையேயாகும். இதனை இருகரம் நீட்டிப் பெறுவதைத் தவிர வேறு மார்க்கம் இந் நாடுகளுக்கு இல்லை. இந்த ஜீ.எஸ்.பி.+ முறைமை (G.SP+) என்ற ஆங்கிலப் பதத்தைப் பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமை முறை எனக் கொள்ளலாம். ஜீ.எஸ்.பி.+ என்ற வர்த்தகச் சலுகை அமெரிக்கா, கனடா, யப்பான் போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளினாலும் வழங்கப் படுகின்ற போதும் ஐரோப்பிய சமூகத்தினால் வழங்கப்படும் ஜீ.எஸ்.பியே மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலே குறிப்பிட்ட அரசியல் பின்னணி இதற்கான காரணம் எனலாம்.

அமெரிக்கா கனடா, யப்பான், ஆகிய நாடுகள் மூன்றும் தத்தமது நாடுகளில் அவற்றின் ஜீ.எஸ்.பி. முறையின் கீழ்ச் செய்த இறக்குமதியின் பெறுமதி 1600 கோடி யூரோவாக இருக்கும் அதேவேளை 2003இல் ஐரோப்பிய சமூக நாடுகளின் இறக்குமதியானது 5200 கோடி யூரோவாகவிருந்தது கவனத்திற்குரியதாகும். இங்கு விமர்சனத்திற்குள்ளான ஜீ.எஸ்.பி.+ ஐரோப்பிய சமூகத்தினால் வழங்கப்பட்ட சலுகை தொடர்பானதேயாகும்.

2004ம் ஆண்டு சுனாமியைத் தொடர்ந்து ஐரோப்பிய சமூகம் ஒரு விசேட நடவடிக்கையாக இலங்கைக்கு இந்த ஜீ.எஸ்.பி.+ சலுகையைக் கொடுக்க முன் வந்தது. இலங்கை தற்போது அனுபவிக்கும் சலுகை 2008ம் ஆண்டின் இறுதியில் முடிய இருந்த நிலையில் அந்தச் சலுகையை நீடிக்குமாறு இலங்கை அரசு அதன் விண்ணப்பத்தை ஒக்டோபர் 9ம் திகதி பிரஸல்சுக்கு அனுப்பி வைத்தது. உரிய கால எல்லைக்குள் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததன் நோக்கம் ஜி.எஸ்.பி. சலுகையை தேர்தல்கள் முடிவடையும் வரை தக்கவைத்திருப்பதற்கேயாகும்.

2008 யூலை 22ந் திகதி ஜீ.எஸ்.பி திட்டத்திற்கு புதிய விதிகளும் சேர்க்கப்பட்டன. இந்த விதிகள் 2009 ஜனவரியிலிருந்து 2011ம் ஆண்டு முடியவுள்ள காலப்பகுதிக்கு செல்லுபடியாகும். இதன்படி 6421 பண்டங்களுக்கு ஐரோப்பிய சமூகத்தினுள் எந்தவித சுங்கத் தீர்வையும் விதிக்கப்பட மாட்டாது என்றிருந்தது.

ஒரு நபர் அல்லது ஒரு நாடு ஏதோ ஒரு அமைப்பில் சேர விரும்பினால் சம்பந்தப்பட்ட அமைப்பின் யாப்புக்கு அல்லது சட்டதிட்டங்களுக்கு அமையச் செயற்பட இணங்கினால் மட்டுமே விண்ணபத்தைச் சமர்ப்பிக்க முடியும்.

இந்த ஜீ.எஸ்.பி. சலுகைக்கு விண்ணபித்த போது ஏற்றுமதி ஊக்குவிப்பு, சர்வதேச வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எஸ். பீரிஸ் அமைச்சரவைக்கான தனது சமர்ப்பணப் பத்திரத்தில் அதன் 27 உடன்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். எனவே, ஜீ.எஸ்.பி. சலுகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் குறிப்பிட்ட 27 உடன்பாடுகளையும் நாடு சரிவர அமுல்படுத்துகிறதா என்ற விடயத்தை ஐரோப்பிய சமூகத்தின் ஜீ.எஸ்.பி. செயற்குழு பரிசீலனைக்குள்ளாக்கும் என்பது அமைச்சருக்கும் அமைச்சரவைக்கும் தெரிந்திருந்த நிலையிலேயே சலுகை நீடிப்புக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப் பட்டது.

2007ம் ஆண்டு இலங்கை 280 கோடி டொலர் பெறுமதியான ஏற்றுமதியை ஐரோப்பிய சமூக நாடுகளுக்கு மேற்கொண்டது. இதில் 140 கோடி டொலர் பெறுமதியான தைக்கப்பட்ட ஆடைகள் அடங்கும். இத் தொகையின் பெரும் பகுதி ஜீ.எஸ்.பி சலுகையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

''ஒரு சமயம் இலங்கையில் 800 ஆடைத்தொழிற்சாலைகள் இருந்தன. இன்று சுமார் 300 தொழிற்சாலைகள் மட்டுமே உள்ளன. இதில் 150 தொழிற்சாலைகள் கிராமப் புறத்தில் உள்ளன'' என்று மாஸ் ஹோல்டிங்ஸ் தலைவர் மகேஷ் அமலீன் தெரிவிக்கிறார்.

ஆடைத் தொழிற்துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களில் 80 வீதமானவர்கள் கிராமப்புற இளம் பெண்கள். சுமார் மூன்று இலட்சம் பேர் நேரடியாக வேலை செய்கின்றனர். இத் துறையோடு சம்பந்தப்பட்ட வகையில் சுமார் பத்து இலட்சம் பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இவ்வாறு வேலை இழக்கும் கிரமப்புற இளம் யுவதிகள் மத்தியகிழக்கு நோக்கி தழ்ழப்படுவர். அவ்வாறு ஏற்கனவே சென்ற பெண்களின் அவலநிலை எல்லோரும் அறிந்ததே ஆகும்.

''ஜி.எஸ்.பி சலுகை இரத்துச் செய்யப்பட்டால் சுமார் ஒரு இலட்சம் பேர் வேலையை இழக்க நேரிடும்'' என ஆடை உற்பத்தியாளர் சங்கம் ஜே.ஏ.ஏ.எவ். (JAAF) மதிப்பிட்டுள்ளது. அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த ''அந்தரங்கமான'' சமர்ப்பணத்தில் அமைச்சர் இதையும் குறிப்பிட்டிருந்தார். ''அமெரிக்காவின் பொருளாதாரத் தேக்கத்தின் தாக்கம் அடுத்த வருட முதல் ஆறு மாதங்களில் எங்களை வந்தடையும். அடுத்த வருடம் முழுவதும் கஷ்டமாயிருக்கும். முதல் ஆறு மாதமும் மிக இறுக்கமாயிருக்கும்.''

''ஏற்கனவே ஆடைத் தொழிற்சாலைகளுக்கு கொள்வனவுக் கட்டளைகள் குறைந்துள்ளன. விலைகளையும் குறைக்க வேண்டியுள்ளது''.

அமெரிக்கா மட்டுமல்ல ஐரோப்பிய சமூக நாடுகளும் பொருளாதார சி-கலில் உள்ளன. இதுவும் பெரிய த-க்கத்தை ஏற்படுத்தும். தேயிலை, ரப்பருக்கும் பெரிய நெருக்கடி தோன்றியுள்ளது. தேயிலை வாங்குவோர் இல்லாமல் சந்தைக்குப் போன தேயிலையில் 65 வீதமானவை திரும்பியதாக செய்திகள் வந்துள்ளன. தேயிலை உற்பத்தித் துறைக்கு மீட்பு நிதி 700 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகம் எக்கனோமெற்றிக் முறையில் மேற்கொண்ட கணிப்பு, ஜீ.எஸ்.பி.+இரத்துச் செய்யப்பட்டால் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி இரண்டு சதவீத வீழ்ச்சியடையுமெனக் கூறுகிறது.

சிக்கல் இது மட்டுமல்ல. இலங்கையின் தைக்கப்பட்ட ஆடைகளில் கிட்டத்தட்ட அரைவாசி அமெரிக்காவிற்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. மாஸ் ஹோல்டிங்ஸ் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான மகேஷ் அமலீன் கூறுவதென்ன?

ஆடைத் தொழிற்துறை ஜீ.எஸ்.பி.+ சலுகை இழப்பினால் எதிர்கொள்ளும் தாக்கத்திலிருந்து அதை மீட்டெடுக்க அரசாங்கம் அறிவித்திருக்கும் 15 கோடி டொலர் தொகையானது ஒரு வருடத்திற்கானது. ஒரு வருடத்தின் பின் என்ன? இந்த ஜீ.எஸ்.பி.+ சலுகையை நீடிக்கக் கோரிக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதால், விசாரணை வாதப் பிரதிவாதங்களை நடாத்துவதன் மூலம், இந்தச் சலுகை 2009ம் ஆண்டு முடியும் வரை தற்காலிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. அடுத்த வருடத்தில் தேர்தல் வரும். தேர்தலின் போதும் இந்தச் சலுகை இருக்கும். தேர்தலைப் பாதிக்காத வகையில் இந்த மீட்பு நிதி வழங்கப்



படுகிறது. இந்த மீட்பு நிதிகளால் பண வீக்கம் அதிகமாகும். அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் முதலாளித்துவ நாடுகளின் முதலாளிகளின் நலன்கள் பாதிப்படையாதிருக்கவே மீட்பு நிதியை மக்கள் வரிப் பணத்திலிருந்து கொடுக்க முன் வந்துள்ளன. அது போலவே ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள், தேயிலை, ரப்பர் தோட்ட உரிமையாளர் நலனைப் பாதுகாக்க மீட்பு நிதி வழங்க அரசாங்கம் முன் வந்துள்ளது. மக்களுக்கு அரசு நிதி உதவி, மான்யம் வேண்டாம் என்று கூறும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் முதலாளிகளுக்கு மான்யம் வழங்குவதை அங்கீகரித்துள்ளது.

சுயாதீனம், சுயகவுரவம் என்ற மாய்மாலங்களைக் கூறி அரசாங்கம் மக்களை ஏமாற்றுகிறது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக மையம், இலங்கை-இந்திய வர்த்தக உடன்படிக்கை போன்றவற்றினால் நாட்டின் இறைமையை ஏற்கனவே அடகு வைத்து அரசாங்கம் முதலாளித்துவ நலன்களைப் பாதுகாத்து வந்துள்ளது. இன்று நாட்டின் இறைமைக்கு ஏற்றதல்ல என்ற காரணம் கூறி ஐரோப்பிய ஆணைக்குழுவின் விசாரணையை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லையென வாய்ச்சவாடல் விடுக்கின்றது. அடுத்த வருடம் தேர்தல் முடிந்த பின் கதையை வேறுவிதமாகச் சொல்லி ஜி.எஸ்.பி.+ சலுகை போன்ற ஏனைய சலுகைகளையும் மண்டியிட்டுப் பெறுவார்கள். ஏனெனில் நவகொலனித்துவ உலகமயமாதலை மகிந்த சிந்தனை அரசாங்கம் எவ்வாகையிலும் நிராகரிக்காது இறுக்க கட்டித்துழுவியே நிற்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் ஜி.எஸ்.பி.+ சலுகையின் கீழ் ஆடைத் துறையினர் மட்டும் பாதிப்படையவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

நீரியல் உற்பத்தி, அலங்கார மீன்வகை, பழங்கள், தாவர உணவு வகைகள், பீங்கான் பொருட்கள், துவிச்சக்கரப் பொருத்துகள், தோல், ரப்பர் பொருட்கள் என சுமார் இரண்டாயிரம் பண்டங்களும் ஜீ.எஸ்.பி.+ சலுகையால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ஏற்றுமதியானது மொத்த ஏற்றுமதியில் 35 வீதம் எனக் கூறப்படுகிறது. ஜி.எஸ்.பி.+ சலுகை இழப்பினால் இந்தத் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் பாதிப்புக்குள்ளாவர். எனவே ஜி.எஸ்.பி+ என்பதனை வைத்து இன்றைய அரசாங்கத்தை மிரட்டிப் பணிய வைக்கவே எத்தனிக்கப்படுகிறது. இதனை எதிர்கொள்ள வெறும் வாய்ச்சவடால் போதுமானதாக இருக்க முடியாது.

- சிறீ -

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

# ஒலிம்பிக்: விளையாட்டல்ல வியாபாரம்

2016ம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் நாடாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் தென்னமெரிக்க நாடான பிரேசிலின் தலைநகரம் ரியோடி ஜெனேரோ தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. 2016ம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்த அமெரிக்கா (சிகாகோ), யப்பான் (டோக்கியோ), ஸ்பெயின் (மட்ரிட்) ஆகிய நான்கு நாடுகள் விருப்பம் தெரிவித்திருந்தன. எனவே சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியானது தனது 106 உறுப்பினர்களின் வாக்கெடுப்பின் மூலம் யாருக்கு வாய்ப்பை வழங்குவது என்பதை தீர்மானித்தது.

வாக்கெடுப்பன்று உறுப்பினர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நான்கு நாடுகளும் கடுமையான முயற்சியில் ஈடுபட்டன. அதனொரு கட்டமாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வாக்கெடுப்பு நடைபெறுகின்ற டென்மார்க்கின் தலைநகர் கோப்பன்ஷேகனுக்கு வந்திருந்தார். ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர்களிடையே ஒபாமாவும் அவரது துணைவியார் மிச்செல் ஒபாமாவும் உரையாற்றினர். சிக்காகோ நகருக்கு ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களின் வேண்டுகோளாக இருந்தது. (அது வேண்டுகோளா கட்டளையா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்) ஒபாமாவின் வருகை சிகாகோ வெற்றிபெற்றுவிடும் போன்றதான தோற்றத்தை உருவாக்கியிருந்தது. பீ.பீ.சி முதற்கொடு பல சர்வதேச ஊடகங்கள் ஒபாமாவின் பேச்சை நேரடியாக ஒளிபரப்பின. அமெரிக்காவுக்கும் ஒபாமாவுக்கும் கொடுத்த முக்கியத்துவமும் ஒளிபரப்பு நேரமும் (Air Time) மிகுதி மூன்று நாடுகளுக்கும் வழங்கப்படவில்லை. முதற்கட்ட வாக்கெடுப்பில் வெறும் 18 வாக்குகளைப் பெற்று நான்காவதாக வந்து போட்டியிலிருந்து முதலில் வெளியேற்றப்பட்டது அமெரிக்கா. இது மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

அமெரிக்கர்கள் ஒபாமா வெறுங்கையுடன் திரும்புவதைக் கண்டு மகிழ்ச்சியடையமாட்டார்கள் என்று அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தது. வீணாக டென்மார்க் போய் சாதிக்க முடியாத உலக வல்லரசாக மாறிப்போனது அமெரிக்கா. ஆனால் இது பற்றிக் கருத்துரைத்த அமெரிக்க விமர்சகர்கள் ஒபாமா சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிக்கு ஒரு மாரியாதை கொடுக்கவே வந்தார் என்றும், அவருடைய கவனம் ஒலிம்பிக் அல்ல என்றும் தெரிவித்தனர். விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை. இதை விட இன்னொரு விளக்கமும் அமெரிக்க அரசால் சொல்லப்படுகிறது. டிசம்பரில் காலநிலை சூழல் பாதுகாப்பு மாநாட்டுக்காக அமெரிக்க அதிபர் டென்மார்க் வருவதாக இருக்கிறது. அதற்கு முன்னர் அமெரிக்கா காபனீரொக்சைட் வெளியிடுவதை கட்டுப்படுத்த எந்தளவுக்கு உடன்படும் என்ற படிவங்களை டென்மார்க்கிடம் வழங்கவே ஒபாமா வந்தார் என்றும் சொல்லப்பட்டது. வாக்கெடுப்பின் பின்னர் செய்திகளை வெளியிட்ட பீ.பீ.சி அமெரிக்கா வெளியேற்றப்பட்டதை "ஒபாமா ஒலிம்பிக் கமிட்டியால் அவமானப்படுத்தப்பட்டார்" என்று தலைப்பிட்டது. இது குறித்து பீ.பீ.சியில் கருத்து தெரிவித்த பலர் அமெரிக்காவை பகைத்ததற்கான விலையை ஒலிம்பிக் கமிட்டி கொடுத்தே ஆகவேண்டும் என்றனர்.

இதைவிட இரண்டாவது சுற்றில் வெளியேற்றப்பட்ட டோக்கியோ நகரின் மேயர் கருத்துத் தெரிவிக்கையில் "உலகில் நடக்கின்ற கடைசி ஒலிம்பிக் போட்டி இதுவாகத்தான் இருக்கும். காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் போன்ற உலகலாவிய அச்சுறுத்தல்களை நாம் எதிர்நோக்கின்ற போது ஒலிம்பிக் என்று வீணாகச் செலவழிக்கக் கூடாது" என்றார். இங்கே கவனிக்கப்பட வேண்டியது இதை இவர் சொன்னது டோக்கியோ தெரிவாகாததைத் தொடர்ந்தே. இவ்வளவு அக்கறையென்றால் டோக்கியோ ஏன் ஒலிம்பிக்கை நடாத்தப் போட்டி போட்டது.

இவையெல்லாம் பதில்களை வேண்டிநிற்கும் வினாக்கள். இவையெல்லாவற்றையும் விட இவற்றிலிருந்து எழுகின்ற அடிப்படையான கேள்வி ஒன்று தொக்கி நிற்கின்றது. ஒரு ஒலிம்பிக்கை நடாத்துவதற்கு ஏன் இத்தனை போட்டி. உலகின் போலிஸ்காரரான மட்டுமன்றி நினைத்ததை நினைத்தமாதிரி செய்யக்கூடிய அமெரிக்காவா கேவலம் ஒரு ஒலிம்பிக்கை நடாத்த முடியாமல் போனதற்காக வருந்துகின்றது. ஒரு ஒலிம்பிக் போட்டியை அமெரிக்காவுக்கு தருமாறு கேட்கவா ஒபாமா மினக்கெட்டு டென்மார்க்குப் போனார். இங்கே தான் விடயம் இருக்கின்றது. ஒலிம்பிக் போட்டியை சிகாகோ நடாத்தினால் அமெரிக்காவுக்கு கிடைக்கக்கூடிய இலாபம் 36 பில்லியன் அமெரிக்க டொலர்கள். இது வெறுமனே போட்டிகளை நடாத்துவதால் கிடைக்கும் இலாபம் மட்டுமே. விளம்பரங்களால் மற்றும் பிற வருமானங்களால் வரும் இலாபம் தனி. ஒலிம்பிக்கை நடாத்த சிகாகோவுக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தால் உடனடியாக 4,87,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இவைதான் அமெரிக்கா ஒலிம்பிக்கை நடாத்த ஆசைப்பட்டதற்குக் காரணம். அமெரிக்கப் பொருளாதாரம் இப்போது எதிர்நோக்குகிற நெருக்கடியிலிருந்து வெளியேறக்கூடிய சகல வழிகளையும் அமெரிக்கா தேடுகின்றது. அதன் ஒரு பகுதிதான் ஒலிம்பிக்கை அமெரிக்காவிற்கு கொண்டுவரும் முயற்சி. டோக்கியோ மேயர் தனது வயிற்றெரிச்சலை கொட்டியது ஒன்றும் காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் பற்றிய பொது அக்கறையினால் அல்ல தங்களது பொருளாதாரத்தை சீரமைக்க ஒலிம்பிக் தமக்கு கிடைக்கவில்லை என்பதாலேயே.

மூலதனம் ஏகாதிபத்தியமாக வளர்ந்துள்ள நிலையில் அது தன் தேச எல்லைகளைத் தாண்ட அந்நிய நாடுகளின் உற்பத்தியையும் வணிகத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயல்கிறது. உலகச் சந்தை மீதான ஏகபோக முதலாளிய ஆதிக்கம் இன்று பொருளாதார நெருக்கடியின் விளைவால் மிகப்பெரிய சவால்களை சந்திக்கிறது. எனவே தன்னை மீளமைத்துக் கொள்ள சகல வழிகளையும் நாடுகிறது. இன்று அமெரிக்காவின் ஆதிக்கம் குறைவடைந்து வருகின்றது. எனினும் அமெரிக்காவே உலகின் பெரிய போர் இயந்திரத்திற்குப் பொறுப்பாக உள்ளது. அதுவரை உலக அலுவல்களில் அமெரிக்காவில் செல்வாக்கு அதிகமாக இருக்கும். எனினும் என்றென்றைக்குமல்ல.

# லால்கர்: கற்க வேண்டிய பாடங்கள்

"மாஓவாதிகளிடம் இந்தியா தோல்வியடைந்து வருகிறது" என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார் மன்மோகன் சிங். இது வெறுமனே ஒரு அறிக்கையோ அல்லது தனிப்பட்ட மனிதனொருவரின் கருத்தோ அல்ல. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகின்ற இந்தியாவின் பிரதமர் மிகுந்த கவலையோடும் கலக்கத்தோடும் சொன்ன வார்த்தைகள் இவை. நந்திகிராமில் தொடங்கி சிங்கூர் வழியாக லால்கரை வந்தடைந்திருக்கிறது மக்கள் போராட்டமும் மாஓவாதிகளின் செயற்பாடுகளும். இந்தியா பெருமுதலாளிகளின் சுரண்டலுக்கான களமாக மாறிய தன் விளைவுகள் தான் இவை.

லால்கார் பழங்குடியின மக்கள் அமைதியானவர்கள். அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் வறுமையில் உழல்பவர்கள், சாலை வசதியே இல்லாத கரடுமுரடான காட்டுப் பாதையில் நீண்ட நெடும்பயணமாக கண்ணீர் மல்க நோயுற்ற தமது அன்புக் குழந்தைகளை தூக்கிக் கொண்டு மாவட்ட மருத்துவமனைக்கு ஓடி, அங்கே சிகிச்சை பலனளிக்காமல் குழந்தைகள் இறப்பதே வழமையாக இருந்தது. கோடை காலங்களில் குடிநீர் இல்லாமல் தத்தளிக்கும்போதும், காட்டுக் கிழங்குகளை வேகவைத்து பசியாறிக் கொள்பவர்கள். பட்டினியால் பரிதவித்த போதும், ஆரம்பப் பள்ளி இல்லாமலும் ஆசிரியரே இல்லாத பள்ளியாலும் தமது குழந்தைகள் தொடக்கக் கல்விகூடக் கற்க முடியாத அவலத்தைக் கண்டபோதும் – இவையெல்லாம் தலைமுறை தலைமுறையாக உள்ள விசயம்தானே என்று தமக்குத்தாமே ஆறுதல்பட்டுக் கொண்டு அமைதியாக இருந்தார்கள். 2008 நவம்பரில் எல்லாமே மாறிப்போனது. அப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெறும் போலிஸ் அராஜகத்தை எதிர்த்து மக்கள் போராடத் தொடங்கினார்கள். லால்கர் பகுதியில் 5,000 ஏக்கர் நிலம் இந்தியாவின் மிகப்பெரிய இரும்பு உற்பத்தி நிறுவனமான ஜின்டால் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. லால்கார் மக்கள் பாதைகளை மூடியும் ஆர்ப்பாட்டங்கள் மூலமும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதை இந்திய அரசு மாவோவாதிகளின் பயங்கவாதம் என்கிறது. வறுமையையும் அடக்குமுறையையும் சகித்துக் கொண்டு அமைதியாக இருந்த பழங்குடியின மக்கள் மெதுவாக விழித்தெழுந்து போராடத் தொடங்கியபோது, அது சட்டம் – ஒழுங்கைச் சீர்குலைக்கும் வன்முறையாக சித்தரிக்கப்பட்டது. பழங்குடியினக் கிராமங்களைச் சுற்றி வளைத்துச் சூறையாடி விடிய விடிய வதைத்த போலீசாரின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடி போலீசாரை அப்பகுதியிலிருந்து மக்கள் விரட்டியடித்த போது அது பயங்கரவாதமாக பொருள் கொள்ளப்பட்டது.

லால்கார் மக்கள் ஒன்றிணைந்து காவல்துறையினரின் அடக்குமுறைக்கெதிரான மக்கள் குழுவை நிறுவினார்கள். இது அவர்களின் போராட்டத்தை புதிய திசைக்கு எடுத்துச் சென்றது. இளம் தலைமுறையினர் இதற்குத் தலைமைதாங்கினர். அந்த எளிமையான மக்களிடம் மிகப்பெரிய ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை. கத்திகளும் தடிகளும் மட்டுமே இருந்தன. இந்த மக்கள் குழு கிராமங்களில் மருத்துவ – சுகாதார வசதியும், பள்ளிகள் – சாலைகள் – பாலங்கள் உள்ளிட்டு மின்சார வசதியும் ஏற்படுத்தித் தரக் கோரி கடந்த பத்து மாதங்களாகப் போராடி வருகிறது. அடக்குமுறையில் ஈடுபட்ட போலீசார் மக்கள் முன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும் அதுவரை போலீசாரையோ அரசு அதிகாரிகளையோ இப்பகுதியினுள் நுழைய அனுமதிக்க மாட்டோம் என்ற கோரிக்கையுடன் மக்களைத் திரட்டிப் போராடியது. இக் குழுவினர் மக்களின் சுயவிருப்ப உழைப்பின் மூலம் 20 கி.மீ. தொலைவுக்கு சாலை அமைத்துள்ளார்கள். தூர்ந்து போன குடிநீர்க் கிணறுகளைச் சீரமைத்தும் புதிய கிணறுகளைத் தோண்டியும், பள்ளிக்கூடங்களை நிறுவியுமுள்ளார்கள். நிதியில்லை என்று அரசு புறக்கணித்து இழுத்து மூடிவிட்ட கண்டபாஷரி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தை அவர்கள் சீரமைத்து உள்ளூர் மருத்துவர்களைக் கொண்டு மக்களுக்குச் சிகிச்சையளிக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, காடுகளை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலங்களை, நிலமற்ற பழங்குடியினருக்கு விநியோகிக்கச் சட்டம் கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்படாத நிலையில், கண்டபாஷரி,பன்ஷ்பேரி கிராமங்களை அடுத்துள்ள புறம்போக்கு நிலங்களை, நிலமற்ற விவசாயிகளுக்கு விநியோகித்துள்ளார்கள். மக்கள் சக்தியின் பலத்தை லால்கர் மக்கள் உலகுக்குக் காட்டுகிறார்கள். இழப்பதற்கு உயிர்களை தவிர எதுவுமற்ற மக்கள் மிகப்பெரிய அடக்குமுறையாளனான இந்திய அரசுக்கு எதிராகப் போராடுகிறார்கள். தங்களைப்பற்றிய எதுவித அறிவோ அக்கறையோ அற்ற இந்திய அரசுக்கும் ஊடகங்களுக்கும் தங்களது எழுச்சியை அறிவித்தபோது மாவோவாதப் பயங்கரவாதம் என்று சொல்லியது அரசும் ஊடகங்களும். அரச இயந்திரத்தின் சகல அம்சங்களும் முடக்கப்பட்ட பகுதிகளை விடுவிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கிறார்கள். பொறுக்க முடியாத இந்திய அரசு அப்பகுதிகளை விடுவிப்பதற்கான இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியபோது ஊடகவியலாளர்களோ, மனித உரிமை அமைப்புக்களோ என எதுவும் லால்கர் பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. மாவோவாதிகளை ஒழிக்கிறோம் என்ற போர்வையில் அப்பாவிப் பழங்குடி மக்கள் மீது போலிசும் இராணுவமும் வன்முறையை ஏவியபோது மாவோவாதிகள் மக்கள் நலன் கருதி அப்பகுதியிலிருந்து வெளியேறுகிறோம் என்று அறிவித்துவிட்டு வெளியேறிய போது லால்கரை அரசு தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாக அறிவித்தபோது அது எல்லா ஊடகங்களிலும் வந்தது.

இத்தனைக்கும் லால்கரில் என்ன நடக்கிறது என்பது யாருக்குமே தெரியவில்லை, உண்மையில் தெரிய வேண்டியதில்லை. தெரிய வேண்டிய தெல்லாம் லால்கர் மீண்டும் அரசு கட்டுப்பாட்டுக்குள் வந்ததுதான் என இந்திய அரவசும் ஊடகங்களும் முடிவு செய்துவிட்டபடியால் உண்மை வெளியேவரக் காலமெடுத்தது.

ஜவஹர்லால் பல்கலைக்கழகத்தை சேர்ந்த 9 மாணவர்கள் லால்கர் பகுதிக்கு அப்பகுதியில் நடந்து வரும் மக்களின் போராட்டத்தை குறித்து ஆய்வு செய்யச் சென்று வந்து அங்கு



நேரில் கண்டவற்றை ஒரு முன்வரைவு அறிக்கையாக வெளியிடும் வரை பல உண்மைகள் மறைக்கப்பட்டன. அவ்வறிக்கையிலிருந்து சில பகுதிகள்:

"அப்பகுதியில் காவல்துறையினரால் நடத்தப்பட்ட கொடுமைகளை வரலாற்று ரீதியாக வரிசைக்கிரமமாக மக்களிடம் கேட்டறிந்த பின்பு, நவம்பர் மாதம் நடந்த சம்பவம் ஒரு தனித்துவமானதாக எங்களால் கருத இயலவில்லை. இது, 2000ம் ஆண்டு முதல் அப்பகுதியில் உள்ள மக்கள் மீது நடத்தப்பட்ட மோசமான அரசு பயங்கரவாதம் மற்றும் காவல்துறை கொடுமைகளின் தொடர்ச்சியேயாகும். மக்களிடம் இருந்து வெளிப்படும் எதிர்ப்புணர்வே தற்போது காணப்படும் தனித்துவம் ஆகும். காவல் துறையினர் மக்களை எவ்வாறு சித்ரவதை செய்தனர் என்பதையும், தேடுதல் வேட்டை என்ற பெயரில் இரவு நேரம் வீட்டை உடைத்து நுழைந்தனர் என்பதையும் எவ்வாறு மக்களை அடித்து உதைத்தனர் என்பதையும் தனது கால்நடையை தேடுவதற்காக வேண்டி இரவு நேரத்தில் வெளியே உலவுவது தடைசெய்யப்பட்டிருப்பதையும்,

தொடர்ச்சி 15ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மாவை வரோதயனுக்கு கொழும்பில் அஞ்சலிக் கூட்டம்

## மனிதத்திற்குள் வாழ்ந்த மாவை வரோதயன்

மனித நேயத்தோடும் சமூக அக்கறையோடும் தூர நோக்குச் சிந்தனையோடும் படைப்பாளியாக ஈழத்து இலக்கியப் பரப்பில் திகழ்ந்தவர் மாவை வரோதயன். வெறும் புகழுக்கும் பணத்திற்கும் சோரம்போன ஒரு இலக்கியவாதியாக அல்லாது இன்றைய சமூக அமைப்பின் மீது கடும் கோபம் கொண்டு அதனை அம்பலப்படுத்துபவராகவும் எதிர்ப்பவராகவும் மாவை இருந்து வந்தார். அவர் எளிமையும் முன் மாதிரியும் கொண்டவராகத் திகழ்ந்தார். மக்களோடு மக்களாக வாழ்ந்து தனது இலக்கிய எழுத்துப் பணியையும் சமூகச் செயற்பாட்டையும் கொண்டவராக இருந்த மாவை வரோதயனின் இறப்பு நம் எல்லோருக்கும் பேரிழப்பாகும்.

இவ்வாறு 11.10.2009 அன்று கொழும்பில் தேசிய கலை இலக்கியப் பேரவை மாவை வரோதயனுக்கு நடாத்திய அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய கலாநிதி சி.சிவசேகரம் தனது தலைமை உரையில் கூறினார். வரவேற்புரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் சோ.தேவராஜா நிகழ்த்தினார். மாவையின் இழப்பு தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும் தாங்க முடியாத இழப்பா கும் என்று கூறினார்.

சி.கா.செந்திவேல் தனது அஞ்சலி உரையில் மாவை வரோதயனோடு கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பழக முடிந்தது. இறுதி ஆண்டுகளில் மிக நெருக்கமாகவும் இருந்து வந்தார். அவர் யாவற்றுக்கும் முன்னால் நல்ல மனிதனாக இருந்தார். இன்றைய தமிழ்ச் சூழலில் அதன் பழைமைவாத எல்லைகளைத் தாண்டக் கூடிய ஒருவராலேயே நல்ல மனிதனாக வாழ முடியும். அத்தகைய நல்ல மனிதர்கள் தான் சமூகத்திற்கும் பரந்து பட்ட மக்களுக்கும் தமது ஆற்றல்கள் மூலம் பணியாற்ற முடியும். அந்தவகையிலே மாவை வரோதயன் என்ற நல்ல மனிதனால் தனது குடும்ப சூழல் விதித்த எல்லைகளைத் தாண்டி மனிதநேயனாகி இறுதிக் காலத்தில் ஒரு மக்கள் இலக்கியப் படைப்பாளியாகி நிற்க முடிந்தது. பழைமைவாதக் கருத்தியல்களுக்கும் அவற்றின் பண்பாட்டுக் கோலங்களுக்கும் இலக்கிய குஞ்சங்கட்டி அவற்றையே தமிழர்களின் இலக்கியம் எனக் கொண்டாடுவதும் இலகுவான விடயங்கள். ஆனால் சாதாரண மக்களின் வாழ்வியலையும் அவற்றில் புதைந்துள்ள முரண்பாடுகள் துன்ப துயரங்கள் அவற்றுக்கான காரண காரியங்கள் பற்றி இலக்கியம் படைப்பது சிரமத்தின் மேல் சிரமமானதாகும். அந்த வகையில் மாவை அச்சிரமமான பணியினை எழுத்தாலும் செயலாலும் முன்னெடுத்து வந்தார். அத்தகைய ஒரு பெறுமதி மிக்க மனித நேயப்படைப்பாளியை மக்கள் இலக்கியவாதியை இழந்திருப்பது நமது சோகமாகும். அவ ருக்கு எமது செவ்வஞ்சலியைத் தெரிவித்து அவரது குடும்ப த்தினருக்கு அனுதாபத்தையும் ஆறுதல் வார்த்தைகளையும் தெரிவிப்பதாக சி.கா.செ தனது உரையில் குறிப்பிட்டார். மேலும் அவ்வஞ்சலிக் கூட்டத்தில் வி.எஸ்.இதயராசா தனது அஞ்சலி உரையில் மாவையின் வேப்பமரம் சிறுகதைத் தொகுதியினை முன்வைத்து அதனுள் உள்ளடங்கிய அருமையான கருத்துக்கள் பற்றியும் படைப்பின் வீச்சுப் பற்றியும் எடுத்துக் கூறினார். அத்தகைய படைப்பாளி நம்மிடையே இல்லாதது பெரும் இடைவெளி மிகுந்த சோகத்தைத் தருவதாகக் கூறினார்.



இவ் அஞ்சலிக் கூட்டத்தில் "எங்களுடன் இன்னும் வாழும் மாவை வரோதயன்" என்னும் நினைவு மலரும் தேசியகலை இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்டது. பலதுறைகளைச் சேர்ந்தவர்கள் இவ் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு அஞ்சலிக் குறிப்புரைகள் வழங்கினர். நினைவு நூலின் முதற்பிரதியை கவிஞர் ஜின்னாஹ் செரிப்புதீன் பெற்றுக் கொண்டார். மாவையின் உருவப்படத்திற்கு மகவம் வேல் அமுதன் மலர்மாலை அணிவிக்க சபையோர் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

கவிஞர் ஜின்னா செரிப்புதீன் மகவம் வேல் அமுதன், தகவம் வசந்தி தயாபரன், கவிஞர் மா.குலமணி, செ.சக்திதரன் ஆகியோர் அஞ்சலிக் குறிப்புரைகள் வழங்கினர். சோ.தேவராஜா மாவையின் கவிதைகள் சிலவற்றை ஓசை நயத்தோடு வாசித்துக் கொண்டார். பேரவையின் சார்பில் ம.மிதுன்ராகுல் நன்றியை வழங்கினார்.

# தோழர் நவம் மறைவின் 5ஆவது ஆண்டு நினைவாக!



புதிய- ஜனநாயக கட்சியின மத்திகுழு அரசியல் குழு ஆகிய வற்றின் தலைமை உறுப்பினராக இருந்து மறைந்தவர் தோழர் நவம் (சி.நவரட்ணம் யாழ்ப்பாணம்). அவரது ஐந்தாவது வருட நினைவு 08.10.2009 ஆகும். பொதுவுடைமை இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கிலே அறுபதுகளின் நடுக் கூறானது முக்கியமான ஒரு காலப் பகுதியாகும். சர்வதேசிய தேசிய நிலைகளில் பொதுவுடைமை எழுச்சிகளும் புரட்சிகளும் முன்னெழுந்து நின்ற காலமாகும். இக்கட்டத்திலே வடபுலத்தில் பல புரட்சிகர இளைஞர்கள் தம்மை கம்யூனிஸ் டுக்களாக மறுவார்ப்புச் செய்து கொண்டனர். உலக நோக்காலும் நடைமுறைக் கொள்கை போராட்டங்களாலும் அவ் இளம் கம்யூனிஸ்டுக்கள் உருக்குப் போன்று உறுதி பெற்றுக் கொண்டனர். ஆரம்பத்தில் இப்பொதுவுடைமைப் பயணத்தில் பங்கு கொண்டிருந்த போதிலும் சிலர் அதிலிருந்து பின்வாங்கி தம்மைச் சராசரி வாழ்வுக்குள் வைத்துக் கொண்டனர். அதேவேளை மாக்சிசலெனினிசத் தத்துவத்தால் கொள்கை யால் நடைமுறைப் போராட் டங்களால் குறிப்பிட்ட தோழர்கள் தம்மை மீண்டும் மீண்டும் புடம் போட்டுக் கொண்டு முன்னேறிச் சென்றனர். போராட்டக் களங்களிலே முன்னணியில் நின்று பொலீஸ் தாக்குதல் சிறை சித்திரவதைகள் பலவற்றை அனுபவித்து சொந்த வாழ்வில் பல கஷ்டங்கள்பட்டு இறுதி வரை மக்களோடும் கட்சியோடும் வாழ்ந்து வந்தவர்களாகினர். கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு வந்து தமக்குரிய வரலாற்றுக் கடமைகளை முன்னெடுத்தும் சென்றனர்.

அத்தகையவர்களில் ஒருவராக வாழ்ந்து மறைந்தவர் தோழர் நவம். அவருடனான அரசியல் வாழ்வின் அனுபவங்கள் பல்வேறு பாடங்கள் கொண்டவை. அவை நமது கட்சி என்ற பரந்த குடும்பத்தில் பன்முகப் பட்டறிவுகளை வழங்கிச் சென்றன. புரட்சிகர உணர்வும் சுயநலமற்ற வாழ்வும் மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை மீதான நம்பிக்கையும் அவரிடம் இறுதிவரை உயிர்ப்புடன் இருந்து வந்தமை அவருக்குரிய புரட்சிகர சிறப்பாகும். தோழர் நவம் மறைவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே இரண்டு விடயங்களை அடிக்கடி வற்புறுத்தி கலந்துரையாடுவர். ஒன்று மக்கள் மத்தியிலான தமது வேலைமுறைகளை விஸ்தரிப்பது இரண்டாவது புதிய தலைமுறையினரை பயிற்றுவித்து தலைமுறை இடைவெளி ஏற்படாதவாறு தலைமையை விரிவாக்க வேண்டும். அது தோழர் மாஓவின் கூற்றுக்கு இணங்க உறுதியாய் இருந்து தியாகம் எதற்கும் அஞ்சாது வெற்றியை வென்றெடுக்கும் புரட்சிகர தலைமையாக கட்டியெழுப்பப் படுவது அவசியமெனக் கண்டார். தோழர் நவம் கொண்டிருந்த புரட்சிகர பெரு விருப்புகளை நாம் சமகால சூழலில் எல்லாவித இடர்கள் மத்தியிலும் கொள்கையாலும் நடைமுறையாலும் முன்னெடுத்துச் செல்வோம். அதுவே தோழர் நவத்திற்குரிய புரட்சிகர நினைவாகும்.

- சி.கா.செ-

லால்கார்

14ம் பக்க தொடர்ச்சி

ஒவ்வோர் குடும்பத்தில் இருந்தும் ஏதோ ஒரு நபர் 'மாவோயிஸ்ட்' என்று குறிப்பிடப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதையும், 90 வயதான தேஷபந்த் பகுதியை சேர்ந்த வயது முத்தவர் 2006ஆம் ஆண்டில் காவல் துறையினரால் அடித்து கொலை செய்யப்பட்டிருப்பதையும் குறித்து மக்கள் எங்களுக்கு நடைமுறை காட்சியாக சித்தரித்து காட்டினர். 'உடல் பரிசோதனை' என்ற காரணம் காட்டி இளம் சிறுமிகள் காவல் துறையினரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். இரவு நேரத்தில் 'தேடுதல் வேட்டையின் போது பாலினத்தை நிருபணம் செய்ய உள் உறுப்புகளை காண்பிக்க நிர்பந்தப்படுத்த ப்பட்டனர். எங்களை பெரிதும் கவர்ந்தது என்னவெனில் காவல்துறையினரின் ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களின் குழுவினரும், கிராம மக்களும் கடந்த 7 மாதமாக லால்கரில் நடைமுறைப்படுத்தி வரும் மாற்று வளர்ச்சி திட்டம் குறித்த செயல்பாடே ஆகும். மக்களிடம் நாங்கள் கண்ட ஆர்வம் மிக அபரிதமாக இருந்தது. முதன் முறையாக அவர்கள் ஓட்டுக்களை குவித்து செல்லும் அரசியல் கட்சிகளின் ஒரு பிரிவாக இல்லாமல் தமக்கே சொந்தமான ஒரு குழுவின் பங்காக இருந்தனர். அரசு பயங்கரவாதத்திலிருந்து விடுதலை பெற்ற வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தனர். தமக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை தாமே கட்டி எழுப்பினர். பல்வேறு கிராமங்களில் தங்கியிருந்த பலர் ஒரு பொதுவான கருத்தை வெளிப்படுத்தினர். 'தமக்கு முதன்முறையாக இப்போதுதான் சுதந்திரம் கிடைத்திருக்கிறது' - என்பது தான் அது. அவர்களுடைய போராட்டம் பல ஆண்டுகளாக அவர்கள் சுரண்டபடுவதற்கும், துன்புறுத்தப்படுவதற்கும் அவர்கள் மீது பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுவதற்கும், அவர்கள் உரிமை மறுக்கப்படுவதற்கும் எதிராக இருந்தது. இவ்வகையில் இது ஒரு வரலாற்று பூர்வமான போராட்டமாகும். 'அராஜகம்' என்று கருதப்படுவது யாவும் உண்மையில் விடுதலைக்கான போராட்டம் தான் என்று நாங்கள் உறுதியாக உணருகிறோம். ஊடகங்கள் யாவும் லால்கருக்கு மீண்டும் சென்று திரும்ப வேண்டும் என நாங்கள் அழுத்தமளிக்க விரும்புகிறோம். இந்த இயக்கம் அரசின் செயலற்ற தன்மையால் ஏற்பட்டுள்ள மக்களின் மிகவும் ஏழ்மையான சமூக பொருளாதார நிலைமையை ஆதாரமாக கொண்டுள்ளது. மக்களின் இந்தப் போராட்டத்திற்கு எதிராக அரசு திருப்பித் தாக்கவே செய்யும்.

உறுதியாக இருக்கும் மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த ஆணையைப் பெற்ற மத்திய ரிசர்வ் காவல் படை மீண்டும் திரும்பக்கூடும். மக்கள் இயக்கத்தை ஒடுக்குவதற்கு கொடூரமான கேவலமான கோப்ரா படையினரும், கிரே வேட்டை நாய்களும் தேவை என மாநில அரசாங்கம் வெட்கமின்றி கோரிக்கை வைத்துள்ளது. அது மிக துரதிஷ்டமானதும், கண்டிக்கத்தக்கதும் ஆகும். பெருமளவிலான அரசு பயங்கரவாதம் குறைவளர்ச்சி, ஊழல் ஆகியவற்றிற்கு. எதிரான மக்களின் கோபம் மிகவும் சரியானதே. அதுபோன்றே அதற்கு எதிரான நீண்ட காலமாக எதிர்பார்த்த தாக்குதலும் சரியானதே.

இந்தப் பின்னணியில் லால்கரை எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பதே எம்முன்னுள்ள கேள்வி. மக்கள் குழுவின் முக்கிய தலைவராகக் கருதப்படும் ஷத்ததார் மாஹாத்தோ (Chattradar Mahato) அரச பயங்கரவாதத்தால்

## மக்கள் போராட்டத்திற்கு முன்னுதாரணம்

இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவளிப்பதும் உதவுவதும் லால்கரில் பொதுவாகக் காணக்கூடிய ஒரு காட்சி. இவரை மாவோவாதப் பயங்கரவாதி என்று சொல்கிறது இந்திய அரசு. அதேவேளை மாவோவாதிகள் அப்பாவி மக்களைக் கொல்வதாகவும் மக்களைத் துன்பப்படுத்துவதாகவும் சொல்கின்றன இந்திய அரசும் ஊடகங்களும். இவர்கள் சொல்வது சரியாக இருந்தால் மாஹாத்தோ மக்களால் வெறுக்கப்படுபவராக இருக்க வேண்டும். ஆனால் அவரோ லால்கர் மக்களால் விரும்பப்படுபவராக அவர்களது உரிமைகளுக்காகப் போராடுபவராக இருக்கின்றார். மக்களது உரிமைகளுக்காகப் போராடுவது என்பது இந்திய அரசுக்கும் ஜனநாயகத்தை தாங்குகிற நான்காவது தூணாகச் சொல்லப்படுகின்ற முதலாளித்துவ ஊடகங்களிற்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. அதனால் தான் மக்கள் போராட்டங்கள் பயங்கரவாதமாகச் சித்தரிக்கப் படுகிறது.

லால்கரில் நடந்ததோ நடந்துகொண்டிருப்பதோ மிகவும் தனித்துவமான புதியதொரு போக்காகும். கோட்பாட்டு ரீதியிலான திட்டமிட்ட வரையறைகளின் அடிப்படையில் மக்கள் எழுச்சி உருவாகவில்லை. மாவோதிகளின் துணையுடன் மிக எளிமையான லால்கரின் பழங்குடி மக்கள் தங்களது உரிமைகளை வேண்டி எழுந்து நின்றார்கள். இது வெறுமனே மாநில அரசின் அதிகார அடுக்குகளை மட்டும் அசைத்துவிடவில்லை. இந்திய அரசாங்கத்தின் அதிகாரத்தையே கேள்விக்குட்படுத்தியது. இந்தியாவில் இருப்பது ஜனநாயகமல்ல பணநாயகமே என்பதை உரத்துச் சொன்னது. லால்கர் மக்களின் போராட்டம் 'அமைதியாக' மற்றும் 'வன்முறையான' போராட்டங்களுக்கிடையிலான வேறுபாடுகளை இல்லாதொழித்தது. அத்தோடு 'சட்டத்தின் ஆட்சி' என்ற அரசியல் சொல் லாடலுக்கான புதிய வரைவிலக்கணங்களை தேடவேண்டி வந்தது. இவ்வளவு காலமும் மக்களின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் போராடிய சமூக இயக்கங்களுக்கான புதிய திசைவழியை லால்கர் காட்டியிருக்கின்றது. ஜனநாயக எல்லை எனப்படுவதனுள் நின்று கொண்டு அரசின் கொடுமையான அடக்குமுறைக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்ற மக்கள் இயக்கங்களுக்கு, எதையுமே மக்களுக்காகச் செய்யாத ஒரு அரசிடமிருந்து வன்முறையைத் தவிர எதையுமே எதிர்பார்க்க முடியாது என்பதை தெளிவாகச் சொல்கிறது லால்கர். ஜனநாயக ரீதியிலான மக்கள் போராட்டங்களுக்கான பதிலை அரசு போலிஸ் அராஜகம் மூலம் கூற முனைந்ததன் விளைவு மக்கள் போராட்டம் தவிர்க்க முடியாமல் வன்முறையை தற்காப்புக்காக பயன்படுத்தும்படி தள்ளப்பட்டது. இதை ஊடகங்களும் மற்றும் பலரும் இந்திய பாதுகாப்புப்படையினருக்கும் மாவோவாதிகளிற்கும் இடையிலான யுத்தத்தில் மக்கள் இடையில் அகப்பட்டுக்கொண்டுள்ளதாகவும் மாவோவாதிகள் மக்களை மனிதக் கேடயங்களாக வைத்திருப்பதாகவுமே விளங்கிக்கொள்கிறார்கள். இதிலேயே அடிப்படைத் தவறு நேர்ந்துவிடுகிறது. லால்கர் மக்கள்தான் இந்திய அரசுக்கும் இந்திய பாதுகாப்புப்படையினருக்கும் எதிராக போராடுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை மாவோவாதிகள் வழங்குகிறார்கள்.

ஏகலைவா

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

ஒக்ரோபர் 2009

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org

## யாருக்கு வலை வீசுகிறது தமிழ் நெற்?

TamilNet


தமிழ் நெற் என்ற விடுதலைப் புலிகட்குச் சார்பான இணையத்தளம் 2006 வரை ஓரளவு நம்பகரமான முறையிலேயே தகவல்களை வெளியிட்டு வந்தது. 2007 முதல் விடுதலைப் புலிகட்குச் சிறிதும் பாதகமான செய்திகளை அறவே தவிர்த்து வந்தது. 2008 முதல் விடுதலைப் புலிகளின் இறுதி வீழ்ச்சிவரை தமிழ் மக்களுக்குப் பொய் நம்பிக்கையூட்டுகிற முயற்சிக்கு உடந்தையாகவே தமிழ் நெற் செயற்பட்டது.

பிரபாகரனின் சாவை ஏற்பதற்கு இதுவரை தமிழ்நெற் ஆயத்தமாயில்லை என்பது கவனிக்கத் தக்கது. எனினும் "நாடு கடந்த தமிழீழ அரசை" இதுவரை எதிர்த்து வந்த அந்த இணையத்தளம் இப்போது அந்தச் சாதகமான கருத்துக்களையும் வெளியிடத் தொடங்கிவிட்டது. இது 'குடும்பத்தில் சொத்துத் தகராறு தீர்க்கப்பட்டு வருவதைக் குறிக்கிறதா என்று நிச்சயமில்லை. எனினும் இன்னொரு போக்கும் உருவாகியுள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்பை எப்போதுமே அடக்கி வாசித்து இடையிடை இடதுசாரி எதிர்ப்பைக் காட்டிய போதும், நேர்மையான இடதுசாரிகளை, அண்மை வரை, தமிழ் நெற் வலித்து தாக்கவில்லை. அண்மையில் வெளியான ஒரு கட்டுரையில், மாக்ஸிய லெனினியவாதிகள் ஐ.நா. "சபையின் உள்ளக சுயநிர்ணயத்தை" மட்டுமே ஏற்கிறார்கள் என்றும் "நல்ல இடதுசாரிகள்" பலர் தமிழீழப் பிரிவினையை ஏற்கிறார்கள் என்றும் ஒரு புலுடாவை அவிழ்த்து விட்டுள்ளது. இதற்கான காரணம் என்ன?

தமிழ்த் தேசியவாதத்தின் பொட்டுக்கேடுகள் பற்றியும் மாக்ஸிய லெனினியவாதிகள் இதுவரை கூறிவந்த கருத்துக்களின் நியாயம் பற்றியும் புலம்பெயர்ந்த தமிழர் [illegible] கண்டு நடுங்குகிறார்களா? அதை முளையிலேயே கிள்ளிவிடும் முயற்சியா? [illegible] காலம் கடந்து விட்டது. இவர்களுடைய ஏகாதிபத்தியச் சார்பான நடவடிக்கைகள் பற்றிய கேள்விகள் இனிமேல் உரத்துக் கேட்கப்படப் போகின்றன.

நிலவுக்கு ஒளித்து பரதேசம் போக முடியாது. பிறரைக் குற்றங் கூறித் தேசியவாதம் தன்னுடைய குற்றங்களை மூடி மறைக்க இயலாது. இவ்விதமான போக்கு எஞ்சியிருக்கிற கொஞ்ச நம்பகத் தன்மையையும் இல்லாமலே செய்து விடும் என்பதை உணரவேண்டும்.



ஐ.நா. சபை பெரிய நாடுகளை ஒரு விதமாகவும் சிறிய நாடுகளைவேறு விதமாகவும் நடாத்தி வருகின்றமை உலகநாடுகளிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தி வருகின்றது. ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் ஐ.அமெரிக்காவும் அவர்களது கூட்டாளி நாடுகளும் ஆக்கிரமித்தன. இதற்கு ஐ.நா. எத்தகைய எதிர் நடவடிக்கைகளை எடுத்தது? கோசோவாவில் அமெரிக்க நேட்டோ படைகள் நேரடியாக இறங்கி சேர்பியாவில் இருந்து கோசோவாவைப் பிரிக்க ஐ.நா கருவியாகியது. பாலஸ்தீனத்தில் இஸ்ரேலிய கொடுங்கோண்மைக்கு எதிராக ஐ.நா கையாலாகாத ஒன்றாக இருந்து வருகிறது. ஈரானை வடகொரியாவை ஐ.நா. மூலம் அடிபணிய வைக்க அமெரிக்க மேற்குலம் முன்நிற்கிறது. இவற்றை எதிர்த்த ஒரு அடையாளமாகவே ஐ.நா. சின்னத்தின் மீது சிகப்புச் சீந்தை வீசப்பட்டது. இது ஐ.நா.வின் பெயரில் உலக மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றிய ஆயிரம் கதைகளை நினைவூட்டும்.



இந்தக் காட்சி ஆபிரிக்காவில் அல்ல. இலங்கையில் வவுனியா மெனிக்பாம் முட்கம்பி வேலிமுகாம் ஒன்றில் ஒரு இளம் பெண் தன் குழந்தையுடன் தண்ணீர் எடுத்து வருகிறார். இப்படி எத்தனை இளம் தாய்மார் தமது பச்சிளம் குழந்தைகளுடன் முகாம் வாழ்க்கை. வாழ்ந்து வருகிறார்கள். இது தான் மகிந்த சிந்தனையின் மனிதாபிமானம் பௌத்ததர் மத்தின் நீதி. மும்மணிகளால் ஆசீர்வதிக்கப்பட்ட நாட்டின் அவலம். சிங்கள சகோதரர்களே! உங்கள் சகோதரிகளுடன் இது போன்ற தமிழ்ச் சகோதரிகளின் அவலநிலையை ஒப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுது உண்மைகள் உறைக்கச் செய்யும்.



உலகின் வறுமை சுமார் 100 கோடி மக்களை வாட்டி வதைத்து வருகிறது. இதில் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்களே பெரும்பான்மையினர். இங்கே காண்பது ஆபிரிக்க குழந்தைகள் உணவிற்காக தட்டுகளுடன் ஏங்கிருக்கின்ற காட்சியாகும். இவ்வறுமையின் கொடுமைக்கு கொலனித்துவ முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளே காரணமாவர். இவர்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதே வறுமையை நிரந்தரமாக ஒழிக்க உள்ள ஒரே வழியாகும்.

அண்மையில் தென்மாகாணசபைத் தேர்தல் நடப்பதற் ஆறு நாட்கள் முன்பாக அம்மாகாணத்தின் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 2000 வேலையற்ற பட்டதாரிகள் மாத்தளை பஸ் நிலையத்தின் முன்பாக சத்தியாகிரகத்தில் ஈடுபட்டனர். இவர்களைக் கலைக்க பொலீஸ் அதிகாரிகள் மாத் தறை நீதிவான் நீதி மன்றத்தில் ஆணை கேட்ட போதும் நீதிமன்றம் மறுத்துவிட்டது. வேலையற்ற பட்டதாரிகள் சங்கமே இவ் எதிர்ப்பு சத்தியாக்கிரகத்தை நடாத்தியது. இது தான் ஜநாதிபதியின் நேரடிக் கவனத்தில் முன்னெடுக்கப்படும் தென் மாகாண அபிவிருத்தி.



வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.